அகதிகள் படகுகள் கவிழ்ந்து 700 க்கும் மேற்பட்டோர் சாவு

பக். 14-15

விலை ரூபா 20

பக்கங்கள் 28

# உதயன்

34c - 27c
ஓரளவு மேக மூட்டம்

சுடர் 31 | கதிர் 187 | வள்ளுவர் ஆண்டு 2047 | வைகாசி 18, செவ்வாய்க்கிழமை 31.05.2016

## வாக்காளர்களின் பெயர்ப் பதிவில் அக்கறையின்றி அரசியல் கட்சிகள்

### தமிழ் அரசுக் கட்சி மாத்திரமே முகவர்களை நியமித்துள்ளது

யாழ்ப்பாணம், மே 31
வாக்காளர் பெயர்ப் பதிவு நடவடிக்கைகளில் அரசியல் கட்சிகள் அக்கறையற்று இருக்கின்றன. ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுக்கும், தமது முகவர்களை நியமிப்பதற்கான அதிகாரங்கள் அரசியல் கட்சிகளுக்கு இருக்கின்றபோதும், வடக்கு மாகாணத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகள் முகவர்களின் பெயர்களைத் தேர்தல்கள் திணைக்களத்துக்கு வழங்கவில்லை என தேர்தல்கள் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-
தேர்தல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு கட்சிக்கும், முகவர்களின் பெயர்களை வழங்குமாறு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டபோதும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி மாத்திரமே முகவர்களை நியமித்துள்ளது. அதிலும் வவுனியா மாவட்டத்துக்கு தமிழ் அரசுக் கட்சியும் முகவர்களை பக்.23

### முதலாம் தரத்துக்கான மாணவர் அனுமதிக்கு விண்ணப்பம் கோரல்

கொழும்பு, மே 31
2017 ஆம் ஆண்டுக்கான அரச பாடசாலைகளுக்கு முதலாம் தரத்தில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக விண்ணப்பங்கள் விநியோகிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
விண்ணப்பங்கள் அல்லது அவை பக்.23

முச்சந்தி முரளி



வந்ததும் வராததுமா நல்ல வேலை செய்திருக்கிறார் கண்டியளே...

# கிழக்கு முதல்வருக்கான முப்படைத் தடை நீக்கம்

### நாடு திரும்பிய ஜனாதிபதி அதிரடி உத்தரவு

யாழ்ப்பாணம், மே 31
கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹபீஸ் நசீர் அஹமட், முப்படைகளினதுதளங்களுக்குள் நுழைவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை உடன் நடைமுறைக்கு வரும் வகையில் நீக்கப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜயநாத் ஜயவீர தெரிவித்தார்.
பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிறப்பித்த



உத்தரவுக்கமையவே, இந்தத் தடை நீக்கப்பட்டுள்ளது. இதற்குக் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்துள்ளார்.
சம்பூர் மகா வித்தியாலயத்தில் கடந்த வாரம், நடந்த நிகழ்வில், கடற்படை அதிகாரி ஒருவரை, கிழக்கு மாகாண முதலமைச்சர் கடுமையாகத் திட்டி அவமானப்படுத்தினார் எனக்கூறி, முப்படைகளின் பக்.23

## வெள்ளிக்கு முன் காணிகள் இனங்காணப்பட வேண்டும்

### அதிகாரிகளுக்கு மைத்திரி அறிவுறுத்து



கொழும்பு, மே 31
வடக்கில் இடம்பெயர்ந்துள்ள மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பில், அவர்களுடைய காணிகளை இனம்காணும் செயற்பாட்டினை எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்குள் நிறைவுக்கு கொண்டுவருமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார். பக்.23

### சாதாரண தர பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், மே 31
ஜீ.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் காலம் எதிர்வரும் ஜூன் மாதம் 10 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக மாகாணக் பக்.24

## மருத்துவர்கள் இன்று பணிப் புறக்கணிப்பு

### வடக்கில் ஏற்பாடுகள் இல்லை

யாழ்ப்பாணம், மே 31
நாடளாவிய ரீதியில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணி தொடக்கம் நண்பகல் 12 வரை மருத்துவர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ள பக்.24

### வடக்கில் 3,795 பேருக்கு சிறுநீரக பாதிப்பு

யாழ்ப்பாணம், மே 31
வடக்கு மாகாணத்தில் 3 ஆயிரத்து 795 பேர் சிறுநீரகப் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். அதிகளவிலானோர் வவுனியா பக்.23

## கிணறுக்கு வெட்டிய கிடங்கில் தவறி வீழ்ந்து மாணவன் சாவு

### வவுனியாவில் துயரச் சம்பவம்

வவுனியா, மே 31
பொதுக்கிணறு கட்டுவதற்காகத் தோண்டப்பட்ட 8 அடி கிடங்கில் தவறி விழுந்து 6 வயதுப் பக்.23



## ஒருங்கிணைப்புக் கூட்டங்களில் தேவையற்ற பேச்சைத் தவிருங்கள்

### மக்கள் நலன்சார்ந்த திட்டங்களை ஆராயவேண்டும் என்கிறார் மாவை

வலி.வடக்கு, மே 31
ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மக்கள் நலன்சார் திட்டங்களையும் அபிவிருத்திகளையும் மட்டும் பேசுங்கள். அதனை விடுத்து, ஊடகங்களில் இடம் பிடிக்க வேண்டும் என்பதற்காகத் தேவையற்ற பேச்சுக்கள் இடம் பெறுவது தவிர்க்கப்படவேண்டும்.
இவ்வாறு தெரிவித்தார் வலி.வடக்கு பக்.23

## தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு ஒதுக்கிய நிதியில் கைவைத்தது அரசு

### தெற்கில் இரு வைத்தியசாலைகளுக்கு வழங்குவதற்காக

வலி.வடக்கு, மே 31
தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவின் அபிவிருத்திக்கெனக் கடந்த வரவு - செலவுத் திட்டத்தில் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் ஒதுக்கப்பட்ட 1000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் ஒரு பகுதி தற்போது தென்னிலங்கை வைத்தியசாலைகளுக்கும் பகிரப்பட்டுள்ளது. பக்.23

metecno The Specialist


metecno The Specialist
METROOF Total Roofing Solutions
மெட்டெக்னோ லங்கா பிரைவட் லிமிடட்
இல: 734, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021 5 672 672
077 7 842 544
www.metecnolanka.com
METROOF Total Roofing Solutions
METECNO LANKA (PVT) LTD
Sri Lanka Germany Italy Spain Portugal Bulgaria Mexico Chile Columbia India Thailand Vietnam
Digitized by Noolaham Foundation

# இராணுவ மேலாதிக்கத்திலிருந்து இலங்கை விடுதலை காணவில்லை

## வவுனியா மாவட்ட பிரஜைகள் குழு சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், மே 31

இராணுவ மேலாதிக்க மனோ நிலையிலிருந்து இலங்கை விலகி விடுதலை காணவில்லை. இதற்கு கிழக்கு முதலமைச்ருக்கு எதிரான சம்பவத்தை மிகச் சிறந்த எடுகோளாக கருதலாம். சத்துணவு ஊட்டி ஊக்குவிக்கப்படும் சிங்கள பௌத்த மேலாதிக்க மனோ நிலையின் உச்சபட்ச அசிங்கத்தனம் இதுவாகும். இதனைக் கண்டிக்கின்றோம் - இவ்வாறு வவுனியா மாவட்ட பிரஜைகள் குழு தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பு விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

கிழக்கு மாகாண முதலமைச்சர் நசீர் அகமட் கடந்த 20 ஆம் திகதி சம்பூர் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருந்த போது, கிழக்கு முதலமைச்சர் மீதான சம்பூர் கடற்படை அதிகாரியின் மோசமான அத்துமீறல் நடத்தையை வவுனியா மாவட்ட பிரஜைகள் குழு கடுமையாக கண்டிக்கின்றது.

தெற்காசியாவிலேயே அதிக இராணுவ மயப்படுத்தப்பட்ட நாடுகளில் தற்போதும் இலங்கை முதலிடம் வகிக்கிறது. இதனையே இந்தச் சம்பவம் எமக்கு இயம்புகின்றது. இந்த நிலைமையால், ஜனநாயகத்தை முறையாக கோருவோருக்கும் - குடியியல் சமூகத்துக்கும் ஏற்படவிருக்கும் பாதிப்புகள் தொடர்பில் நாங்கள் பெருத்த அச்சமும், கவலையும் கொண்டுள்ளோம்.

மக்களாட்சி முறையிலான தேர்தல் ஒன்றினூடாக தெரிவு செய்யப்பட்டுள்ள கிழக்கு மாகாண முதலமைச்சர் மீதான சம்பூர் கடற்படை அதிகாரியின் மிகவும் மோசமான அத்துமீறல் செய்கையானது, இராணுவ மேலாதிக்க மனோநிலையிலிருந்து இலங்கை விலகி விடுதலை காணவில்லை என்பதற்கு மிகச்சிறந்த எடுகோளாக கருதலாம். சத்துணவு ஊட்டி ஊக்குவிக்கப்படும் சிங்கள பௌத்த மேலாதிக்க மனோநிலையின் உச்சபட்ச அசிங்கத்தனம், குறித்த நிகழ்ச்சியில் அமெரிக்க தூதர் கலந்து கொண்டிருந்த போதிலும் கூட சம்பூர் கடற்படை அதிகாரியால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

பெருந்திரளான மக்களும் குழுமியிருந்த அந்த நிகழ்ச்சியில், மக்களாட்சியின் வலிமையை போதிக்கும் வகையில் கடற்படை அதிகாரியை வார்த்தைகளாலேயே நையப்புடைத்த முதலமைச்சரின் திராணியை வவுனியா பிரஜைகள் குழு மெச்சுகின்றது. முதலமைச்சரின் கடுமையான - நியாயமான இந்த எதிர்வினைக்கு, சிவில் நிர்வாகத்தில் இராணுவத் தலையீடுகளை எதிர்த்து 2009 ஆம் வருடத்துக்குப் பின்னர் மிகத் தீவிரமாக போராடிவரும் நாங்கள் எமது ஆதரவையும் தெரிவிக்கின்றோம்.

சாதாரணமாக, முன்பள்ளி சிறார்களது கலை நிகழ்ச்சிகள் மற்றும் விளையாட்டு விழாக்களுக்கு கூட தம்மை அழைக்குமாறு கட்டாயப்படுத்துதல், அவ்வாறு அழைக்க மறுத்தால் பலவந்தமாக உள்ளே நுழைந்து நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களை தாக்குதல்.

தனிநபர் சார்ந்த சமய சடங்குகள் - வீட்டு வைபவங்களுக்கும், சமூக நிகழ்ச்சிகள் - ஆலய திருவிழாக்கள் உள்ளிட்ட பொது நிகழ்ச்சிகளுக்கும் தம்மிடம் முன் அனுமதி பெற வேண்டும் என்று நிர்ப்பந்தித்தல்.

தனித்திருக்கும் பெண்களின் வீடுகளுக்குள் எவ்வேளையிலும் அடாவடியாகப் புகுதல், தனிநபர் சார்ந்த குடும்ப பிரச்சினைகளில் அநாவசியமாக தலையிடுதல்.

மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கும், சேவைகளை வழங்குவதற்கும் மாவட்டச் செயலாளர்கள், பிரதேசசெயலாளர்கள், கிராம அலுவலர்கள், தன்னார்வத் தொண்டு அமைப்புகள், ஜனநாயக வழிமுறையிலான தேர்தல்கள் ஊடாக தெரிவு செய்யப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், நகரசபை பிரதேச சபைகளின் உறுப்பினர்கள் இருக்கும் நிலையிலும் கூட, குடும்ப விவரப் பதிவுகளையும், தகவல் திரட்டுகளையும் மேற்கொள்ளுதல். அவர்களை தத்தமது கடமைகளைச் செய்யவிடாமல் தடுத்தல்.

இவ்வாறு, வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ்மொழி பேசும் ஒவ்வொரு பிரஜைகளினதும் சுதந்திரத்துக்கும் - பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் விடுக்கும் இராணுவத்தினரின் சர்வாதிகாரப் போக்குகளுக்கு லாடம் கட்டும் வகையில், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும், கிழக்கு மாகாண முதலமைச்சரும் மாகாண சபைகளுக்குள்ள அதிகாரங்களை முழுமையாக செயல்படுத்தி பொது மக்களின் இயல்பு வாழ்க்கைக்கும், பொது அமைதிக்கும் உத்தரவாதத்தை ஏற்படுத்த வேண்டும் என்றும் வினயமாக கோருகின்றோம் - என்றுள்ளது. (ற-ஜ-5)



# மாடு திருடிய சந்தேக நபரின் வீட்டில் கஞ்சா செடிகள் மீட்பு

## வவுனியாவில் சம்பவம்

வவுனியா, மே 31

மாட்டைத் திருடினார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட சந்தேக நபர் ஒருவரின் வீட்டில் நடத்தப்பட்ட சோதனையின் போது, அங்கு கஞ்சாச் செடிகள் மீட்கப்பட்டுள்ளன என்று வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் நேற்றுமுன்தினம் மாலைவவுனியா, உக்கிளாங்குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கடந்த சில வாரங்களாக வவுனியா உக்கிளாங்குளத்தில் மாடுகள் காணாமல் போயிருந்தன. அதையடுத்து பிரதேச மக்களால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

அதன் பிரகாரம் உக்கிளாங்குளம் பிரதேச மக்கள் மாடு திருடினார் என்று குற்றம் சாட்டி சந்தேகத்தின் பெயரில் ஒருவரை மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தனர். இதனை அடுத்து குறித்த சந்தேக நபரை விசாரணை செய்த பொலிஸார் சந்தேகத்தின் பேரில் சந்தேக நபரின் வீட்டில் நேற்றுமுன்தினம் சோதனையை மேற்கொண்டனர்.

இதன் போது வீட்டின் அறையிலிருந்து 4 இல் இருந்து 6 அடி உயரமுடைய இரு கஞ்சாச் செடிகள் வவுனியா பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ஜ-21)

# முல்லைத்தீவில் காணி அற்றவர்களுக்கு இரு இடங்களில் காணி வழங்க பரிந்துரை

முல்லைத்தீவு, மே 31

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணி அற்றவர்களுக்கான காணிகளை இனம் கண்டு அதற்கான பரிந்துரை வழங்க அமைக்கப்பட்ட குழுவினர், இரு இடங்களில் காணிவழங்குவதற்கான முடிவை எட்டியுள்ளனர்.

இது தொடர்பில் கடந்த வாரம் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணி அற்றவர்கள் கடந்த காலங்களில் காணி கோரி விண்ணப்பித்திருந்தனர். அவர்களுக்கான காணிகளை இனம் கண்டு அதற்கான பரிந்துரையை வழங்க ஓர் குழு அமைக்கப்பட்டிருந்தது.

அவ்வாறு அமைக்கப்பட்ட குழுவினர், இரு இடங்களில் காணி வழங்குவதற்கான முடிவை எட்டியுள்ளனர். கூழாமுறிப்பு மற்றும் முறிப்பு பகுதியில் உள்ள கொத்தம்பியாகுளம் பகுதிகளில் இனங்காணப்பட்ட காணிகளையே வழங்கப் பரிந்துரை செய்துள்ளனர்.

குறித்த இரு இடங்களும் முஸ்லிம் மக்களுக்கு காணி வழங்குவதற்கு இனங்காணப்பட்டுள்ளது.

காணி விநியோக பரிந்துரைக் குழுவில் மாவட்டச் செயலர், பிரதேச செயலாளர், வண இலாக அதிகாரி, காணிஉத்தியோகத்தர் மற்றும் கொழும்பின் அதிகாரிகளும் உள்ளடங்கியுள்ளனர். (ற-ஜ-101)

# 4 லட்சம் ரூபா பணத்துடன் புத்தளம் நபர் தலைமறைவு

யாழ்ப்பாணம், மே 31

ஓட்டோ ஒன்றை விற்பதாகத் தெரிவித்து, ஆயுள் வேத வைத்தியர் ஒருவரின் 4 லட்சம் ரூபா பணத்துடன், புத்தளத்தைச் சேர்ந்த தரகு வியாபாரி ஒருவர் தலைமறைவாகியுள்ளார் என்று பருத்தித்துறைப் பொலிஸ்நிலையத்தில்முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளது.

யாழ்.நகரத்தைச் சேர்ந்த ஆயுள் வேத வைத்தியர் ஒருவர், தனது நண்பர் பருதித்துறை தம்பசிட்டிப் பகுதியிலுள்ள ஒருவரிடம் ஓட்டோ ஒன்றை வாங்குவதற்கு விலை பேசியிருந்தார். ஓட்டோவைப் பார்வையிட வருமாறு, தம்பசிட்டிப் பகுதியில் வசித்த புத்தளத்தைச் சேர்ந்த நபர் வைத்தியருக்கும், அவரது நண்பருக்கும் தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் வைத்தியரும் அவரது நண்பரும், ஓட்டோவைப் பார்வையிடுவதற்கு சென்றுள்ளனர். இதன் போது பணத்தையும் கொண்டு சென்றுள்ளனர். புத்தளத்தைச் சேர்ந்த நபர், வைத்தியரிடமிருந்து பணத்தைப் பெற்று, அவரை காத்திருக்குமாறு தெரிவித்து விட்டு பணத்துடன் தலைமறைவாகியுள்ளார் என்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறைப் பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-ஜ-5-26)





# தமிழீழ இனப் படுகொலைக்கு மெரினாவில் நினைவேந்தல்

சென்னை, மே 31

தமிழீழ இனப் படுகொலையின் ஏழாம் ஆண்டு நினை வேந்தல் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் சென்னை மெரினா கடற்கரையில் கண்ணகி சிலையருகே மே பதினேழு இயக்கத்தின் சார்பில் நடைபெற்றது என்று அந்த அமைப்பின் சார்பில் வெளியிடப்பட்ட ஊடகக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் ஆயிரக்கணக்கான பொது மக்களும், தமிழ் உணர்வாளர்களும், மாணவர்களும், தோழமை இயக்கங்கள் மற்றும் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் கலந்து கொண்டனர். நினைவேந்தலுக்காக பல்வேறு படைப்பாளிகள் வழங்கிய ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மேற்கு வங்கத்திலிருந்து நாடகக் கலைஞர் சுசாந்தா தாஸ் போர் மற்றும் படுகொலைகள் குறித்த மையம் எனும் மௌன நாடகத்தை நிகழ்த்தினார். பின்னர் ஈழப் போராட்டம் குறித்த நாடகத்தை மாணவர்கள் நடத்தினர்.

அனைவரும் மெழுகுவர்த்தி ஏந்தி இனப் படுகொலை செய்யப்பட்ட மக்களை நினைவேந்தினர். இனப்படுகொலையை மறக்க மாட்டோம், தமிழீழ விடுதலையை மீட்கும் வரை ஓய மாட்டோம் என்றும் முழக்கங்கள் எழுப்பினர். (ற-ஜ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச புகைத்தலுக்கு எதிரான தினம் மே 31

நீங்கள் எரித்துக் கொண்டிருப்பது
உங்கள் வாழ்க்கையை மட்டுமல்ல
உங்களையே உலகமாக கொண்டிருப்போரின்
அன்பையும் கனவுகளையும் சேர்த்துத்தான்

வகை வகையாய் புகைப்பதனால்
தொகை தொகையாய் இறப்புக்கள்
தொடரணுமா புகைத்தலை
தொலைந்திடுமே உன் வாழ்வு

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை
யாழ். மாநகர சபை

## பேரனின் தாக்குதலினால் படுகாயமடைந்த வயோதிப் பெண் சிகிச்சை பயனின்றிச் சாவு

### காரைநகரில் சம்பவம்

யாழ்ப்பாணம், மே 31

தனது அனுமதி கேட்டு வீட்டுக் குள் நுழையவில்லை என்று தெரிவித்து, மனநிலை பாதிக்கப் பட்டவர் என்று கூறப்படும் இளை ஞன், தனது அம்மம்மாவைத் தலையில் அடித்து தாழ்வாரத் தில் இழுத்துவிட்டிருந்தார். இத னால் படுகாயமடைந்த அவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார்.

எனினும் குறித்த வயோதிபப் பெண் சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்துடன் தொடர் புடைய இளைஞன் கைது செய் யப்பட்டு விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ளார் என்று பொலி ஸார் குறிப்பிட்டனர்.

இந்தச் சம்பவம் காரைநகர் சிவன் கோயிலுக்கு அருகில் 15 நாள்களுக்கு முன்னர் இடம் பெற்றது. இதில் அதே இடத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் சீதாலட் சுமி (வயது - 73) என்பவரே உயிரிழந்தார்.

இது தொடர்பில் விசாரணை களில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது;

குறித்த வயோதிபப் பெண்ணின் மகளின், 27 வயதுடைய மகன் ஒருவர் மனநலம் பாதிக்கப் பட்டுள்ளார். அவரது தாயார் உட்பட எவராவது வீட்டுக்குள் நுழைய வேண்டும் என்றால் அந்த இளைஞனிடம் அனுமதி கேட்க வேண்டும். அவர் அனுமதித் தால் மட்டுமே, வீட்டுக்குள் செல்ல முடியும். அனுமதி கிடைக்காது எனில் வீட்டுக்கு வெளியே தாள் வாரத்தில் அல்லது முற்றத்தில் இருக்க வேண்டும்.

வீட்டுக்குள் இருப்பவர்கள் எவ ராக இருப்பினும் கதவைத் திறந்து வெளியே சென்றால், மறுநிமிடமே வீட்டுக்குள் செல் வதாக இருந்தாலும், அந்த இளை ஞரிடம் அனுமதிகேட்கவேண்டும்.

இந்நிலையில் குறித்த இளை ஞனின் தாயார் கூலி வேலைக் காக 15 நாள்களுக்கு முன்னர் வீட்டுக்கு வெளியே சென்றுள்ள நிலையில், மழை காரணமாக வீடு திரும்ப முடியவில்லை. அன் றைய தினம் வீட்டில் குறித்த இளைஞனின் அம்மம்மா இருந் துள்ளார். தாயார் இல்லாததால் அவர் இரவு உணவைச் சாப்பிடு மாறு கூறியுள்ளார். அந்த இளைஞன் சாப்பிடவில்லை.

இதனால் அந்த இளைஞனுக்கு சாப்பாடு போட்டுக் கொண் டிருந்தபோது, தனது அனுமதி யின்றி சமையலறைக்குள் நுழைந்தார் என்று கூறி கதவின் உட்புறம் பாதுகாப்புக்காகப் போடும் றீப்பைக் கொட்டனால் அம்மம்மாவின் தலையில் தாக் கியுள்ளார். பின்னர் அவரை இழுத்துச் சென்று தாழ்வாரத்தில் விட்டுவிட்ட இளைஞன், வீட்டுக் குள் சென்று விட்டான்.

மறுநாள் இளைஞனின் தாயார் வீடு திரும்பியபோது, தனது தாய் இரத்த வெள்ளத்தில் தாழ்வாரத் தில் அநாதரவாகக் கிடப்பதைக் கண்டு, மீட்டு அவரை வைத்திய சாலையில் சேர்த்தார். அவரது தலையில் சுமார் 25 இழைகள் போடப்பட்டிருந்தன. எனினும் சிகிச்சை பயனளிக்காது நேற் றுக் காலை அவர் உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் திடீர் இறப்பு விசா ரணை அதிகாரி ந.பிறேமகுமார் மற்றும் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். விசாரணை களின் பின்னர் சடலம் உறவினர் களிடம் ஒப்படைக்கப்பட்டது. தலை யில் தாக்கியதாகக் குற்றஞ் சாட்டப்படும் மனநிலை பாதிக் கப்பட்ட இளைஞன் கைது செய் யப்பட்டு விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

(த-வ-4-107)

## யாழ். தட்டாதெரு வாள்வெட்டு; சந்தேகநபர்களின் மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம் மே 31

யாழ். தட்டாதெரு வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந் தேக நபர்களின் விளக்கமறி யலை ஜூன் மாதம் 13 ஆம் திகதி வரை நீடித்து யாழ். நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தர விட்டது.

தட்டாதெருப் பகுதியில் இடம் பெற்ற வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பாக பெண்ணொருவர் உட்பட 6 மாணவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கு யாழ்.நீதிவான் நீதிமன்றில் நேற்று விசார ணைக்கு எடுக்கப்பட்டது. இதன் போது குறித்த வழக்குடன் தொடர் புடைய சன்னார் என்ற சந்தேக நபரை கைது செய்வதற்காகக் கிளிநொச்சி அக்கராயன் குளத் துக்கு யாழ்ப்பாணப் பொலிஸார் சென்றபோதும், பிரதான சந் தேகநபரும் இன்னொருவரும் பொலிஸாரைக் கண்டதும் தப் பிச் சென்றுவிட்டதாகப் பொலி ஸார் மன்றில் தெரிவித்தனர்.

அத்துடன், குறித்த இரு சந் தேகநபர்களுக்கு உதவி புரிந்த இளைஞன் ஒருவரை தாம் கைது செய்துள்ளதாகவும், அவரிடமிருந்து துப்பாக்கி ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து அவரைப் பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்தினர்.

எனினும் குறித்த இளைஞன் இந்தச் சம்பவத்துடன் தொடர் புடைய குற்றச்செயலில் சம்பந் தப்படாததால், அவரை இந்த வழக்கிலிருந்து விடுவிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. சந் தேக நபர்கள் சார்பில் தோன்றிய சட்டத்தரணிகள் அவர்களை பிணையில் விடுவிக்குமாறு கோரினர். எனினும் இந்தச் சம் பவம் தொடர்பாக அடுத்த வழக் குத் தவணையில் விரிவான அறிக்கையொன்றை சமர்ப் பிக்குமாறு பொலிஸாருக்கு கட்ட ளையிட்ட நீதிவான் சி.சதீஸ் தரன், 4 சந்தேக நபர்களினதும் விளக்கமறியலை எதிர்வரும் 13 ஆம் திகதி வரை நீடித்து உத்தர விட்டார்.

(த-வ - 103)

## நுரையீரல் நோய்ப் பாதிப்பு; 7 மாதக் குழந்தை உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மே 31

7 மாதக் குழந்தை நுரையீரலில் நோய் பாதிப்பு ஏற்பட்டதனால், நள்ளிரவில் உயிரிழந்தது என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு 10 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கே.ஆகாஷ் என்ற குழந்தையே இவ்வாறு உயிரி ழந்தது. உறவினர் வீடுக்கு வந்திருந்த அவர்கள் நேற்றுமுன்தினம் நள்ளிரவு வீட்டில் குழந்தைக்குப் பாலூட்டிய பின்னர், தாயும் குழந்தையும் நித்திரை யாகியுள்ளனர். நேற்றுக்காலை குழந்தை துடிப்பு ஏதும் காணப்படவில்லை. உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றபோது, குழந்தை ஏற்கனவே உயிரிழந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பரிசோதனையில் குழந்தைக்கு ஈரலில் நோய்த் தொற்று ஏற்பட்டிருந்தமை தெரியவந்துள்ளதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணை மேற்கொண்டார்.

(த-வ-4-107)

## கைகலப்பில் மூவர் காயம்

யாழ்ப்பாணம், மே 31

தொண்டமானாறு பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற கைகலப்பில் மூவர் காயமடைந்து வைத்தியசாலைகளில் சேர்க்கப் பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தொண்டமானாறு பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை இரவு 9.30 மணிக்கு இந்தக் கைகலப்புச் சம் பவம் இடம்பெற்றுள்ளது. இதன் போது மூன்று பேர் காயமடைந் துள்ளனர்.

காயமடைந்தவர்களில் இருவர் மந் திகை வைத்தியசாலையிலும், ஒரு வர் ஊறணி வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தெரி விக்கப்படுகின்றது.

(ந-ஜ-5-26)

## பொலிஸார் சூடு நடத்தி பிடித்த நபருக்குப் பிணை

யாழ்ப்பாணம், மே 31

முள்ளியவளையில் கடந்த சனிக் கிழமை பொலிஸாரினால் துப் பாக்கிப்பிரயோகம்மேற்கொண்டு கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் பிணையில் விடுவிக்கப்பட்டுள் ளார்.

மணல் கடத்தல் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஒன்றில், நீதிமன்றில் முன்னி லையாகாத குற்றச்சாட்டில் முல் லைத்தீவு நீதிமன்றம் குறித்த நபருக்கு எதிராக பிடியாணை பிறப்பித்திருந்தது.

இவ்வாறு பிடியாணை பிறப்பிக் கப்பட்ட நபரைப் பொலிஸார் சிவில் உடையில் சென்று கைது செய்ய முற்பட்டவேளை, பொலி ஸாரிடம் பிடியாணையும் இருக் கவில்லை. இதனால் குறித்த நபர் பிடியாணையும் இன்றிச் சீருடைப் பொலிஸாரும் இல்லா மல் கைது செய்வதைத் தடுத் துள்ளார்.

இதனால் பொலிஸார் துப் பாக்கிப் பிரயோகம் மேற் கொண்டுசந்தேகநபரைக்கைது செய்து கொண்டு சென்றிருந் தனர்.

இந்த நிலையில் குறித்த வழக்கு நேற்று முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது சந்தேகநபருக்கு எதிராக தாக் கல் செய்யப்பட்டிருந்த வழக் கில் குற்றப்பணம் விதிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்டது.

அத்துடன், பொலிஸார் கடமைக் குச் சென்றவேளையில் குறித்த சந்தேகநபர் கடமைக்கு ஒத் துழைக்க மறுத்துப் பேசியதுடன், இது தொடர்பில் பொலிஸாருக் குக் களங்கம் ஏற்படுத்தியதா கப் பொலிஸார் நீதி மன்றில் அறிக்கையிட்டிருந்தனர்.

எனினும் சந்தேகநபர் சார்பில் சட்டத்தரணி எல். ஜமால், பொலிஸாருடன் தர்க்கம் ஏற்பட வேண்டி இருந்தமைக்கான காரணத்தினை நீதிமன்றில் சுட்டிக்காட்டினார். அதாவது, ஒரு சந்தேக நபரை கைது செய்ய சென்ற பொலிஸார் சீரு டையில் செல்லவில்லை என் பதுடன், நீதிமன்றம் பிறப்பித்த பிடிஆணையையும் உடன் எடுத் துச்சென்றிருக்கவில்லை. எனவே குறித்த சம்பவத்தில் பொலிஸாரே தவறிழைத்துள்ளனர் என சட்டத் தரணி மன்றில் எடுத்துரைத்தார்.

இந்த நிலையில் குறித்தவழக்கை ஆராய்ந்த முல்லைத்தீவு நீதி வான் சம்சுதீன், வழக்கினை எதிர் வரும் செப்ரெம்பர் முதலாம் திக திக்கு ஒத்தி வைத்ததோடு, குறித்த நபரை ஒரு லட்சம் ரூபா [illegible] பிணையில் செல்ல அனுமதித் தார்.

(த-வ-4-101)

**விற்பனைக்கு**

மில் இயந்திரசாதனம் விற்பனைக்குண்டு.

021 568 0106, 077 126 7122

**பிள்ளையார் இன் & பிள்ளையார் ஸ்ரோர்ஸ்**

JCB இயக்கக் கூடிய முன் அனுப வம் உள்ள சாரதி தேவை. சம்ப ளம் நேரில் பேசித் தீர்மானிக்கப் படும்.

077 722 2715

**தவறிவிட்டது**

கைதடி தெற்கு,கைதடியைச் சேர்ந்த வண்ணமயில் நிரோஷன் என்பவரது தேசிய அடையாள அட்டை (902422226V), சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம், வரிப்பத்திரம் என்பன அடங்கிய பேர்ஸ் கடந்த 26.05.2016 அன்று கைலாசபிள்ளையார் கோயிலுக்கும் புங்கன்குளம் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். [illegible]

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 504
சீட்டிழுப்பு திகதி 2016.05.30
வெற்றி இலக்கங்கள்
27 50 59 61 G
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 57,112,320/=

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1266
சீட்டிழுப்பு திகதி 2016.05.30
வெற்றி இலக்கங்கள்
01 09 10 22 Z
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 16,120,000/=

அபிவிருத்தி இலட்சாதிபதி
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 012
சீட்டிழுப்பு திகதி 2016.05.30
வெற்றி இலக்கங்கள்
08 20 25
இலட்சாதிபதி தங்க இலக்கம் 28988
இன்றைய இலட்சாதிபதிகள் 058
வழங்கப்பட்ட மொத்த பரிசு 11,615,380/=

**பணிநிலை வெற்றிடம்**

ஜெயந்திநகர், கிளிநொச்சி என்னும் முகவரியில் அமைந்துள்ள மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தில் கீழ்க்காணும் பணிநிலை வெற்றிடம் உண்டு.

1. நூலகர்

தகைமைகள்

நூலக தகவல் விஞ்ஞான பட்டதாரிகள் அல்லது நூலக தகவல் விஞ்ஞான பட்டதாரி பரீட்சைக்குத் தோற்றி பெறுபேற்றை எதிர்பார்த்திருப்பவர்கள்.

அல்லது

இலங்கை நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா தரம்-III (LEVEL-III) பரீட்சையில் (DIPLIS) சித்திபெற்றவர்கள்.

20 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்

நிறுவனத்தின் விதிமுறைகளுக்கு அமைந்து இல்லத்தில் தங்கியிருந்து பணியாற்ற வேண்டும்.

உணவு, தங்குமிடம் என்பன வழங்கப்படும்.சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 10.06.2016

தொடர்புகளுக்கு: தி.இராசநாயகம்
தலைவர்,மகாதேவா சுவாமிகள் சிறுவர்இல்லம்,
ஜெயந்திநகர், கிளிநொச்சி.
தொலைபேசி இலக்கம்:
077 0604950, 021 4923118
மின்னஞ்சல் முகவரி:
Email- mahadevaswamikalchildrenhome@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரக்கறி, கடல் உணவுகளின் விலைகளில் திடீர் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், மே 31
குடா நாட்டில் மரக்கறி மற்றும் கடல் உணவுகளின் விலைகள் திடீரென அதிகரித்துள்ளன.
இந்த மாத நடுப்பகுதியில் காற்றுடன் கூடிய கன மழையால் மரக்கறிப் பயிர்களின் செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டன. அதன் காரணத்தால் மரக்கறிகளின் விலைகள் தினமும் அதிகரித்துச் செல்கின்றன.
சகல மரக்கறி வகைகளும் கிலோ 100 ரூபாவுக்கு மேல் விற்கப்படுகின்றன.
சந்தைகளில் மரக்கறிகள் பெரிய அளவு வந்து சேராததால், அவற்றுக்குப் பற்றாக்குறையும் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளன. திருநெல்வேலி, சுன்னாகம், மருதனார்மடம், சங்கானை, சாவகச்சேரி, கொடிகாமம், போன்ற பிரதான மரக்கறிச் சந்தைகளில் மரக்கறி வகைகளின் வருகை குறைந்தே காணப்படுகின்றது.
தற்போது குடா நாட்டில் ஆலயங்களின் வருடாந்த மகோற்சவங்கள் இடம்பெற்று வருவதாலும் மற்றும் சுப வைபவங்களுக்கும் மக்கள் கூடுதலாக மரக்கறி வகைகளையே பயன்படுத்தியும் வருகின்றனர்.
மரக்கறி வகைகளின் விலை அதிகரிப்பால் நுகர்வோர் பெரிதும் பாதிக்கப்பட்டும் உள்ளனர்.
இதே சமயம் கடலுணவுகளின் விலைகளும் சடுதியாக அதிகரித்துள்ளன.
தற்போதைய காலநிலை மற்றும் பருவப்பெயர்ச்சிக் காற்று ஆரம்பித்துள்ளதால் கடலுணவுகளின் பிடிபாடு திடீரெனக் குறைந்துள்ளது.
இதனால் கடலுணவுகள் சந்தைகளுக்கு குறைந்தளவே வந்து சேருகின்றன.
கொட்டடி, பாஷையூர், குருநகர், நாவாந்துறை, காக்கை தீவு போன்ற மீன்சந்தைகளில் மீன், இறால், கணவாய், நண்டு போன்றவற்றின் விலைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.
(ற-ஜ-17)

## வணிகத்துறை தொடர்பான கலந்துரையாடல்

உலக பிரசித்திபெற்ற விரிவுரையாளரால் **இன்று (31.05.2016) பிற்பகல் ஒரு மணிமுதல் 3 மணி வரை யாழ்ப்பாணம் வீரசிங்கம்** மண்டபத்தில் **வணிகத்துறை** தொடர்பான கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

**அனுமதி இலவசம்** (ஜே/1751) (11,17)

மேலதிக தகவல்களுக்கு: 077 108 3609



## புதிதாக தயாரிக்கின்ற நாடகங்களில் சிறுவர்கள், இளைஞர், யுவதிகள் இணைந்து கொள்ளலாம்

ஈழத்து மண்வாசனையுடன் புதிதாகத் தயாரிக்கப்படுகின்ற சிறுவர் நாடகங்கள், நவீன நாடகங்களுக்கான பயிற்சிகள் எதிர்வரும் 04.06.2016 மாலை 4.00 மணிக்கு நல்லூரில் அமைந்துள்ள செயல் திறன் அரங்க இயக்கத்தின் வளாகத்தில் ஆரம்பமாகின்றன.
இதில் பங்கு கொண்டு நடிக்க விரும்பு பவர்கள் இணைந்து கொள்ளலாம். பயிற்சிகள் மாலை நேரங்களிலும் வார இறுதி நாள்களிலும் நடைபெறும். சிறுவர்கள் மட்டுமே நடிப்பதான நாடகத் தயாரிப்புக்கள் வார இறுதி நாள்களில் மாலை நேரங்களில் நடைபெறும்.
தயாரிக்கப்படுகின்ற நாடகங்கள் ஈழத்தின் நாடக வரலாற்றின் முக்கியமான நாடக நிகழ்வான நல்லூர் நாடகத் திருவிழா - 2016 இல் மேடையேற்றப்படும். ஈழத்தின் பிரபலமான நாடக ஆசிரியர்களின் நாடகங்கள் பிரபல்யமான நெறியாளர்களால் நெறிப்படுத்தப்படவுள்ளன.
பயிற்சிகளிலும் நாடகத்திருவிழாவிலும் பங்கு கொள்பவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

**தொடர்பு: தொ.பே:**
**021 221 6061, 077 211 1622**
email: jaffnatheatre@gmail.com
**செயல் திறன் அரங்க இயக்கம்**
**Active Theatre Movement**
நல்லூர் குறுக்கு வீதி(யாழ் மாநகர சபை முன் வீதி) நல்லூர், யாழ்ப்பாணம்.
(J/ 1749)(12.17.)

## நாகபூஷணி திருமண சேவை

டாக்ரர், எஞ்சினியர், எக்கௌண்டன், வங்கி உத்தியோகத்தர், சட்டத்தரணிகள், ஆசிரியர்கள் அரச உத்தியோகத்தர் , தனியார்துறையினர் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் ஜாதகங்கள் எம்மிடம் ஏராளமாக உண்டு. நீங்கள் விரும்பும் வரன்களை மிகப் பொருத்தமாக உடன் தெரிவு செய்து தரப்படும்.
(J/ 1745)(12.17.)

383/14B கோயில் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
(நல்லூர் வடக்குப் பக்கம்)
T.P : 021 222 9306, 077 1387596
Email- nakapoosany wedding@gmail.com

## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை மானிப்பாய் கிராம உப அலுவலகம் ஆனைக்கோட்டை

### ஆதன பெயர் மாற்ற அறிவித்தல்

**வட்டாரம் - 03**
**ஆதன இலக்கம் :- 31 (புதிய இலக்கம்)**
**அம்பாள் வீதி,**
**கிராமசேவையாளர் பிரிவு :- J/129**

வட்டாரம் 03, அம்பாள் வீதி, ஆதன இலக்கம் **31** (புதிய இலக்கம்) இல் அமைந்துள்ள உறுதிப்படி வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய், கோவிற்பற்று சுதுமலையிறை "**செருக்கன் தோட்டம்**" என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 02 குளி 11 1/4 கொண்ட இவ் வாதனமானது சி.150, 3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் ஐயாத்துரை புஸ்பராசா பெண் இந்திராணி குஸ்மலதா ஆகியோரால் சுதுமலை வடக்கு, மானிப்பாயைச் சேர்ந்த அழகு சத்தியசீலன் பெண் புவனேஸ்வரி என்பவருக்கு அறுதி உறுதி மூலம் பிரசித்த நொத்தாரிஸ் திரு.அ.வசந்தசேனன் அவர்கள் முகதாவில் 5606 ஆம் இலக்க 2003.09.07 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவகை (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். நில அளவையாளர் திரு.S.முத்துக்குமாரசாமி அவர்களால் வரையப்பட்ட 5058 இலக்க 1978.02.20 ஆம் திகதிய நில அளவைப் படத்தின் பிரகாரம் இவ் ஆதனமானது "**செருக்கன் தோட்டம்**" நிலப்பரப்பு 02 குளி 11 1/4 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 14 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது அழகு சத்திய சீலன் பெண் புவனேஸ்வரி என்பவர் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,**
**மானிப்பாய்.**
(ஜே/1748) (11,17)

# இரும்புக் கம்பியால் தாக்கிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், மே 31
சுன்னாகம், குப்பிளான் வடக்கில் இரும்புக்கம்பியால் ஒருவரைத் தாக்கிக் காயம் ஏற்படுத்திய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.
கைதான நபர் அதே பகுதியைச் சேர்ந்த 18 வயதுடைய நபர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.
சம்பவத்தில் தலையில் படுகாயமடைந்த குப்பிளான் வடக்கு பகுதியைச் சேர்ந்த நபர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.
தனிப்பட்ட பிரச்சினை காரணமாக இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
கைதான சந்தேக நபரை மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.
(ற-ஜ-4,107)

# பெருந்தோட்டக் கம்பனிகள் இலாபத்தில் இயங்குகின்றன

## அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

கொழும்பு, மே 31
மலையக பெருந்தோட்டங்கள் நட்டத்தில் இயங்குகின்றன என்று தெரிவிப்பதில் உண்மையில்லை. அவ்வாறு நட்டத்தில் இயங்கினால், அனைத்தையும் பொறுப்பேற்கத் தயார்.
-இவ்வாறு சபை முதல்வரும், அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள் ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
மலையக பெருந்தோட்டக் கம்பனிகள் இலாபத்தில் இயங்குகின்றன. அவ்வாறு கிடைக்கும் இலாபங்கள் அனைத்தும் இரகசியமாகச் சேமிக்கப்படுகின்றன.
இலாபத்தை மறைத்து நட்டம் என்று கம்பனிகள் பொய் கூறி வருகின்றன. பெருந்தோட்டங்கள் நட்டத்தில் இயங்குகின்றன என்றால் அவை அனைத்தையும் பொறுப்பேற்க அரசு தயாராகவே உள்ளது.
எனவே தோட்டக் கம்பனிகள் நட்டம் என்று கூறிக் கொண்டிருக்காமல், அதனை அரசிடம் கையளிக்க முடியும். 2 ஆயிரத்து 500 ரூபா சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும்.- என்றார்.
(ற-ஜ-5)

# இனங்களுக்கிடையே உறவை ஏற்படுத்த வடக்கு முதலமைச்சர் முன்வரவேண்டும்

## சோபித தேரர் கோரிக்கை

கொழும்பு, மே 31
இலங்கையில் இரண்டு இனங்களுக்கும் இடையில் உறவை ஏற்படுத்த வடக்கின் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் முன்வர வேண்டும். -இவ்வாறு ஓமல்பே சோபித தேரர் கோரியுள்ளார்.
தேசிய கீதம் தமிழில் பாடப்பட்டபோது, வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கூறிய விமர்சனத்தை அடிப்படையாகக் கொண்டே இந்தக் கோரிக்கையை அவர் விடுத்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
நல்லிணக்கத்துக்காகச் சிங்கள மக்கள் ஓர் அடி முன் வைத்தால் தமிழர்கள் 10 அடிகளை முன்னோக்கி வைக்கத் தயார் என்று விக்னேஸ்வரன் தெரிவித்திருந்தார்.
எனினும் அண்மைக் காலங்களில் விக்னேஸ்வரன், மாறுபட்ட விதத்தில் செயற்பட்டு வருகிறார். எனவே இதனை விடுத்து நல்லிணக்கத்துக்காக விக்னேஸ்வரன் செயற்பட வேண்டும்- என்றார்.
2013 ஆம் ஆண்டு முதலமைச்சராகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் கருத்துரைத்திருந்த விக்னேஸ்வரன், நீதித்துறையில் இருந்தவர் என்ற அடிப்படையில் தாம் தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் என்று எவரையும் பிரித்துப் பார்ப்பதில்லை என்று குறிப்பிட்டிருந்தமையையும், சோபித தேரர் இதன் போது சுட்டிக்காட்டியுள்ளார். (ற-ஜ-5)

# கிழக்கு முதலமைச்சர் விடயத்தை இனவாத ரீதியில் நகர்த்துகின்றனர்

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

கொழும்பு, மே 31
கிழக்கு மாகாண முதலமைச்சருக்கும் கடற்படை அதிகாரிக்கும் இடையில் ஏற்பட்ட சர்ச்சையைச் சிலர் இனவாத அடிப்படையில் தவறான கோணத்தை நோக்கி நகர்த்துகின்றனர் என அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.
முதலமைச்சரின் நடவடிக்கை ஏற்றுக் கொள்ள முடியாதது எனவும், முதலமைச்சர் முஸ்லிம் என்பதற்காகவே சிலர் இவ்வாறு எதிர்ப்பு வெளியிட்டு வருகின்றனர் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
இந்தப் பிரச்சினையை மிக இலகுவாக முடிவுக்கு கொண்டு வந்திருக்க முடியும். சம்பவத்துடன் தொடர்புடைய கடற்படை அதிகாரிக்காக எதிர்ப்பு வெளியிடப்படவில்லை. முதலமைச்சர் முஸ்லிம் என்பதற்காகவே இந்த எதிர்ப்பு வெளியிடப்பட்டு வருகின்றது.
இராணுவத்தினருக்காக முன்னின்று செயற்படுகின்றவர்கள், இராணுவ தளபதி சரத் பொன்சேகா கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட போது முன்னின்று கருத்து தெரிவிக்கவில்லை- என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற-ஜ-5)

## சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான பரிபாலன சபை அறிவித்தல்

எங்கள் ஆலயத்தில் புதிய நிர்வாகியும் பொருளாளராகவும் 25.05.2016 தொடக்கம் **இரா. தர்மகுலேந்திரன்** அவர்களை நியமித்துள்ளோம். எங்கள் கோயிலுக்கு நிதி உதவியோ பொருள் உதவியோ செய்ய விரும்புவோர் பொருளாளரிடமோ அல்லது காரியாலயத்திலோ கொடுத்து பற்றுச் சீட்டை பெற்றுகொள்ளுபடி அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.
எங்கள் கோயிலுக்கு வேறு எவரும் பணமோ பொருளோ சேர்ப்பதற்கு நாங்கள் அனுமதிக்கவில்லை என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

**தலைவர்.**
(J/ 1749)(12.17.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் முடிவுகள் பாதகம்; மகிந்தவுக்கு கூறிய மகிந்த

கொழும்பு, மே 31
ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியாகிக் கொண்டிருந்த போது, தொடர்பு கொண்ட மகிந்த ராஜபக்சவிடம், முடிவுகள் உங்களுக்குப் பாதகமாகவே இருக்கின்றன என்று தெரிவித்தேன் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பு சிங்கள ஊடகத்துக்கு வழங்கியுள்ள நேர்காணலிலேயே அவர் இந்த விடயங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்த பின்னர் மகிந்த ராஜபக்ச தொலைபேசியூடாக என்னுடன் தொடர்பு கொண்டார். தான் தோல்வியடைந்து வருகின்றேன் தானே? என்று என்னிடம் வினவினார். அதற்கு நான், காலை 6 மணிவரையில் எதுவும் சொல்ல முடியாது. எனினும் தற்போதைய முடிவுகள் உங்களுக்குப் பாதகமாகவே உள்ளன என்று குறிப்பிட்டேன்.

முன்னாள் ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்த பின்னர் அவரை நீங்கள் சந்தித்துண்டா ? என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு, ஆம் பல தடவைகள் அவரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளன. திருமண நிகழ்வு, சாவு வீடு, ஆண்டு நிறைவு விழா போன்றவற்றில் சந்தித்தேன்.

அத்துடன் மிகவும் நீண்ட கால மாக எனக்கு அவரைத் தெரியும். தற்போதைய ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்டோரும் நீண்ட காலமாக எனக்கு தனிப்பட்ட ரீதியாக தெரிந்தவர்கள்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் என்னை 'மான் ஒப் த மட்ச்' என்று பலரும் சொல்கின்றனர். ஆனால் அனைவரும் சமமாக சேவை செய்யக் கூடிய விளையாட்டு மைதானத்தையே நான் அமைத்தேன். அத்துடன் இந்த தேர்தலால் எனக்கு ஒரு நன்மை கிடைத்துள்ளது.

இவ்வளவு காலமும் என்னைத் திட்டிக் கொண்டிருந்த பொதுமக்கள் இந்தத் தேர்தலுக்குப் பின் என்னை புகழத் தொடங்கி விட்டார்கள் என்பது எனக்கு மகிழ்ச்சியாக உள்ளது.

அத்துடன் எந்தவொரு தேர்தலின் போதும் பொதுமக்கள், அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள் ஆகியோரின் ஒத்துழைப்பு இல்லாமல் எம்மால் சிறந்த தேர்தலை நடத்தியிருக்க முடியாது. எனவே அனைத்து புகழும் அனைவரையும் சாரும் என்று குறிப்பிட்டுள்ளார். (ந-ஐ-5)

# ஜன்னல் கம்பியை வளைத்து 15 பவுண் நகை, பணம் திருட்டு

### அதிகாலையில் துணிகரம்

யாழ்ப்பாணம், மே 31
அதிகாலையில் அனைவரும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த சமயம், வீட்டு ஜன்னல் கம்பியை வளைத்து உள்ளே இறங்கிய திருடர்கள் தாலிக்கொடி உட்பட 15 பவுண் எடையுள்ள நகைகளையும், 20 ஆயிரம் பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் திருட்டு தாவடியில் நேற்று முன்தினம் நடந்துள்ளது. வீட்டிலுள்ள அனைவரும் ஆழ்ந்த உறக்கத்திலிருந்த சமயம், அதிகாலை 3 மணியளவில் வீட்டின் பின்புறத்திலுள்ள ஜன்னல் கம்பியை அங்கிருந்த அலவாங்கின் உதவியுடன் அகற்றி உள்ளே இறங்கிய முகமூடி அணிந்திருந்த இரு திருடர்கள், பெட்டியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த 20 ஆயிரம் ரூபா பணத்தையும் , சல்லடை போட்டுத்தேடி மறைத்து வைக்கப்பட்டிருந்த தாலிக்கொடி, காப்பு உட்பட 15 பவுண் நிறையுள்ள தங்க நகைகளையும் திருடிக்கொண்டு முன் கதவைத் திறந்து தப்பிச் சென்றுள்ளனர்.

திருடர்கள் வெளியேறுவதை அவதானித்த இளம் பெண் தூக்கத்திலிருந்த பெற்றோரை எழுப்பிய போதும் அவர்கள் எழும்ப முடியாமல் ஒருவித மயக்க நிலையில் இருந்தார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது. அதனால் திருடர்கள் மயக்க மருந்து தெளித்திருந்தார்களா என்றும் சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திருட்டுப் பற்றி கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தமையைத் தொடர்ந்து, சம்பவ இடத்துக்கு மோப்ப நாயுடன் சென்ற பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டனர். கைவிரல் அடையாளங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

திருட்டு, கொள்ளை யாழில் இன்னும் தொடர்ந்துகொண்டிருக்கும் நிலையில், சிலர் கைதுசெய்யப்படுகின்ற நிலையும் பின்னர் பிணையில் விடுவிக்கப்படுகின்றமையும் தொடர்கின்றன. அவ்வாறு சில நாள்களுக்கு முன்னர் பிணையில் விடுவிக்கப்பட்ட திருட்டுச் சந்தேக நபர் ஒருவர், மீண்டும் நகைகள் உள்ளிட்ட பொருள்களைத் திருடிய குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதோடு, திருடப்பட்ட பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்திருந்தனர். (ந-ஐ-4,115)

# ஒருங்கிணைப்பு குழு கூட்டங்களை வேலை நாள்களில் நடத்த ஏற்பாடு

அரச, தனியார் நிறுவனங்களில் கடமையாற்றும் அதிகாரிகள், தலைவர்கள் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் தவறாது கலந்து கொள்வதற்கு வசதியாக எதிர்வரும் கூட்டங்கள் வேலை நாள்களில் மட்டும் நடைபெறவுள்ளன. இதற்கான ஆலோசனையை இணைத் தலைவர், செயலாளருக்கு வழங்கியுள்ளார்.

வலி. தென்மேற்கு பிரதேசத்துக்கான ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் கடந்த வாரம் சண்டிலிப்பாய் செயலக மண்டபத்தில் இணைத்தலைவர் ஈ.சரவணபவன் தலைமையில் நடைபெற்றது.

மூன்று மாதங்களுக்குப் பின்பு நடைபெற்ற இந்தக் கூட்டத்துக்கு நிறுவனங்களின் தலைவர்கள், அதிகாரிகளின் வருகை குறைவாகக் காணப்பட்டமையால், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகளுக்கு உடனுக்குடன் தீர்வு எட்ட முடியாத நிலை ஏற்பட்டது. அதிகாரிகளுக்கு ஒதுக்கப்பட்ட ஆசனங்களும் வெறிச்சோடிக் காணப்பட்டன.

இந்த நிலை குறித்து, பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் இணைத் தலைவருக்குச் சுட்டிக்காட்டியதுடன் விடுப்பு நாள்களில் கூட்டம் நடைபெறுவதே இதற்குக் காரணமென்றும், எதிர்வரும் கூட்டங்களை வேலை நாள்களில் வைக்குமாறும் தெரிவித்திருந்தனர்.

இவர்களின் கருத்தை ஏற்றுக் கொண்ட இணைத்தலைவர் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை வேலை நாள்களில் வைக்குமாறு பிரதேச செயலருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இதே வேளை பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளால் முன்வைக்கப்படும் கருத்துக்களைச் சமர்ப்பிக்குமாறு கூறி அவசர அவசரமாக கூட்டம் முடிக்கப்பட்டுள்ளது என்று மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (ந-ஐ-115)

# ஒதுக்கப்படும் நிதி போதாமையால் வீதிகளைத் திருத்த முடியாத நிலை

### வலி.தென்மேற்கு பிரதேச சபைச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 31
பிரதேச சபைகளுக்கு ஒதுக்கப்படுகின்ற நிதி போதாத நிலையில் உள்ளதாலே பல வீதிகள் இன்னமும் திருத்தப்பட முடியாத நிலையில் காணப்படுகின்றன என வலி.தென்மேற்கு பிரதேச சபைச் செயலர் தெரிவித்துள்ளார்.

நவாலி வடக்கு திருச்சபை வீதியும், சடுவில் வீதியும் கடந்த 40 வருடங்களுக்கு மேலாகவும் மற்றும் கல் ஒழுங்கை வீதி கடந்த 23 வருடங்களுக்கு மேலாகவும் மீள்புனரமைப்பு இன்றி அழிவடைந்துள்ள நிலையில் போக்குவரத்துச் செய்ய முடியாமல் உள்ளது என்று பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இரண்டு கிறிஸ்தவ தேவாலயங்கள், மூன்று பெரிய இந்துக்கோயில்கள் உள்ள மிக முக்கியமான இணைப்பு வீதியாக திருச்சபை வீதியும், சடுவில் வீதியும் திகழ்கின்றன. தினமும் வர்த்தகர்கள், பாடசாலை மாணவர்கள், விவசாயிகள், ஆலயத்துக்குச் செல்வோர், அரச அலுவலுர்கள் என ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் இந்த வீதிகளால் பயணிக்கின்றனர்.

மழை காலங்களில் இந்த வீதிகளிலும் போக்குவரத்து செய்ய முடியாமல் போவதால் இனி வரும் காலம் மழை காலம் என்பதைக் கருத்தில் கொண்டும் இதனை முன்னிலைப்படுத்தி, 2016 ஆம் ஆண்டில் ஏதாவது ஒரு திட்டத்தின் இந்த 1.4 கிலோமீற்றர் இணைப்பு வீதியை மீள் புனரமைப்பு செய்யவேண்டும். அல்லது அடுத்த 2017 ஆம் ஆண்டு வரவு -செலவுதிட்ட முன்மொழிவுகளிலாவது இந்த வீதி முன்னிலைப்படுத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது. இந்த வீதி சம்பந்தமாக கடந்த 5 வருடங்களுக்கு மேலாக 10க்கும் மேற் பட்ட மனுக்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

அதேபோல் கல் ஒழுங்கை வீதியும் கடந்த வருடம் புறநெகும திட்டத்தில் முன்னெடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டும், இந்தத் திட்டமும் முன்னகர்த் தப்படவில்லை. நவாலி பொது அமைப்புக்கள் இணைந்து இந்த வீதி தொடர்பான கடிதங்கள் மனுக்கள் குறித்து மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபாவுக்கும் வழங்கப்பட்டுள்ளன என்றும் மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இது தொடர்பாக வலி.தென்மேற்கு பிரதேச சபைச் செயலரிடம் கேட்டபோது :-

ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலும் பல வீதிகள் காணப்படுகின்றன. பிரதேச சபைக்கு ஒதுக்கப்படுகின்ற நிதி போதாத நிலையில் உள்ளதால், முன்னுரிமை அடிப்படையில் வீதிகள் திருத்தப்பட்டு வருகின்றன. வருங்காலங்களில் இந்த வீதிகளையும் கருத்தில் கொண்டு முன்னுரிமைப்படுத் தப்பட்டு பிரதேச சபை நிதிக்குள் அல்லது வேறு திட்டங்களுக்குள் உள்வாங்கப்பட்டு திருத்தியமைக்கப்படும் - என்று தெரிவித்தார். (ந-ஐ-150)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
20 . 06 . 1982



இறப்பு
14 . 05 . 2015

**சுந்தரம் சதீஸ்**

நிஜமாக நீங்கள் மறைந்து ஓராண்டு ஆனதுவோ
நீங்கள் இல்லாமனை பொலிவிழந்து போனதுவோ
உங்களை நினைத்து தினம் தினம்
நாம் ஏங்கித் தவிக்கின்றோம் காலங்கள் ஓடிக்கடந்தாலும்
உங்களை எங்கள் உள்ளத்தில் வைத்துப் பூசிப்போம்

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை (01.06.2016) புதன் கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சுந்தரம், கன்டிவீதி,
கொக்குவில், யாழ்ப்பாணம்.

அப்பா, அம்மா, மனைவி,
பிள்ளைகள், சகோதரங்கள்
மற்றும் உற்றார், உறவினர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 31ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

**அமரர் கதிர்காமர் மண்டலேஸ்வரன்**

கடந்த 03.05.2016 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர் அமரர் கதிர்காமர் மண்டலேஸ்வரன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 02.06.2016 வியாழக்கிழமை காலை 6 மணியளவில் எமது வீட்டின் அருகில் உள்ள மணியாவத்தை வைரவர் கோயிலில் நடைபெறும். முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:- தனிப்பட்ட அழைப்புக் கிடைக்கப் பெறாதவர்கள் இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மணியாவத்தை,
புலோலி வடக்கு,பருத்தித்துறை. (N/59) (11) குடும்பத்தினர்.

# நன்றி நவிலல்



திருமதி
**கமலாதேவி கந்தசாமி**
(கரவைக்கிழார்)

தோற்றம் 18.06.1936 — மறைவு 01.05.2016

கரவெட்டி. கட்டைவேலியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கமலாதேவி கந்தசாமி (கரவைக்கிழார்) அவர்களின் மறைவுச்செய்தி அறிந்து நேரிலும் தொலைபேசி மூலமாகவும் மற்றும் E-mail மூலமாகவும் இரங்கல் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அனைவரிற்கும் எமது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துளு அம்மன் கோயிலடி,
கட்டைவேலி, கரவெட்டி.

பிள்ளைகள்: கபிலமணி, அறிவழகன்,
வாணிதாசன், இளஞ்சேரன், பாவேந்தன்

# கேகாலையில் எட்டுப் பாடசாலைகள் தொடர்ந்தும் மூடப்பட்ட நிலையில்

கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்த 8 பாடசாலைகள் தொடர்ந்தும் மூடப்பட்டுள்ளன என்று சப்பிரகமுவ மாகாணக் கல்வி அமைச்சர் ஹானு மனுப்பிரிய தெரிவித்துள்ளார். இதனால் 11 ஆயிரம் மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்ல முடியாத நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

கடந்த வாரம் வெள்ளம், மண்சரிவு போன்ற இயற்கை இடர்களின் காரணமாக நாடு முழுவதுமுள்ள பல பாடசாலைகள் மூடப்பட்டன. அவ்வாறான பல பாடசாலைகள் நேற்றுக் கல்வி நடவடிக்கைளுக்காகத் திறக்கப்பட்டன.

எனினும், கேகாலை மாவட்டத்தில் தொடர்ந்தும் மண்சரிவு ஏற்படும் அபாயம் காணப்படுகின்றது. எவ்வாறாயினும் மூடப்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு அருகிலுள்ள வேறு பாடசாலைகள் ஒதுக்கி கொடுக்கப்படவுள்ளன என்றும், இது குறித்து ஆசிரியர்கள் மற்றும் பெற்றோருடன் கலந்தாலோசிக்கப்படவுள்ளது என்றும் கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார். (ற-ஜ-5)

# கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேச செயலகத்தில் கல்வியங்காடு வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கியில் முகாமையாளராக கடமையாற்றும் திரு. நடராசா சிவகுமார் அவர்களின் அன்புத் தாயார்

**நடராசா நாகம்மா**

அவர்களின் மறைவினால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

நல்லூர் பிரதேச செயலக
உத்தியோகத்தர் நலன்புரிசங்கம்.

# கண்ணீர் அஞ்சலி



யாழ். கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ சிவஞானம் சிறீதரன் அவர்களின் பாசமிகு தந்தை

**சின்னத்துரை சிவஞானம்**

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டுத் துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பினால் தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தாவளை -
இயற்றாலை - கொடிகாமம்.

சசிகரன்
குடும்பத்தினர்.

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**றெஜினா நீக்கிலாப்பிள்ளை**

மலர்வு 08.09.1945 — உதிர்வு 31.05.2014



அழகின் அமுதே எம் அம்மா
அன்பின் ஊற்றே எம் அம்மா
அள்ளிக் கொடுப்பதே உன் கரம்
அரவணைப்பதே உன் குணம்
உன் புன்னகையால் ஓடிடும் துன்பம் எல்லாம் ஒரு கணம்
உன் வதனமதில் கண்டதில்லை நாம் கடும் சினம்
உன் அன்பு மொழி கேட்டாலே எம் மனம் குளிர்ந்து விடும்
உன் உள்ளமோ வெண்மையின் உறைவிடம்
எல்லாம் இழந்தோம் ஒரு நொடியில் உன் பிரிவால்
ஏங்கித் தவிக்கின்றோம் உன் அன்பு பாசத்திற்காய்
எம்மைத் தவிக்கவிட்டு ஏன் சென்றாய் ? எம் தாயே !
கண்களில் நீர் ஆறாய்ப் பெருகுதம்மா எம்மைத் தேற்ற
நீ வாராயோ மீண்டும்

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவர், மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

இராமன் வளவு,
அச்சுவேலி, யாழ்ப்பாணம். (1727) (14,18)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் சுகாதாரத் துறை தரமான சேவை வழங்குகிறது

## வடக்கு சுகாதார அமைச்சர் பெருமிதம்

யாழ்ப்பாணம், மே 31

இலங்கையின் சுகாதாரத் துறை ஏனைய தெற்காசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் தரமான சேவையை வழங்கி வருகின்றது. -இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.



வவுனியா - புதுக்குளம் மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு குருதிக் கொடை நிகழ்வும், மருத்துவ முகாமும் நேற்றுப் பாடசாலை வளாகத்தில் நடைபெற்றது.

ஆரம்ப விழாவில் விருந்தினர்களாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சரும், பாடசாலையின் பழைய மாணவருமாகிய மருத்துவர் ப. சத்தியலிங்கம், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர்சி.சிவமோகன், பாடசாலையின் பழைய மாணவனும், உளநல மருத்துவருமாகிய வைத்தியர் சி.சுதாகரன், ஓமந்தை கோட்டக் கல்வி அதிகாரி தா.அமிர்தலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பாடசாலையின் அதிபர் சுபாஸ்கரன் தலைமையில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், பாடசாலையின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இவ்வாறான சமூகப் பணியொன்றை ஒழுங்கு செய்தமைக்காக பாடசாலை பழைய மாணவர் சங்கத்துக்கும் பாடசாலை நிர்வாகத்தினருக்கும் பாராட்டுதல்களைத் தெரிவிக்கின்றேன்.

அத்தோடு இலங்கையின் சுகாதாரத் துறை ஏனைய தெற்காசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் தரமான சேவையை வழங்கி வருகின்றது. தொற்று நோய்களைக் கட்டுப்படுத்தினாலும், தொற்றாத நோய்களால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

இவ்வாறாக தொற்றாத நோய்களின் தாக்கம் அதிகரிப்பதற்கு தொழில் நுட்ப சாதனங்களின் அதி கூடிய பாவனையும் காரணமாக அமைந்துள்ளது - என்றார்.

அங்கு உரையாற்றிய நாடாளுமன்றஉறுப்பினர் சிவமோகன், இலங்கையில் அதிகளவிலான உயிரிழப்புக்கள் தொற்றா நோய்களின் தாக்கத்தாலும், விபத்துக்களாலும் ஏற்படுகின்றன என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக் கின்றன.

குறிப்பாக மூன்றில் இரண்டு பங்கு உயிரிழப்புக்கள் தொற்றாத நோய்களால் ஏற்படுகின்றன. இவ்வாறான மருத்துவ முகாம்களை கிராமங்களில் நடத்துவதானது பாராட்டப்பட வேண்டியதாகும் - என்றார். (ற-ஜ-5)

## தேசிய சுற்றாடல் வார நிகழ்வுகள் ஆரம்பம்

தென்மராட்சி பிரதேச செயலகத்தின் உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு தேசிய சுற்றாடல் வார நிகழ்வுகள் நேற்றுக் காலை ஆரம்பமானது.

காலையில் பிரதேச செயலக வளாகத்தில் சிரமதானப் பணிகளில் ஈடுபட்ட பிரதேச செயலக அலுவலர்கள், அதன் பின்னர் பிரதேச மக்களின் பங்களிப்புடன் கைதடிப் பிரதேசத்தில் காணப்பட்ட பாதீனியம் செடிகளை அழிக்கும் பணிகளில் ஈடுபட்டனர். (ற-ஜ-9)

## பாடசாலைக்குச் செல்லாத சிறுவரை கண்காணிக்கும் பணிகள் ஆரம்பம்

சாவகச்சேரி,மே 31

சாவகச்சேரி நீதிமன்ற எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பாடசாலைக்குச் செல்லாத சிறுவர்கள் தொடர்பாகவும், சிறுவர்களை வேலைக்கு அமர்த்துபவர்களை கண்காணிக்கும் பணிகள் நீதிமன்ற சிறுவர் பிரிவால் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முதல் நடவடிக்கையாக நேற்று திங்கட்கிழமை நுணாவில் மத்திப் பகுதியில் களப் பரிசோதனைகள் மேற்கொள்ளப் பட்டன. பரிசோதனையில் நீதிமன்ற சிறுவர் பிரிவினருடன், தென்மராட்சி பிரதேச செயலக சிறுவர் பிரிவினர் தென்மராட்சி கல்வி வலய சிறுவர் பிரிவினர் ஆகியோர் கூட்டாக களப் பரிசோதனையில் ஈடுபட்டு, பாடசாலை செல்லாத சிறுவர்கள் பற்றியும், சிறுவர்களை வேலைக்கு அமர்த்துபவர்களை கண்டுபிடிக்கும் நடவடிக்கையிலும் ஈடுபட்டனர்.

அலுவலர்கள் களப் பரிசோதனையில் ஈடுபட்டபோது சிறுவர்கள் அனைவரும் பாடசாலைக்குச் சென்றுள்ளதை அவதானித்து, சிறுவர்களை வேலைக்கு அமர்த்துபவர்களை இனங்கண்டு எச்சரிக்கை செய்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ற-ஜ-9)

## மந்துவில் பாரதி வித்தியாலயத்தில் சாதனை மாணவர்கள் கௌரவிப்பு

சாவகச்சேரி,மே 31

மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயத்தில் கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்று சாதனை படைத்த மாணவர்களும், 2014-2015 ஆகிய வருடங்களில் தேசிய மட்டத்தில் சாதனை படைத்த மாணவர்களும் அண்மையில் கௌரவிக்கப்பட்டனர்.

அதிபர் திருமதி ஆ.இராசரத்தினம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சி.சிவநாதன் கலந்து கொண்டார்.

இதன்போது, கடந்த க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் வித்தியாலயத்தில் 9 அதி சிறப்புச் சித்தி பெற்ற மாணவி இ.சாம்பவிக்கு, பிரதமவிருந்தினர் பரிசுப் பொருள்களையும் நினைவுச் சின்னத்தையும் வழங்கினார்.

கடந்த வருடம் தேசிய மட்ட சமூக விஞ்ஞானப் போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்ற இதே மாணவிக்கு,வலய சமூக விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகர் நாகராசா தங்கப் பதக்கம் அணிவித்துக் கௌரவித்தார்.

ஏனைய மாணவர்களுக்கு வலய அழகியற் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி வி.சுனில்ஆரியரத்னவும், ஓய்வுநிலை தமிழ்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் க.சின்னத்துரையும் பரிசுப் பொருள்களையும், நினைவுச் சின்னங்களையும் வழங்கினர். (ற-ஜ-9)

## வெற்றிலைக்கேணிக் கடற்பரப்பில் தென்னிலங்கை மீனவர்கள் கைது

யாழ்ப்பாணம்,மே 31

வெற்றிலைக்கேணிக் கடற்பரப்பில் சட்ட விரோதமான முறையில் தொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில், தென்னிலங்கை மீனவர்கள் 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மாவட்ட நீரியல்வளத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் ரமேஸ்கண்ணா தெரிவித்துள்ளார்.இது தொடர்பில்அவர்தெரிவித்துள்ளதாவது- யாழ்ப்பாண மாவட்ட எல்லைப்பரப்புக்குள் உள்ள வெற்றிலைக்கேணிக் கடற்பரப்பில், சட்டவிரோதமான முறையில் அட்டைத் தொழிலில் ஈடுபட்ட தென்னிலங்கை மீனவர்கள் 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், இவர் கள் பயன்படுத்திய 3 படகுகளும் எம்மால் கையகப்படுத்தப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்டவர்களிடம் குறித்த தொழிலுக்கான அனுமதிகள் இருக்கவில்லை. இவர்கள் அனைவரும் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர். - என்றார். (ற-ஜ-101)

## பனம் உற்பத்தியாளர்களை பதிவு செய்ய நடவடிக்கை

யாழ்ப்பாணம், மே 31

பனம் பொருள் உற்பத்தியாளர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கை பனை அபிவிருத்தி சபையால் மேற்கொள்ளப் பட்டுள்ளது என்று அதன் தலைவர் தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டுள்ளது. [illegible] பயனாளிகளை தெரிவு செய்யும் நோக்குடன் பனை சார் உணவு மற்றும் கைப்பணி உற்பத்தியில் ஈடுபட்டு வரும் அல்லது ஈடுபடுவதற்கு ஆர்வமாக உள்ளவர்கள் தங்கள் பதிவை மேற்கொள்ளலாம்.

பதிவு செய்ய விரும்பும் பயனாளிகள், தத்தமது பிரதேச செயலகங்களிலோ அல்லது பனை அபிவிருத்திச் சபையின் மாவட்டக் காரியாலயங்களிலோ விண்ணப்பத்தைப்பெற்று, முழுமைப் படுத்தி, மாவட்டக் காரியாலயங் களுக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவேண்டும்என்று அவர் தெரிவித்துள்ளார். (ற-ஜ-ரி)

## குடும்பஸ்தர் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், மே 31

கடையில் பொருள்கள் வாங்கிக் கொண்டிருந்த குடும்பஸ்தரை இனந்தெரியாத சிலர் வெளியே அழைத்து மோசமாகத் தாக்கி விட்டு தப்பியோடியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலுக்கு இலக்கான கைதடியைச் சேர்ந்த 32 வயது குடும்பஸ்தர் சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு கைதடிச் சந்தியில் உள்ள கடையில் பொருள்கள் வாங்கிக் கொண்டிருந்த வேளையில், வெளியே அழைத்துத் தாக்கினர் என்றும், சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த பின்னர் - பொலிஸார் வைத்தியசாலையில் சேர்த்தனர் என்றும் - தாக்குதலுக்கு இலக்கான நபர் தெரிவித்தார். (ற-ஜ-5-9)

## மதிலுடன் மோதி இருவர்படுகாயம்

அளவெட்டி, மே 31

மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் மதிலுடன் மோதி விபத்துக்குள்ளாகிப் படுகாயமடைந்துள்ளனர். அளவெட்டி நெசவுசாலை வீதியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இந்த விபத்து இடம் பெற்றது.

அதிகாலை 4 மணியளவில் விபத்து இடம்பெற்றது என்றும் தூக்க கலக்கம் காரணமாகவே விபத்து ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இதில் தெல்லிப்பழை மற்றும் அளவெட்டியைச் சேர்ந்த இருவர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றனர். (ற-ஜ-4,36)

## குக்கர் வெடித்து பெண் காயம்

யாழ்ப்பாணம், மே 31

சமையலில் ஈடுபட்டிருந்த குடும்பப் பெண், பிறசர் குக்கரைத் திறக்க முற்பட்ட போது அது வெடித்ததால், முகத்தில் பலத்த காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் அளவெட்டியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த 34 வயதுடைய பெண்ணே காயமடைந்தார். தனது வீட்டில் மதிய உணவு தயாரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தபோது, குக்கரைத் திறக்க முற்பட்ட வேளையிலேயே அது வெடித்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பெண் முதலில் தனியார் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுப், பின்னர் யாழ். போதனா வைத்திய சாலைக் மாற்றப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-ஜ-4,101)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தரப்படுத்தலுக்கு எதிராகப் போராடியோர் இன்று அதனை ஆதரிக்கும் நிலையில்

## மாகாணசபை உறுப்பினர் கஜதீபன் தெரிவிப்பு




யாழ்ப்பாணம், மே 31
தரப்படுத்தல் முறைக்கு எதிராக ஒரு காலத்தில் போராடிய எமது இனம், இன்று அதே தரப்படுத்தல் முறையை ஆதரிக்கும் நிலையில் உள்ளது. இதனை மாற்றியமைக்க வேண்டும். அதற்குரிய வகையில் எமது இனம் கல்வியில் மேம்பாடடைய வேண்டும். அதற்கான ஒரு முயற்சியாகவே இந்த மாநாடுகள் நடத்தப்படுகின்றன. -இவ்வாறு வட மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் தெரிவித்துள்ளார்.

வலிகாமம் வலய ஆசிரியர் மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்வில் விருந்தினர்களில் ஒருவராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது-

மாநாடுகள் நடத்தப்படுவதன் நோக்கம், இதுவரை செய்யப்பட்ட சேவைகளுக்காக பாராட்டுத் தெரிவிப்பதற்காக மட்டுமன்றி, இன்னமும் செய்யவேண்டி இருக்கின்ற செயற்பாடுகளை ஞாபகப்படுத்துவதற்காகவும் தான்.

அது எந்த மாநாடாக இருந்தாலும் அதன் நோக்கம் இவ்வாறாகவே இருந்து வருகிறது. எங்களுடைய மாகாணத்தின் கல்வி நிலையை மேம்படுத்த வேண்டும் என்பதற்காக தொடர்ச்சியாக அர்ப்பணிப்போடு உழைத்து வருகின்ற ஆசிரியர்களைக் கௌரவிக்கும் அதேவேளை, வீழ்ச்சியடைந் திருக்கும் மாகாணத்தின் கல்வி நிலையைத் தூக்கி நிறுத்த வேண்டிய பெரிய பொறுப்பான கடமையின் பெரும்பகுதி ஆசிரியர் சமூகத்திடம் இருக்கிறது என்பதை, ஞாபகப்படுத்தி அதற்கான பாதையில் ஆசிரியர்களை மேலும் வேகமாகப் பயணிக்க வைப்பது இந்த மாநாட்டின் நோக்கமாக இருக்கிறது.

ஒரு காலத்தில் தரப்படுத்தல் முறைக்கு எதிராக இந்த மண்ணில் மாணவர்கள் திரண்டு போராடியிருக்கிறார்கள். இன்றைக்கு நிலைமைகள் மாறி தரப்படுத்தல் வேண்டும் எனும் நிலைமைக்கு நாம் வந்திருக்கிறோம். இதற்குப் பல்வேறான காரணங்கள் உண்டு. நாட்டில் மிக நீண்ட காலமாக நடந்த போர் இன்றும் மாற்று வழிகளில் மாணவர்கள் மீது நடந்து கொண்டு இருக்கிறது. இதுவும் ஒரு காரணம்.

அதைப்போல இந்த மண்ணிலிருந்து கல்வியறிவால், செல்வச் செழிப்பால் மேம்பட்டிருந்தவர்களாகக் கருதப்பட்டவர்கள் வெளியேறிச் சென்று விட்ட பிறகும் இந்த மண்ணின் மீது பாசம் கொண்டவர்களாக, இந்த மண்ணிலேயே வாழ்பவர்கள், அதைப் போன்று, இந்த மண்ணை விட்டு வெளியேற வாய்ப்பில்லாதவர்கள், இவ்வாறாக பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பவர்கள், அதைப்போல போரின் காரணமாக பெற்றோரை இழந்தவர்கள் இப்படியான பிரிவினர்கள் தான் இந்த மண்ணிலே இன்றைக்கு எஞ்சியிருக்கிறோம்.

இப்படியான சவால்களையும் தாண்டி எமது மாணவர்களின் கல்வியைத் தங்களால் முடிந்த அளவுக்கு மேம்படுத்திக் கொண்டிருக்கும் ஆசிரிய நண்பர்களை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

40 ஆயிரம் மாணவர்களையும், 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்களையும், மூன்று நாடாளுமன்றத் தொகுதிகளையும், தலா நான்கு பிரதேச செயலகங்கள் மற்றும் பிரதேச சபைகளையும் கொண்ட மிகப் பரந்த நிலப் பரப்பைக் கொண்ட இலங்கையில், இருக்கக்கூடிய மிகப் பெரிய கல்வி வலயங்களில் ஒன்றாகதிகழும் வலிகாமம் கல்வி வலயம் வட மாகாணத்தின் கல்வி நிலையில் பெரிய பங்களிப்பை வழங்குகின்ற ஒன்றாக இன்றும் திகழ்கிறது.

153 பாடசாலைகளைத் தன்னகத்தே கொண்டிருந்தாலும் இன்றுவரை 25 ஆண்டுகளுக்கு மேலாக உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் இன்னும்கூட பல பாடசாலைகளை திறக்க முடியவில்லை. ஒரு காலத்தில் நகர்ப்புறப் பாடசாலைகளை மிஞ்சும் அளவுக்கு வலிகாமப் பாடசாலைகளின் செயற்பாடுகள் இருந்து வந்தன. மீண்டும் அந்த நிலைமையைக் கொண்டுவருவதற்கு இந்த மாநாடு உதவி செய்ய வேண்டும்.

எமது பாடசாலைகளில் எமது மாணவர்களை இணைப்பதற்கு பெற்றோர்கள் முண்டியடிக்கும் நிலைமைக்கு எமது பாடசாலைகளைக் கொண்டு வரவேண்டும். எமது மாணவர்கள் நகர்ப்புறங்களை நோக்கி நகர்கிறார்கள் என்று குற்றச்சாட்டுக்களைச் சொல்கிறோம். ஆனால் அந்த மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் தாமாக விரும்பி எமது அயல் பாடசாலைகளில் இணைய முன்வருகின்ற நிலைமையை நாம் ஏற்படுத்தியே ஆக வேண்டும். அதுதான் இந்த மாநாட்டின் வெற்றியாக அமைய முடியும் - என்றார். (ற-ஐ-5)

---

### கைதிகளுக்கு கைப்பணி பயிற்சிகள்

யாழ்ப்பாணம், மே 31
யாழ். சிறைச்சாலையில் உள்ள சிறைக்கைதிகளுக்கு கைப்பணிப் பயிற்சி, எழுத்தறிவூட்டல் வகுப்புக்கள் என்பவை இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளன என்று யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் தெய்வேந்திரராஜா தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலை அத்தியட்சகர் எச்.ஏ.சி. பெரேரா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா கலந்துகொள்ளவுள்ளார்.

இந்தப் பயிற்சி நெறியை ஆரம்பிப்பதன் மூலம் கைதிகள் மத்தியில் சிறந்த அழகியல் உணர்வை வளர்ப்பதோடு குற்றச் செயல்களில் ஈடுபடாது தமது வாழ்வை நெறிப்படுத்திக் கொள்வதற்கும் சுயதொழிலில் ஈடுபட்டு வருமானத்தை ஈட்டுவதற்கும் வழிகாட்ட வாய்ப்பு ஏற்படுகிறது.

யாழ். வலயக் கல்வி அலுவலக முறைசாராக் கல்விப் பிரிவினால் நடத்தப்படவுள்ள இந்த வகுப்பில் யாழ். முறைசாரா கல்விப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் த.சிவகுமார், கைப்பணிப் பயிற்சி நெறியின் வளவாளராகச் செயற்படவுள்ளார் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-ஐ-ரி)

---

# மூளை முடக்குவாதப் பாதிப்பு மன்னாரில் மருத்துவ முகாம்



மன்னார்,மே 31
மன்னார் நகர பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மூளை முடக்குவாதம் மற்றும் அவை சார்ந்த பாதிப்புக்களையுடைய 18 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கான மருத்துவ முகாம் ஒன்று மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இடம்பெற்றுள்ளது.

மூளை முடக்குவாதம் சார்ந்த பாதிப்புக்களையுடைய சிறுவர்கள் கல்வி கற்பதற்கும், அன்றாடச் செயற்பாடுகளை செய்வதற்கும், இயன் பயிற்சிகள் மற்றும் உதவித்திட்டங்களைப் பெறுவதற்கும் மருத்துவச் சான்றிதழ் இல்லாமையால் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

அத்துடன் இந்தச் சிறுவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் வலுவிழப்பு முறையாக பகுப்பாய்வு செய்யப்பட்டு, அடையாளம் காண முடியாமலும், முறையான மருத்துவ அத்தாட்சிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ள முடியாமலும், பொருத்தமான சக்கர நாற்காலி மற்றும் ஆதார உபகரணங்களைப் பெற்றுக் கொள்ள முடியாமலும், அவர்களது பெற்றோர் பெரும் சிரமங்களை எதிர் நோக்கியமையால் அந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்யும் நோக்கத்துடனேயே இந்த மருத்துவ முகாம் இடம்பெற்றது என்றுதெரிவிக்கப்பட்டது

குறித்த மருத்துவ முகாமில் 34 பிள்ளைகள் பங்குபற்றியதோடு 34 பிள்ளைகளுக்கும் மருத்துவச்சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. 12 பிள்ளைகளுக்கு இயன் பயிற்சி வழங்கப்பட்டது. 7 பிள்ளைகளுக்கு பொருத்தமான சக்கர நாற்காலிகள் மற்றும் ஆதார உபகரணங்கள் வழங்குவதற்கான அளவுத் திட்டங்கள் எடுக்கப்பட்டு, உரிய காலத்தில் இவற்றை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அவசரமாகத் தேவைப்பட்ட பிள்ளையொன்றுக்குப் பொருத்தமான சக்கர நாற்காலி வழங்கப்பட்டுள்ளது.

இந்த மருத்துவ முகாமானது இலங்கையின் வடபகுதியில் மூளை முடக்குவாதம் மற்றும் அது சார்ந்த பாதிப்புக்களையுடைய சிறுவர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துதல் என்னும் திட்டத்தின் கீழான ஒரு நிகழ்ச்சித்திட்டம் எனவும், ஜேர்மனிய அரசின் பொருளாதார அமைச்சின் நிதி அனுசரணையுடனும், பல்வேறு அமைப்புக்களின் தொழில் நுட்ப உதவியுடனும் நடத்தப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-21,56)

---

### சாவகச்சேரி நகரசபையால் சுற்றாடல் வார நிகழ்வுகள்

சாவகச்சேரி,மே 31
உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகரசபையின் தேசிய சுற்றாடல் வார நிகழ்வுகள் நேற்றுக் காலை செயலாளர் கா.சண்முகதாசனால் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

எதிர்வரும் ஆறாந் திகதிவரை நடைபெறவுள்ள சுற்றாடல் வார நிகழ்வுகளில் குறிக்கப்பட்ட இடங்களில் துப்புரவுப் பணிகள் இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை இறுதித் திண்மப் பராமரிப்பு நிலையப் பகுதி துப்புரவு செய்தலும், நாளை புதன்கிழமை முருகமூர்த்தி கோவில் வீதிகள் துப் புரவு செய்தலும், நாளை மறுதினம் வியாழக்கிழமை கிராம்புவில் மேற்கு வீதி துப்புரவு செய்தலும் இடம்பெறும்.

எதிர்வரும் மூன்றாம் திகதி வெள்ளிக்கிழமை மீன் சந்தை, பள்ளிவாசல் பகுதி துப்புரவு செய்தல் மற்றும் கழிவுகள் வேறுபடுத்தல் தொடர்பாக உணவக உரிமையாளர்களுக்கான விழிப்புணர்வுக் கலந்துரையாடல் நடத்துதலும், நான்காம் திகதி சனிக்கிழமை சாவகச்சேரி பொது விளையாட்டு மைதானம் துப்புரவு செய்தலும், ஐந்தாம் திகதி ஞாயிற்றுக்கிழமை மரம் நடுகை செயற்படுத்துதலும் , உலக சுற்றாடல் தின இறுதி நிகழ்வுகளும் இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிய நீர்ப்பாசனக் குளங்களை புனரமைத்துத் தர வேண்டும்

## ஒட்டுசுட்டான் விவசாயிகள் கோரிக்கை

முல்லைத்தீவு, மே 31

எந்தவிதமான புனரமைப்பு வேலைத்திட்டங்களும் இன்றிக் காணப்படும் ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட சிறிய நீர்ப்பாசனக் குளங்களை உரிய முறையில் புனரமைத்துத் தருமாறு அந்தப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் தெரிவித்துள்ளதாவது-

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட சிறுகுளங்களான சின்னக்குளம், கட்டைக்காட்டுக் குளம், வெடுக்குநாறிக் குளம். கற்சிலைமடுக் குளம், பணிக்கன் குளம் என்பவற்றில் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் எதுவும் இடம்பெறாமையால், குறித்த குளங்களின் கீழ் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகள் பலர் பாதிப்படைந்துள்ளனர்.

> அண்மையில் கொட்டித் தீர்த்த கடும் மழை காரணமாக முல்லைத்தீவில் பல குளங்கள் வான் பாய்ந்தன. அது போன்றே ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட பல குளங்களும் வான் பாய்ந்தன.

அண்மையில் கொட்டித் தீர்த்த கடும் மழை காரணமாக முல்லைத்தீவில் பல குளங்கள் வான் பாய்ந்தன. அது போன்றே ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட பல குளங்களும் வான் பாய்ந்தன.

குறித்த இந்தச் சிறிய நீர் பாசனக் குளங்களுடைய கட்டுகளின் ஓட்டைகள் சீராக அமைக்கப்படாமையால், குளக்கட்டு உடைப்பெடுக்கும் அபாயம் காணப்பட்டது. அதே போன்று சின்னக் குளம் குறித்த ஓட்டையின் மூலம் உடைப்பெடுத்தது. சின்னக்குளம் 2008 ஆம் ஆண்டு உடைப்பெடுத்த நிலையில் 8 வருடங்களாக இன்னமும் புனரமைக்கப்படவில்லை.

எனவே குறித்த குளங்களை நம்பி காலங்காலமாக விவசாயத்தை மேற்கொள்ளும் நாம் குறித்த குளங்கள் புனரமைக்கப்படாமல் இருப்பதால் தொடர்ச்சியாக பாதிப்புக்களை எதிர் கொள்கின்றோம்.

எனவே அதிகாரிகள் இந்தக் குளங்களுடைய புனரமைப்பு வேலைகளையும், விரைவாக முன்னெடுத்து விவசாயிகளுடய நலனில் அக்கறை கொள்ளுமாறு கேட்டு கொள்கின்றோம்.-என்று தெரிவித்தனர்.

இது தொடர்பில் மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள ஆணை யாளரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது-

ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்குட்பட்ட புனரமைக்க வேண்டிய குளங்கள் எவை என்பது அவதானிக்கப்டடு அந்தக் குளங்கள் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளன. விவசாயிகள் ஏன் இவ்வாறு கூறுகின்றார்கள் என்று தெரியவில்லை. இருந்தாலும் எந்தக் குளம் தங்களுக்குப் பிரச்சினையாக உள்ளது என்பது தொடர்பாக ஆவணங்களை கமநல சேவைகள் நிலையத்தில் கொண்டு வந்து தந்தால், அந்தக் குளங்கள் தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்படும். -என்றார். (ற-ஜ-21,ரி7,500)

## கர்ப்பிணிகளின் போசாக்கு உணவை சங்கங்கள் ஊடாக விநியோகிக்கவும்

### சிறுவர் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 31

கர்ப்பிணிகளுக்கான போசாக்கு உணவு விநியோகத்தை தொடர்ந்தும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக விநியோகிப்பதற்கு நடவடிக்கை மேற் கொள்ளுமாறு சிறுவர் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மனு ஒன்றை யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் எஸ்.குமரவேல், இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனிடம் கையளித்துள்ளார்.

அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது-

யாழ்.மாவட்டத்தில் 24 பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை அங்கத்துவமாகக் கொண்டு சமாசம் செயற்பட்டு வருகின்றது. கடந்த மூன்று சகாப்தமாக மக்கள் அசாதாரணமான சூழ்நிலையிலும், மிகவும் நெருக்கடியான சூழ்நிலையிலும் இருந்த காலத்தில் கூட அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்பட்ட பொருள்களைச் சங்கங்கள் மிகச் சிறப்பாக மக்களுக்கு விநியோகித்துவந்தன.

தற்போது இந்தக் கர்ப்பிணிகளுக்கான போசாக்கு உணவுப் பொருள்கள் விநியோகத்தில் தனியார் வர்த்தக நிலையங்களும் இணைக்கப்படவுள்ளன என்று தகவல்கள்மூலம் அறியமுடிந்தது.

இந்த விநியோகத்தைத் தொடர்ந்தும் சங்கங்கள் ஊடாக விநியோகிப்பதற்கும், தற்போதைய நிலையில் நலிவுற்று இருக்கும் கூட்டுறவுச் சங்கங்களை மேம்படுத்தவும், மேற்படி போசாக்கு விநியோகம் மூலம் கூட்டுறவுத் துறையை மேம்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.- என்றுள்ளது. (ற-ஜ-17)

## புதூர் நாகதம்பிரான் ஆலயப் பொங்கல்

வவுனியா,மே 31

வவுனியா மாவட்டத்தில் உள்ள மிகவும் பிரசித்தி பெற்ற ஆலயமான புதூர் நாகதம்பிரான் ஆலயத்தின் மாபெரும் பொங்கல் நிகழ்வு ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் பொங்கல் விழாவானது எதிர்வரும் திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது என்று ஆலயத்தின் பரிபாலன சபையினர் தெரிவித்தனர்.

ஆலயத்துக்கு வருகை தரும் அடியார்களுக்கான சுகாதாரம், குடிதண்ணீர் போன்ற வசதிகள் முன்னேற்பாடாக மேற்கொள்ளப்படவுள்ளன.

(ற-ஜ-500)

## புனருத்தாரண கூட்டமும் புதிய நிர்வாக தெரிவும்

யாழ்ப்பாணம்,மே 31

வலிகாமம் வடக்கு இந்து ஆலயங்களின் மீள் புனருத்தாரண சபைக் கூட்டம் தெல்லிப்பழை லயன்ஸ் கழக மண்டபத்தில் தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலர் பா. ஜெயகரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்த ஆரம்பக் கூட்டத்தில் மாவை சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபையின் செயலாளரும், வலி.வடக்குச் செஞ்சிலுவைச் சங்கத்தின் செயலாளருமான சி.நாகேஸ்வரன் தலைவராகவும், வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் தா. நிகேதன் செயலாளராகவும், வவுனியா பல்கலைக் கழக வளாகப் போதானாசிரியர் சி.சந்தான கிருஷ்ணன் பொருளாளராகவும், ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர் திருமதி அ.ஞானேஸ்வரி உப தலைவராகவும், எஸ்.ரஞ்சிதன் உப செயலாளராகவும், ச.லக்ஷிகா பத்திராதிபராகவும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் வைத்திய கலாநிதி பி.நந்தகுமார், கீரிமலை ரேணுகா ஆச்சிரம பீடாதிபதி சிவஸ்ரீ உருத்திர புரீஸ்வரக் குருக்கள், மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய திருப்பணிச் சபைச் செயலாளர் ஆர். பேரின்பநாயகம், அகில இலங்கை சைவ மகா சபையின் செயலாளர் வைத்திய கலாநிதி ப. நந்தகுமார், தெல்லிப்பழை பிரதேச செயலர் சிறிமோகனன் ஆகியோர் போஷகர்களாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

சட்டத்தரணிகளான ஜெ.ஜெயரூபன், கு.புரந்திரன் ஆகியோர் சட்ட ஆலோசகர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் வலிகாமம் வடக்கில் மீள் குடியமர்த்தப்பட்ட மற்றும் மீள்குடியமர்த்தப்படவுள்ள 17 கிராம சேவகர் பிரிவுகளையும் பிரதி நித்துவப்படுத்தும் வகையில் 17 உறுப் பினர்கள் தெரிவும் நடைபெற்றது.

இந்த அங்குரார்ப்பணக் கூட்டத்தில் வலி.வடக்குப் பிரதேசத்தைச் சேர்ந்த ஆலயங்களின் நிர்வாக சபை உறுப்பினர்கள், அறநெறிப் பாடசாலை நிர்வாகிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், அகில இலங்கை சைவ மகா சபையின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற-ஜ)

## புதிய நிர்வாகம் தெரிவு

அளவெட்டி, மே 31

யாழ்.போதனா வைத்திய சாலை சௌக்கிய சேவை சிக்கனக் கடன் நிவர்த்திக் கூட்டுறவுச் சங்கத்துக்குப் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதன் தலைவராக செ.பேரின்பநாதன், செயலாளராக க.நற்குணராசா, பொருளாளராக சி.பாக்கியலிங்கம், உபதலைவராக எஸ்.சகானந்தன் ஆகியோருடன் மேலும் 7 பேர் நிர்வாக உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ற-ஜ-36)

## இரவு திருடிய மோட்டார் சைக்கிள் காலையில் கராஜில் விற்பனைக்கு

யாழ்ப்பாணம், மே 31

குருக்கள் வீட்டில் இரவில் திருடப்பட்டு, காலையில் விற்பனைக்கு விடப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் மீட்கப்பட்டுள்ளது என்றும், அதனைத் திருடிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் திருட்டு அச்சுவேலியில் நேற்று முன்தினமிரவு இடம்பெற்றது. குறித்த திருட்டுத் தொடர்பில் மோட்டார் சைக்கிள் உரிமையாளர் அச்சுவேலி பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார். அதன்படி விசாரணை மேற்கொள்ளப்பட்டு மோட்டார் சைக்கிள் மீட்கப்பட்டது என்றும், சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

அதே இடத்தைச் சேர்ந்த நபர் ஒருவரே, வீடு புகுந்து மோட்டார் சைக்கிளைத் திருடியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் நேற்றுக் காலை கராஜ் ஒன்றில் விற்பனைக்கு விடப்பட்டிருந்த நிலையில் அது மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். கைது செய் யப்பட்ட சந்தேகநபர் தற்போது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் பொலிஸார் தெரிவித் தனர். (ற-ஜ-4)

## பிறந்து 46 நாள்களேயான குழந்தை சளியால் சாவு

யாழ்ப்பாணம், மே 31

பிறந்து 46 நாள்களேயான இரட்டைக் குழந்தைகளில் ஒரு குழந்தை சளியால் பாதிக்கப்பட்டு நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் வேலணை கிழக்கில் நடந்துள்ளது. பிரதீப் குமார் கரீணா என்ற பெண் சிசுவே சளி காரணமாக பரிதாபமாக உயிரிழந்துள்ளது என்று ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

அதிகாலை ஒரு மணியளவில் தூங்கிக் கொண்டிருந்த குழந்தைகளில் ஒரு குழந்தை அழுதுள்ளது. அந்தக்குழந்தையைத் தூக்கிய தாய் தன்னுடன் அணைத்து பால் ஊட்டியுள்ளார். மற்றைய குழந்தைக்கு பால் ஊட்டுவதற்கு தூக்கிய போது உடல் குளிர்வடைந்த நிலையில், குழந்தை அசைவற்றுக் காணப்பட்டதனைத் தாயார் உணர்ந்துள்ளார்.

உடனடியாக வேலணை பிரதேச வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போதும், குழந்தை ஏற்கனவே உயிரிழந்து விட்டது என்று வைத்தியர்கள் கூறினர்.

தீவுப்பகுதிக்கு பொறுப்பான இறப்பு விசாரணை அதிகாரி இறப்பு விசாரணைகளை மேற்கொண்டார் எனப் பொலிஸார் கூறினர். இறந்த குழந்தைக்கு சளிப் பாதிப்பு இருந்துள்ளது என்றும், அதற்குப் பெற்றோர் வைத்தியசாலையில் சிகிச்சை வழங்கியிருந்தனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

(ற-ஜ-4,107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வைச் சீர்குலைக்கின்றார் வட மாகாண முதலமைச்சர்

## வாசுதேவ நாணயக்கார கூறுகின்றார்

கொழும்பு, மே 31



தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் தலையீட்டைக் கோருவதன் மூலம், வடக்கு முதலமைச்சர் விக்கினேஸ்வரன் தமிழர் பிரச்சினைத் தீர்வை சீர்குலைக்கின்றார் என்று மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சம்பந்தன் மற்றும் அரசு உட்பட எதிர்க் கட்சியில் எம்மைப் போன்ற சிலர் இணைந்து வடக்கு - கிழக்கு தமிழர் பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதற்கு முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றோம். பிரச்சினைகள் தீரும் நிலை ஏற்பட்டு வருகின்றது.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் வடமாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரன் பிரச்சினைகளை மீண்டும் ஆரம்ப நிலைக்குக் கொண்டு செல்லும் முயற்சியை முன்னெடுக்கின்றார்.

அதாவது தமிழ் நாட்டு முதலமைச்சர் ஜெயலலிதாவின் தலையீட்டைக் கோருவதன் மூலம், பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சிகளை சீர்குலைக்கின்றார். விக்கினேஸ்வரனின் செயற்பாடுகள் சிங்கள மக்கள் மத்தியில் மீண்டும் சந்தேக நிலையைத் தோற்றுவிப்பதாக உள்ளன.

ஏற்கனவே சிங்கள மக்கள் மத்தியில் அச்சம் குடிகொண்டுள்ளது. அதாவது தமிழ் நாட்டுடன் இணைத்து வடக்கு - கிழக்கு தமிழ் மக்களும், அரசியல்வாதிகளும் சிங்கள மக்களுக்குப் பாதகமான தீர்மானங்களை எடுப்பார்கள் என்ற அச்சமே அதுவாகும்.

அவ்வாறானதோர் நிலையில் விக்கினேஸ்வரன், ஜெயலலிதா இலங்கை விடயத்தில் தலையிட வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார். இது தீர்வை நோக்கி நகரும் பிரச்சினையை மீண்டும் ஆரம்ப நிலைக்கு கொண்டுசெல்லும்முயற்சியாகும். அத்தோடு அனைத்துத் தரப்பினரும் இணைந்து பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சிகளை மேற்கொண்டு வரும் நிலையில் அதனைத் திட்டமிட்டுச் சீர்குலைக்கும் செயலாகவே இது உள்ளது.

தமிழ் மக்களும் சிங்கள மக்களும் இணக்கப்பாட்டுடன் செயற்பட முன்வந்துள்ள சூழ்நிலையில், விக்கினேஸ்வரன் குழப்பத்தைஏற்படுத்தமுயற்சிக்கின்றார். ஜெயலலிதா தமிழ் நாட்டின் முதல்வரே தவிர ஜெயலலிதா என்பது இந்தியா அல்ல என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.- என்று கூறியுள்ளார். (ற-ஐ-5)

# திடீர் இடர் பாதிப்புக்களுக்கு இலங்கையர்களுக்கு நட்ட ஈடு

கொழும்பு,மே 31

இலங்கையின் ஒவ்வொரு பிரஜைகளுக்கும் திடீர் இடரின் போது, ஒரு லட்சம் ரூபாவில் இருந்து 10 லட்சம் ரூபா வரையான நட்டஈடு பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தேசிய நல்லாட்சிக்கான இந்த அரசு, ஆட்சிக்கு வந்ததன் பின்னர் மேற்கொண்ட தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியப் பாதுகாப்பின் காரணமாக இந்த வாய்ப்புக் கிடைத்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இணைந்து நாட்டின் அனைத்துக் குடிமக்கள் தொடர்பாக, காப்புறுதி பொறுப்பு நிதியத்தின் பாதுகாப்பை பெறுவதற்கு மேற்கொண்டிருந்த தீர்மான வரவு-செலவுத் திட்ட யோசனையின் ஊடாக, நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தக் காப்புறுதிப் பாதுகாப்புத் தொடர்பாக இலங்கையரால் வழங்கப்பட்டிருந்த பங்களிப்புத் தொகை 10 பில்லியன் ரூபாவாகும்.

சுவிற்சர்லாந்தை முன்னிலைப்படுத்தி, நடைமுறையில் உள்ள குளோம்பல் சவுத் ஏசியா சர்வதேச தேசியக் காப்புறுதி நிறுவனத்தின் ஊடாக, இலங்கையின் அனைத்துப் பிரஜைகளையும், காப்புறுதி செய்யும் பணத் தொகையை ஏப்ரல் மாதத்தின் ஆரம்பத்திலேயே செலுத்துவதற்கு அரசு செயற்பட்டிருந்தது.

இந்தப் பின்புலத்தின் கீழ், அண்மையில் ஏற்பட்டிருந்த வெள்ளப்பெருக்கு அச்சுறுத்தலால் விபத்துக்குள்ளாகி சொத்துச் சுகங்களை இழந்துள்ள ஒவ்வொரு பிரஜைக்கும் ஒரு இலட்சம் ரூபாவில் இருந்து 10 லட்சம் ரூபா வரையிலான நட்ட ஈட்டைப் பெற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பம் கிட்டியுள்ளது.

இயற்கை இடர் ஏற்படும் சந்தர்ப்பமொன்றில், ஏற்படும் உயிரிழப்புக்கு மேற்கூறிய காப்புறுதிப் பாதுகாப்பின் மூலம் உடனடியாக வழங்கப்படும் நட்ட ஈடு ஒரு இலட்சம் ரூபாவாகும்.

இயற்கை இடர்கள் காரணமாக அழிவுற்றுப் போன சிறிய அளவிலான வர்த்தகங்கள் தொடர்பாகவும், இந்தக் காப்புறுதியின் மூலம் ஒரு லட்சம் ரூபாவிலிருந்து 10 லட்சம் ரூபா வரையில் நட்ட ஈட்டைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு கிட்டியுள்ளது.

தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்தில் இணைந்து கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததாக, நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்திருந்தார். (ற-ஐ-22)

# அலைபேசியில் ஆபாசப்படம் முன்பள்ளி ஆசிரியை கைது

கொழும்பு, மே 31

அலைபேசியில் ஆபாசப் படங்களை வைத்திருந்த முன்பள்ளி ஆசிரியை ஒருவர், பலாங்கொடை சிவில் பாதுகாப்புப் படைத் தலைமையகத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான ஆசிரியை 41 வயதானவர். அத்துடன் திருமணமானவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஆசிரியையின் செயற்பாடுகள் குறித்து, ஏற்கனவே படை முகாமில் உள்ள பலரும் அதிகாரிகளுக்கு முறைப்பாடு செய்திருந்தனர்.

பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் கட்டளையிடும் அதிகாரியான கேர்ணல் புஞ்சி பண்டாரவால், ஆசிரியையின் அலைபேசி பரிசோதிக்கப்பட்டது என்றும், இதன் போதே ஆபாசப் படங்கள் சேமித்து வைக்கப்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து ஆசிரியை கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை அதிகாரிகள் முன்னெடுத்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற-ஐ-5)

## வெவ்வேறு விபத்துகளில் இருவர் சாவு

கொழும்பு, மே 31

வெள்ளவத்தை ரயில் நிலையத்துக்கு அருகில் நின்று கொண்டிருந்த நபர் ஒருவர், ரயில் மோதி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம் பெற்றுள்ளது.

முதியவர் ஒருவரே இவ்வாறு உயிழந்துள்ளார். நபர் குறித்து தகவல்கள் இன்னமும் அடையாளப்படுத்தப்படவில்லை என்றும் பொலிஸார் கூறியுள் ளனர்.

சம்பவம் குறித்து வெள்ளவத்தைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை, காலி - உடுகம வீதியின் காக்கியாதெனிய பிரதேசத்தில் நேற்று நடந்த வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

காலி நோக்கிச் சென்ற ஓட்டோவும், எதிரில் வந்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிளில் சென்ற நபர், உடுகம வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர் உயிரிழந்துள்ளார். 24 வயதான இளைஞரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

ஓட்டோ சாரதியை கைது செய்துள்ள யக்கலமுல்ல பொலிஸார், சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளைமேற்கொண்டு வருகின்றனர். (ற-ஐ-5)

## அரநாயக்க மண்சரிவில் புதையுண்ட அனைவரும் உயிரிழந்திருக்கலாம்

### அதிகாரிகள் உத்தியோகபூர்வமாக அறிவிப்பு

கேகாலை, அரநாயக்க மண்சரிவில் புதையுண்ட அனைவரும் உயிரிழந்திருக்கலாம் என நம்பப்படுகின்றது என்று அதிகாரிகள் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளனர்.

மண்சரிவில் புதையுண்டவர்களைத் தேடும் பணிகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமையுடன் நிறுத்தப்பட்டன.

இடர் முகாமைத்துவ மத்திய நிலைய உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி இதுகுறித்துத் தெரிவித்துள்ளதாவது-

இந்த மண்சரிவில் இதுவரை 67 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

மே மாதம் 17 ஆம் திகதியன்று ஏற்பட்ட இந்த மண்சரிவின் காரணமாக இன்னமும் 99 பேரின் சடலங்கள் கிடைக்கவில்லை.

இந்த நிலையில் அவர்கள் அனைவரும் உயிரிழந்திருக்கலாம் என்று கருதப்படுகின்றது.- என்றார். (ற-ஐ-5)

# தாஜுதீன் கொலை விவகாரத்தில் பொலிஸ் மா அதிபர் நழுவ முடியாது

## பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, மே 31

பிரபல ரக்பி வீரர் வசிம் தாஜுதீன் கொலை தொடர்பில், முன்னாள் பொலிஸ் மா அதிபர் நழுவிக் கொள்ள முடியாது என்று பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்றபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இலங்கையில் பிரபல்யமான ரக்பி வீரரின் கை கால்கள் உடைக்கப்பட்டு, தொடைப் பகுதி கிழிக்கப்பட்டு, இரகசிய உறுப்புக்கள் கண்ணாடித்துண்டுகளால் தாக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவத்துடன் யார் தொடர்புபட்டிருக்கின்றார்கள் ? கிருலப்பனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, நாரஹேன்பிட்டி



பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அனுர சேனாநாயக்க ஆகியோர் தொடர்பு பட்டிருக்கின்றார்கள்.

இந்தச் சம்பவம் தொடர்பில் முன்னாள் பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்கக்கோனும் நழுவிக் கொள்ள முடியாது. இலங்கக்கோன் இந்தச் சம்பவம் குறித்த அறிக்கை ஒன்றை பெற்றுக் கொண்டு, வாசித்து பின்னர் அதனைத் திருப்பி அனுப்பி விட்டார் என்று கேள்விப்பட்டோம். அதாவது உண்மையைத் தெரிந்து கொண்டு அமைதியாக இருந்துள்ளார். கொலையொன்றுக்கு உதவுவது, மறைமுகமாக அதனைப் பார்த்துப் பேசாமல் இருப்பது அல்லது நேரடியாக உதவுவது எல்லாமே ஒன்றுதான்.

எனினும் மக்களின் பணத்திலிருந்து சம்பளம் பெற்றுக்கொண்டு கொலையைப் பார்த்து விட்டு பார்க்காதது போல் இருப்பது பிழையானதாகும். இவ்வாறான விடயங்கள் கவனிக்கப்பட வேண்டும்.- என்று தெரிவித்துள்ளார். (ற-ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருக்கு வீடு நிர்மாணத்துக்கு நிபுணர்கள் குழு அங்கீகாரம்

கொழும்பு, மே 31

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 65 ஆயிரம் உருக்கு வீடுகளை நிர்மாணிப் பதற்கு நிபுணர் குழு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பேராதனைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த சிவில் பொறியியல் திணைக்களத்தின் உறுப்பினர்களை உள்ளடக்கிய இந்தக் குழு, யாழ்ப்பாணத்தில் நிர்மாணிக் கப்பட்டிருந்த இரண்டு மாதிரி வீடுகளை ஆராய்ந்திருந்தது. அதன் பின்னர் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

உள்நாட்டுப் போரால் இடம்பெயர்ந்தவர்களின் அவசரத் தேவையாக வீடமைப்புத் திட்டம் உள்ளது. அத்துடன் இதற்கான நிர்மாணப் பொருள்கள் மட்டுப் படுத்தப்பட்டுள்ளது. இதனை நிபுணர் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

> மொரட்டுவ பல் கலைக் கழகத்தின் சில பேராசிரியர்கள் இந்த வீடு தொடர்பில் ஆய்வு செய் திருந்தனர். அவர்கள் இந்த வீட்டுத் திட்டம் வடக்கு – கிழக்கு சூழலுக்குப் பொருத் தமற்றது என்று அறிக்கை வெளியிட்டிருந்தனர்.

பல்வேறு காரணங்களால் இந்த வீடமைப்புத் திட்டம் சர்ச்சைக்குரியதாகக் காணப்பட்டது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர், மக்கள் விடுதலை முன்னணியினர் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் உருக்கு வீடுகளுக் கான செலவினம்பொருத்தமற்றது எனத் தெரிவித்துள்ளனர்.

இந்த உருக்கு வீடுகளை நிர்மாணிப்பதற்கான முகவர் அமைப்பாக, ஆர்சிலோர் மிட்டாலை அரசு தெரிவு செய்திருந்தது. அந்தத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு முன்னர் அதன் சாதக பாதகத் தன்மைகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங் கவும் உன்னிப்பாக ஆராய்வார்கள் என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது.

அதேவேளை மீள்குடியேற்ற அமைச்சு இந்தத் திட்டம் தொடர்பாகச் சுயாதீன மதிப்பீட்டை மேற்கொள்வதற்காக பல்கலைக் கழகத்தை அணுகியிருந்தது. நிபுணர் குழு இந்த மாத முற்பகுதியில் அறிக்கை சமர்ப்பித்திருந்தது.

உத்தேச வீடுகளின் தற்போதுள்ள வடிவமைப்பில் சில முன்னேற்றங்களுக்கு அந்தக் குழு பரிந்துரைத்துள்ளது.

இதேவேளை, மொரட்டுவ பல்கலைக்கழத்தின் சில பேராசிரியர்கள் இந்த வீடு தொடர்பில் ஆய்வு செய்திருந்தனர். அவர்கள் இந்த வீட்டுத் திட்டம் வடக்கு - கிழக்கு சூழலுக்குப் பொருத்தமற்றது என்று அறிக்கை வெளியிட்டிருந்தனர்.

(ற-ஜ-5)

## கிணற்றிலிருந்து குழந்தையின் சடலம் மீட்பு

கொழும்பு, மே 31

திருகோணமலை தோப்பூர் பகுதியில் குழந்தை ஒன்றின் சடலம் கிணற்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது என்று பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

ஒன்றரை வயது ஆண் குழந்தையின் சடலமே கிணற்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது. சடலம் தோப்பூர் பிரதேச வைத்தியசாலையில் தற்போது வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை சம்பூர் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

(ற-ஜ-5)

# சேதமடைந்த பொருள்களுக்கு நட்ட ஈடு வழுங்கப்பட மாட்டாது

## அரசு தெரிவிப்பு

கொழும்பு, மே 31

நாட்டில் கடந்த வாரம் ஏற்பட்ட இயற்கைப் பேரிடரின் போது, சேதமடைந்த பொருள்களுக்கு நட்ட ஈடு வழங்கப்படாது. -இவ்வாறு அரசு தெரிவித்துள்ளது.

அண்மையில் நாட்டில் ஏற்பட்ட மழை வெள்ளம் மற்றும் மண் சரிவு காரணமாக வீடுகளில் காணப்பட்ட மின்சார உபகரணங்கள் மற்றும் ஏனைய பொருள்கள் சேதமடைந்துள் ளன. இவற்றுக்கு நட்ட ஈடு வழங்கப்படமாட்டாது என்று இடர் முகாமைத்துவ அமைச்சர் அனுர பிரிய தர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதுகுறித்து அவர் தெரிவித்துள்ளதாவது–

இயற்கை இடர் காரணமாக சேதமடைந்த வீடுகளுக்கு, அரசு நட்ட ஈடு வழுங்கும். பாதிக்கப்பட்ட வீடுகளுக்காக நட்ட ஈடு வழங்குவது குறித்து கடந்த 27 ஆம் திகதி விசேட சுற்று நிருபம் வெளியிடப்பட்டுள்ளது.

இதன் பிரதிகள் மாவட்டச் செயலாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. சேதமடைந்த வீடுகள் குறித்த மதிப்பீட்டு அறிக்கைகள் துரித கதியில் அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

இடர் காரணமாக பாதிக்கப்பட்ட வீட்டின் உரிமையாளர் அது குறித்து, கிராம உத்தியோகத்தருக்கு முதலில் அறிவிக்க வேண்டும்.

பின்னர் பிரதேச செயலகம் ஊடாக தேவையான மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்படும். சேதமடைந்த வீடுகளுக்கு குறைந்த பட்சம் ஒரு லட்சம் ரூபா முதல் அதிக பட்சமாக இருபத்து ஐந்து லட்சம் ரூபா வரையில் நட்ட ஈடு வழங்க அரசு தீர்மானித் துள்ளது.– என்று தெரிவித்துள்ளார்.

(ற-ஜ-5)

## முடிவுக்கு வருகிறது எல்-நினோ அடுத்து வரவுள்ளது லா-நினா!

கொழும்பு, மே 31

ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் கடும் வறட்சி மற்றும் கடும் மழை, வெள்ளத்தை ஏற்படுத்திய எல்-நினோ பருவநிலை, முடிவுக் கட்டத்தை எட்டியுள்ளது. அதே வேளை, அடுத்து லா- நினா என்றகடும்குளிரானபருவ நிலை மாற்றம் ஏற்படும் என்று எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

இந்த லா-நினா பருவநிலை மாற்றத்தால், எல்-நினோவைப் போன்று கடுமையான பாதிப்புகள்ஏற்படும்.எனினும்இலங்கை அதிகளவில் பாதிக்கப்படாது. -இவ்வாறு வளிமண்டலவியல் திணைக்களப் பணிப்பாளர் லலித் சந்திரபால தெரிவித்துள்ளார்.

எல்-நினோ இப்போது முடிவுக் கட்டத்தில் உள்ளது. ஜூன் - ஜூலை மாதமளவில் இது இயல்பு நிலைக்கு வரும். அப்போது லா-நினா உருவாகலாம்.

இதுவும், எல்-நினோவைப் போன்று அழிவுகளை ஏற்படுத்தலாம். எனினும், இது இலங்கைக்குப்பெரிய அச்சுறுத்தலாக இருக்காது.

லா-நினா, எல்-நினோ ஆகிய இரண்டுமே சமுத்திரத்தின் வெப்பநிலை மாற்றங்களால் உருவாகிறது.

இரண்டு காற்றமுத்த தாழ்வு நிலைகள் தெற்கு இந்தியப் பெருங்கடலில் உருவான போதும் அவற்றால், இலங்கைக்குப் பாதிப்பு ஏற்படவில்லை, என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, லா-நினாவால், அத்திலாந்திக் பகுதியில் அதிகளவு சூறாவளிகளும், பிரேஸிலில் வறட்சியும், இந்தோனேசியா, இந்தியாவில் கடும் மழையும் ஏற்படக் கூடும் என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

(ற-ஜ-5)

## வெளிவிவகார அமைச்சர் மங்கள அடுத்த மாதம் இந்தியா பயணம்

இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கை தொடர்பாக மும்பையில் அடுத்த மாதம் கருத்தரங்கொன்று நடை பெறவுள்ளது. அதில் பங்கேற்க வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர இந்தியா செல்லவுள்ளார்.

முதலாவது பிரதான கருத்தரங்கு ஜூன் 13 ஆம், 14 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

'இந்தியாவின் நுழைவாயில் கலந்துரையாடல்' எனும் தலைப்பில் இந்தக் கருத்தரங்கு நடத்தப்பட வுள்ளது. இந்தியவெளிவிவகாரஅமைச்சும், 'கேட்வே' இல்லமும் இணைந்து இதனை ஒழுங்கு செய்துள்ளன.

கருத்தரங்கில் வெளி விவகாரம் மற்றும்வர்த்தகம் சார்ந்த விவகாரங்கள் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்படவுள்ளன.

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவும், நேபாள பிரதிப் பிரதமரும், வெளிவிவகார அமைச்சருமான கமல் தாபாவும் இந்தக் கருத்தரங்கில் ஆரம்ப உரை நிகழ்த்த வுள்ளனர்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ் முக்கிய உரை நிகழ்த்தவுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற-ஜ-5)

# கிழக்கு முதலமைச்சர் நசீர் மன்னிப்புக் கோர வேண்டும்

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் கூறுகின்றார்

கொழும்பு, மே 31

கடற்படை அதிகாரியை அவமதித்ததற்காக, அவரிடம் கிழக்கு மாகாண முதலமைச்சர் நசீர் அகமட், நிபந்தனையின்றி மன்னிப்புக்கோர வேண்டும்.– இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கிண்ணியாவில், நடந்த நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

கடற்படை அதிகாரியிடம், கிழக்கு முதலமைச்சர் மன்னிப்புக் கோர வேண்டும். அதன் பின்னர் இந்தச் சூழ்நிலை ஏற்பட்டமைக்கான காரணங்களை ஆய்வுசெய்ய முடியும். இதனை வைத்து சில சக்திகள் அரசியல் ஆதாயம் தேட முனைகின்றன. அந்தச் சக்திகளுக்கு வாய்ப்பளிக்கக் கூடாது.

பிளவுகளை ஏற்படுத்த முனையும் சக்திகளின் பொறிக்குள் நாம் அகப்படக் கூடாது. இந்தச் சம்பவங்களின் பின்னால் அரசியல் நோக்கங்கள் இருக்கக் கூடும். ஜனாதிபதியும், பிரதமரும் பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பார்கள். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் நாம் பேய்களைப் புதைத்தோம். அவை மீண்டும் எழுந்திருக்காத வகையில் வழிகளைத் தேட வேண்டும்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் என்ற வகையில், நாட்டின் உறுதிப்பாட்டில் கவனம் செலுத்தியும், சிறுபான்மையினரின் கௌரவத்தைக் கருத்திற்கொண்டும் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முனைகிறேன். - என்றார்.

(ற-ஜ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞானசார தேரருக்கு எதிராக நீதிமன்று பிடியாணை உத்தரவு

கொழும்பு, மே 31

பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரருக்கு எதிராக மத்துகம நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

மத்துகம நீதிவான் நீதிமன்றில் விசாரணை செய்யப்பட்டு வரும் வழக்கு விசாரணைகளில் முன்னிலையாகாத காரணத்தாலேயே பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 27 ஆம் திகதி இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, ஞானசார தேரர் வழக்கு விசாரணைகளில் முன்னிலையாகியிருக்கவில்லை. இதனையடுத்து பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2015 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 8 ஆம் திகதி தேர்தல் சட்டங்களை மீறி வெலிப்பனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மங்களாராமய விகாரையில் அரசியல் கூட்டம் நடத்தியதாக ஞானசார தேரர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பொதுஜன பெரமுன என்ற கட்சியில் ஞானசார தேரர் தேர்தலில் போட்டியிட்டிருந்தார். விகாரைக்கு அருகாமையில் உள்ள பகுதி ஒன்றில் கூட்டம் நடத்தப் பொலிஸாரிடம் அனுமதி பெற்றுக் கொண்டு விகாரையில் கூட்டம் நடத்தப்பட்டிருந்தது. கூட்ட ஏற்பாட்டாளர்களுக்கு இது பற்றி அறிவித்தபோது, கூட்டத்தை விகாரையில் நடத்தாமல் இருக்க இணங்கிய போதிலும், ஞானசார தேரர் உள்ளிட்டவர்கள் பின்னர் அந்த விகாரையிலேயே அனுமதியின்றி கூட்டத்தை நடத்தியிருந்தனர்.

இது தொடர்பில் அப்போதைய வெலிப்பனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். வழக்குடன் தொடர்புடைய பௌத்த பிக்குகள் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

(ற-ஜ-5)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அரசின் வேடம் கலையும் நிலை தூரத்திலும் தென்படவில்லையே...!

ஐக்கிய நாடுகள் சபையில், ஜெனிவா நகரில் உறுதி அளிக்கப்பட்டதன் பிரகாரம், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இப்போதைக்கு இலங்கை அரசு அகற்றப் போவதில்லை!

அதனை எவ்வாறு, நீங்கள் திட்டவட்டமாகக் கூறமுடியும் என்று, உங்களுக்குள்ளே கேள்வி எழுப்புவதை உணரமுடிகிறது.

வடக்கின் பிரதானமான மாவட்டங்களில் ஒன்றான முல்லைத்தீவு மாவட்டம், முள்ளியவளைப் பிரதேசத்தில், ஓரிரு நாள்களின் முன்னர் பொலிஸாரால் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோக சம்பவம் ஒன்றே அதற்கு உதாரணம் காட்டப் போதுமானது.

முதலாவது பந்தியில் அதனை அறுத்து உறுத்திக் கூறியுள்ளதை ஆழமாகச் சிந்தித்துப் பாருங்கள்.

சிவில் உடையில் அங்கு சென்றிருந்த பொலிஸார் நீதிமன்றப் பிடியாணைப் பத்திரமின்றி நபரொருவரைக் கைது செய்ய முயன்றதால், பதற்றமான நிலைமை அங்கு தோற்றுவிக்கப்பட்டமையும் அதன் விளைவாக பொலிஸாரால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட சம்பவமும் இதற்கு நல்ல உதாரணம். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதற்கு ஏற்ப.

ஆகப் பின்னோக்கிப் பார்த்தால், பாதுகாப்புத் தரப்பினரால் ஒருவர் கைது செய்யப்பட்டால், அவ்வேளையில் அதனை உறுதிப்படுத்தும் ஆவணம், கைது செய்யப்படுபவரின் மொழியில் வழங்கப்பட வேண்டும் என்பது சட்டவிதி.

அது மட்டுமன்றி, அவருடன் பேசுவதற்கு குடும்பத்தவருக்கு அனுமதி வழங்கியாக வேண்டும். அவர் எங்கே தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்ற விவரத்தை, குடும்பத்தவர்களுக்குத் தெரிவித்தாக வேண்டும்.

மேற்கூறப்பட்டவை, மனித உரிமை ஆணைக் குழுவின் நியதிகள் என்பதைத் தொட்டுக் காட்டுவது பொருத்தமே.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நபரொருவரைக் கைது செய்வதற்கான புதிய விதிமுறைகள் குறித்து இலங்கை மனித உரிமை ஆணைக்குழு ஆகப்பிந்திய அறிவிப்பொன்றை விடுத்துள்ளது.

அந்தச் சட்டத்தின் பிரகாரம், மனித உரிமைகள் தொடர்பான உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்ற தோரணையில், தோற்றப்பாட்டில்--

அரசினால் அறிக்கைகள் கட்டவிழ்த்து விடப்படுவதும் ஒன்றும் புதிதல்ல!!

ஆனால், அவை அனைத்தும் ஏட்டில் மட்டுமே என்பதைப் பாதிப்புற்ற, மக்கள் மட்டுமன்றி, அனைத்துத் தமிழ் மக்களும் நன்கறிவர். அவர்களிடம் முழுப்பூசணிக்காயைச் சோற்றில் புதைப்பது போன்று தமது மேலோங்கித்தனத்தை அதிகாரத் தரப்பினர் மறைக்க முயல்வது மிகமிகச் சிரமமானது என்பதும் நிதர்சனமாகி வருகிறது.

இதனை அரசுகளும், அரச கட்டிலில் மாறி மாறி வீற்றிருக்கும் ஆட்சியாளர்களும் நன்கறிவர். எழுத்தில், ஆவண ரூபத்தில் என்னதான் உறுதிப்படுத்தப்பட்டிருப்பினும், தமது மேலோங்கித்தனச் சிந்தனையில் சம்பந்தப்பட்ட அதிகாரத் தரப்பினர் தமது செயற்பாடுகளை முன்னெடுக்க முயல்வர் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

மொத்தத்தில், எல்லாம் வெளிவேமே என்பதை, மனித உரிமைகள் சபை மட்டுமன்றி, அனைத்துலக நாடுகளில் மிகப்பலவும் கரைத்துக் குடித்துள்ளன என்பது நிதர்சனமே.

# ஈழத் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு ஜெயலலிதா தீர்வு காண்பாரா?

மு.ஈழத்தமிழ் மணி

மிகவும் பரபரப்புடன் எதிர்பார்க்கப்பட்ட தமிழகச் சட்ட சபைக்கான தேர்தல் முடிவுகளின்படி செல்வி ஜெ.ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க.கூட்டணி அமோக வெற்றி பெற்று மீண்டும் ஆட்சி அமைப்பதற்கு தமிழக மக்கள் அங்கீகாரமளித்திருக்கின்றனர். மீண்டும் ஆறாவது தடவையாக செல்வி ஜெயலலிதா முதலமைச்சராக கடந்த 23 ஆம் திகதி பதவியேற்றுள்ளார்.



செல்வி ஜெயலலிதா, கலைஞர் கருணாநிதி ஆகியோரின் தேர்தல் பரப்புரைகளின்போது தத்தமது ஆட்சிகளின்போது தாம் மக்களுக்கு ஆற்றிய சேவைகளை முன்வைத்திருந்தனர். எதிர்காலத் திட்டங்களையும் பாமரமக்களை வசீகரிக்கக் கூடியவாறு இலவசங்களையும் தேர்தல் அறிக்கைகளில் வெளியிட்டிருந்தனர்.

தி.மு.க., அ.தி.மு.க. இடையிலான போட்டிகளே உச்சத்தைத் தொட்டிருந்தன. இரு கட்சிகளினதும் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் பல்லாயிரக்கணக்கான மக்கள் சுட்டெரிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாது பங்கேற்றிருந்தனர். ஜெயலலிதா, கலைஞர் கருணாநிதியையும், அவரது குடும்பத்தினரையும் குறிவைத்தே கடுமையாகத் தாக்கி பரப்புரைகளை மேற்கொண்டிருந்தார். தி.மு.க. ஆட்சியின் போது இடம் பெற்ற ஊழல்கள், மோசடிகள், வன்முறைகள், துஷ்பிரயோகங்கள், முறைகேடுகள், யாவும் அ.தி.மு.க. கூட்டணியினரால் பெருமெடுப்பிலான பரப்புரைகளாகியிருந்தன.

கருணாநிதியின் குடும்ப ஆட்சி, ஊழல் ஆட்சி, ஈழத்தமிழர்களை இலங்கை அரசு கொன்றொழித்ததை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த துரோக ஆட்சி, தமிழகத்தில் அமைய வேண்டுமா? என்ற பரப்புரை வாசகங்கள் ஜெயலலிதா சார்பு தொலைக் காட்சிகளில் முக்கிய இடத்தை வகித்திருந்தன.

நாம் தமிழர் இயக்கத்தின் தலைவரான சீமான் தமிழகத்தை தமிழன்தான் ஆட்சிசெய்யவேண்டும் என்றவாறு தேர்தல் பரப்புரைகளை அமைத்திருந்தார்.

சகலகட்சிகளும் மதுவிலக்கு நடைமுறைப்படுத்தப்படுமென அறிவித்திருந்தன. அ.தி.மு.க, தி.மு.க வினரால் முன்வைக்கப்பட்ட இலவச திட்டங்களை ஏனைய கட்சிகள் கண்டித்திருந்ததோடு, கடுமையான விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டிருந்தன. கச்சதீவு விவகாரம், இலங்கை–இந்திய கடற்பரப்பில் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது–கைது செய்யப் படுவது டிசம்பரில் சென்னை மாநகரில் ஏற்பட்ட பெருவெள்ள இடர், என்பவை பரப்புரைகளில் முக்கிய பங்கு வகித்திருந்தன.

தேர்தலில் யார் வெற்றி பெறுவார், எந்தக்கட்சி ஆட்சி அமைக்கும் என தொலைக்காட்சி, ஊடகங்கள் உள்ளிட்ட சில தனியார் அமைப்புக்களும் கருத்துக் கணிப்புக்களை நடத்தியிருந்தன. அனேகமாக தி.மு.க.

> கருணாநிதியின் குடும்ப ஆட்சி, ஊழல் ஆட்சி, ஈழத்தமிழர்களை இலங்கை அரசு கொன்றொழித்ததை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த துரோக ஆட்சி, தமிழகத்தில் அமைய வேண்டுமா? என்ற பரப்புரை வாசகங்கள் ஜெயலலிதா சார்பு தொலைக்காட்சிகளில் முக்கிய இடத்தை வகித்திருந்தன.

கூட்டணியே ஆட்சி அமைக்கும் என்றவாறு கருத்துக் கணிப்புக்கள் அமைந்திருந்தன ஓரிரு தொலைக்காட்சிகள் அ.தி.மு.க. கூட்டணியே ஆட்சி அமைக்குமென தேர்தலுக்குப் பின்னர் கருத்துக்கணிப்பில் தெரிவித்திருந்தது.

தமிழக வாக்காளர்கள் மத்தியில் பணம் கைமாற்றப்பட்டிருந்தது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தலில் போட்டியிட்ட அ.தி.மு.க, தி.மு.க வேட்பாளர் களிடையே இலட்சக்கணக்கில் ரூபா நோட்டுக்கள் புரண்டன. இருகட்சிகளும் வாக்காளர்களுக்கு பணத்தை வாரி இறைத்தன என்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. இதில் உண்மையும் இருக்கவே செய்தது.

19ஆம் திகதி வெளியிடப்பட்ட தேர்தல் முடிவுகளின்படி கருத்துக் கணிப்புக்களை பொய்யாக்கி மக்கள் மீண்டும் தமி ழகத்தில் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. ஆட்சியை தேர்ந்தெடுத்துள்ளனர். தேர்தல் இடம் பெற்ற 232 தொகுதிகளில் 134 தொகுதிகளில் அ.தி.மு.க கூட்டணி அமோக வெற்றி பெற்றுள்ளது தி.மு.க கூட்டணி 98 இடங்களைப் பெற்று பலம் வாய்ந்த எதிர்க்கட்சியாக இடம்பெற்றுள்ளது. மாற்றம் வேண்டும் என முக்கிய கொள்கையாகக் கொண்டு போட்டியிட்ட விஜயகாந்த் தலைமையிலான மக்கள் நலக் கூட்டணி, பாட்டாளிமக்கள் கட்சி, நாம் தமிழர்கட்சி என்பவை படு தோல்வியடைந்துள்ளன. திராவிடக் கட்சிகளை தோற்கடிக்க முடியாமல் மாற்றம் வேண்டும்மென பரப்புரை செய்த கட்சிகள் மக்களால் தூக்கியெறியப்பட்டன.

தோல்வியடைந்த வேட்பாளர்களில் நடிகர் சரத்குமார், சில அமைச்சர்கள், மருத்துவர் அன்புமணி, நடிகர் விஜயகாந்த், தொல்.திருமாவளவன், தயாரிப்பாளர் சீமான், போன்றவர்கள் முக்கியமானவர்கள், விஜயகாந்த் கட்டுப்பணத்தை இழந்தது மட்டுமல்லாது அவரது கட்சி மாநிலக் கட்சி என்ற அந்தஸ்தையும் இழந்துள்ளது.

முதலமைச்சரான செல்வி ஜெயலலிதா, தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி தி.மு.க.ஸ்டாலின், முன்னாள் முதல மைச்சர் பன்னீர்ச் செல்வம். ஆகியோர் தாம் போட்டியிட்ட தொகுதிகளில் பெரு வெற்றியீட்டியுள்ளனர்.

தமிழக சட்டசபைத் தேர்தல்களில் ஒரு போதும் தோல்வியடையாது 13 தடவைகளிலும் கலைஞர் கருணாநிதி வெற்றி பெற்றுவந்தமை மீண்டும் ஜெயலலிதா ஆறாவது தடவையாகவும், முதலமைச்சராக பதவி வகிப்பது இரண்டுமே சாதனைகள் தான்.

2011ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டசபைத் தேர்தலில் தி.மு.க. படுதோல்வியடைந்து எதிர்க்கட்சித் தலைவர் பதவியை அடைவதற்கான தகுதியை இழந்திருந்தது. அ.தி.மு.க. பெரு வெற்றியீட்டி ஆட்சியைப்பிடித்தது. 2014 ஏப்ரல் மாதத்தில் நடைபெற்ற நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தலில் தமிழகத்திலுள்ள 39 தொகுதிகளில் அ.தி.மு.க. தனித்துப் போட்டியிட்டு 37 இடங்களில் வெற்றிபெற்றிருந்தது. மே 16 இல் நடைபெற்ற சட்டசபைத் தேர்தலில் அ.தி.மு.க. மீண்டும் வெற்றிபெற்று சாதனை படைத்துள்ளது என்பது தமிழக அரசியல் வரலாற்றில் முக்கிய திருப்பமாகும்.



> அ.தி.மு.க என்ற பெருவிருட்சம் ஜெயலலிதாவினால் உறுதியாகத் தாங்கப்பட்டு நிற்கின்றது. அரசியலில் நாயகியாகி சகல விதத்திலும் ஆளுமை கொண்ட ஒரே ஒரு பெண்ணாக அம்மா என்ற உச்சரிப்பில் தமிழகம் கட்டுப்பட்டுக் கொண்ட தென்ற உண்மையை ஏற்றுக் கொண்டேயாக வேண்டும்.

ஈழத்தமிழர்களின் வெறுப்புணர்வு கருணாநிதி மீது என்றுமிருக்கும். தி.மு.கவின் தேர்தல் அறிக்கையில் ஈழத்தமிழர் பிரச்சினை சம்பந்தமாக எந்தவிதமான கருத்தும் முன்வைக்கப்படவில்லை. அ.தி.மு.கவின் தேர்தல் அறிக்கையில் ஈழக் கோரிக்கை சம்பந்தமான கருத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஈழத்தமிழ் மக்களின் சாபமே தி.மு.க. தலையெடுக்காததற்கும், ஆட்சியைப் பிடிக்காததற்கும் ஒரு காரணம் என்றும் எடுத்துக் கொள்ளலாம்.

நடைபெற்று முடிந்த சட்டசபைத் தேர்தலில் தி.மு.க., இந்திரா காங்கிரஸ் கட்சியுடன் மீண்டும் கூட்டுச்சேர்ந்து போட்டியிட்டதைத் தமிழக மக்களும், ஈழத்தமிழர்களும் விரும்பவில்லை என்பது தெரிந்தும், கருணாநிதி கூட்டுச்சேர்ந்து போட்டியிட்டதும் தி.மு.க.வின் தோல்விக்கு காரணமெனக் கூறலாம். தி.மு.கவுக்கு மீண்டும் ஒரு முறை தண்டனையைத் தமிழக மக்கள் வழங்கிவிட்டனர்.

அ.தி.மு.க என்ற பெருவிருட்சம் ஜெயலலிதாவினால் உறுதியாகத் தாங்கப்பட்டு நிற்கின்றது.

அரசியலில் நாயகியாகி சகல விதத்திலும் ஆளுமை கொண்ட ஒரே ஒரு பெண்ணாக அம்மா என்ற உச்சரிப்பில் தமிழகம் கட்டுப்பட்டுக் கொண்டதென்ற உண்மையை ஏற்றுக் கொண்டேயாக வேண்டும். ஜெயலலிதா தனது ஆட்சியில் ஈழத்தமிழர்களின் பிரச்சினையில் அதிக அக்கறையுடன் செயற்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் ஈழத்தமிழர்களும் ஜெயலலிதாவின் பெரும் வெற்றியையிட்டு மகிழ்ச்சியடைவதுடன் வாழ்த்துக்களையும் ஆதரவையும் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# உருத்திரபுரம் வீதிகள் புனரமைக்கப்படுமா?

கிளிநொச்சி மாவட்டத்தின் உருத்திரபுரம் கிழக்கு கிராமம் மிகவும் பழைமை வாய்ந்த செழிப்பான கிராமமாகும். இந்தக் கிராமமானது கிளிநொச்சியில் இருந்து நான்கு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது. இந்தக் கிராமத்தின் வீதிகள் 83 ஆம் ஆண்டுக்குப் பின்னர் எந்தவிதமான திருத்தமும் இன்றி உள்ளன. 1952 ஆம் ஆண்டு குடியேறிய மக்கள் இதுவரையில் கஷ்டமான நிலையிலேயே வீதிகளைப் பயன்படுத்துகின்றனர்.

தற்போது பெய்த பெருமழையால் 4ஆம் குறுக்குத் தெரு எந்தவிதத்திலும் பிரயாணம் செய்ய முடியாத நிலையில் உள்ளது. பாடசாலை மாணவர்கள், அரச ஊழியர்கள், வைத்தியசாலை செல்லும் நோயாளிகள், பிரதான இரு ஆலயங்களுக்குச் செல்லும் மக்கள் இந்த வீதியையே பயன்படுத்துகின்றனர்.

கிளிநொச்சிப் பட்டினத்தில் இருந்து உருத்திரபுரம் கிராமம் வரை இந்த வீதியையே மக்கள் பயன்படுத்துகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த வீதியை அரசியல் பிரமுகர்களும் அரச உயர் அதிகாரிகளும் பார்வையிட்டு சென்றும் எந்தவிதமான முடிவுகளும் கிடைக்கவில்லை. பல ஊடகங்களில் இந்த வீதி பற்றிய செய்திகள் வந்தும் உள்ளன.

எனவே தயவு செய்து இனியாவது அரசியல் பிரமுகர்களும் அரச உயர் அதிகாரிகளும் இந்த வீதியைப் பார்வையிட்டு ஆவன செய்து தருவார்கள் என எதிர் பார்க்கின்றோம்.

உருத்திரபுரம் கிழக்கு மக்கள் சார்பில்,
அல்வை.சி.தர்மநாதன், ஓய்வு பெற்ற கூட்டுறவாளர்.

# பெற்றோரை அவமதிப்பது எந்த வகையில் நியாயம்?


கடந்த 28 ஆம் திகதி மாணவர்களைக் கௌரவப்படுத்துதல் என்ற வகையில் இடம்பெற்ற பரிசளிப்பு விழாவில் ஒரு சில வசதிகளற்ற பெற்றோரை இழிவுபடுத்துதல் என்ற நிகழ்வு இடம் பெற்றமை மிகவும் மனவேதனைக்குரியது. இரண்டு தினங்களுக்கு முன்பு ஓர் அழைப்பிதழ் வந்தது. தங்கள் பிள்ளை வெற்றித் தேர்வுப் பரீட்சை எழுதி அதிகூடிய புலமைப்பரிசில் புள்ளிகள் பெற்றமைக்காகக் கௌரவிக்கப்படுகின்றார். தங்கள் வரவை 150 ரூபா செலுத்திப் பதிவு செய்யவும் என்று. அன்றைய தினம் பிள்ளைக்குப் பாடசாலையில் வேறு ஒரு போட்டி இருந்தமையால் நிகழ்வு தினமான 28 ஆம் திகதி சனிக்கிழமை காலையில் 150 ரூபாவை செலுத்தியதும் அதற்கான அழைப்பிதழ் ஒன்றை நிர்வாகி என்னிடம் வழங்கினார். அவரின் எதிர்பார்ப்பு அந்த 150 ரூபாதான். அப்போது இருந்த அந்த சந்தோசம் மாலை நிகழ்வுக்கு எனது பிள்ளையையும் மனைவியையும் அழைத்துச் சென்று அவர்கள் இருவரையும் உள்ளே அமர்த்திவிட்டு நான் மற்றைய மகனைத் தனியார் வகுப்பு ஒன்றில் இருந்து அழைத்து வந்து அந்த நிகழ்வைப் பார்த்தால் அடுத்த வருடம் அந்தப் பிள்ளையும் கற்றுக் கல்வி உயர்வு நிலை அடையும் என நினைத்து உள்நுழைந்தேன். ஆனால் அவமானப்பட்டு வெளியே வரவேண்டிய நிலைதான் காணப்பட்டது. எனது மகளுக்கு ஒருபுறம் கௌரவிப்பு, தந்தைக்கோ அவமானப் பரிசு. இப்படியான நிகழ்வு தேவைதானா? இதில் என்ன புரிகின்றது என்றால், ஏதோஒரு நிகழ்வு என்ற போர்வையில் நிதி சேகரிப்பு நடைபெறுகின்றது என்பது மட்டும் திண்ணம்! ஏனெனில் எம்மிடம் 150 ரூபா புகைப்படக் காசு என்று வாங்கிய கல்வி நிலைய நிர்வாகி ஒன்றை மட்டும் நினைவு வைத்துக் கொள்ள வேண்டும். மூன்று புகைப்படத்துக்கான செலவு 51 ரூபா மட்டுமே. ஆனால் 150 ரூபா வாங்கிக் கௌரவிப்பு செய்ய வேண்டிய தேவை என்ன? சரி அழைப்பிதழ் கொடுத்துவிட்டு நிர்வாகி என்னை வெளியே போ என்றதும் வெட்கமாகப் போய்விட்டது. திறந்த வீட்டுக்குள் நாய் நுழைந்த மாதிரி உங்கள் பாட்டில் போகிறீர் என்று கேட்டது மிகவும் வேதனை அளிக்கின்றது. ஏன் இந்த நிகழ்வு? யார் பார்ப்பதற்கு? பெற்றோர்களை அழைத்து அவமானப் படுத்தலாமா? சிலவேளை நான் சப்பாத்து கோட், சூட், ரை கட்டி வாடகைக் காரில் வரவில்லை என்று அந்த நிர்வாகி மோப்பம் பிடித்து விட்டாரா? நல்லது. எனவே இது போன்ற நிகழ்வுகள் எம்மினத்துள் நடைபெற கல்விமான்கள் இடமளிக்காதீர்கள். நிர்வாகி சற்று நிதானத்துடன் செயற்படுவதுதான் நன்று. இப்படியான அவமானங்களும் தோல்விகளும் தான் வன்முறைகளாக மாறுவடிவம் எடுக்கின்றன. எல்லோரும் பொறுமைசாலிகள் அல்லர் என்பதை நிர்வாகி உணரவேண்டும்.

பாதிக்கப்பட்ட ஒரு தந்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வௌவால்களால் ஆஸியில் இயல்பு வாழ்க்கை பாதிப்பு


சிட்னி, மே 31
ஆஸ்திரேலியாவின் நகரம் ஒன்றில் மனிதர் எண்ணிக்கையைவிட வௌவால்களின் எண்ணிக்கை பல மடங்கு அதிகரித்துள்ளது. இதனால் இந்த நகர மக்கள் பல அசௌகரியங்களுக்கு ஆளாகியுள்ளனர். சவுத் வேல்ஸ் பகுதியில் வசிக்கும் மக்களின் எண்ணிக்கை 11 ஆயிரமாகும். ஆனால் அங்குள்ள வௌவால்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்தை விட அதிகமாகும். இதனால் சவுத் வேல்ஸ் நகரத்தில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.
குறித்த நகரின் மரங்கள் பெரும்பாலானவற்றில் இந்த வௌவால்கள் தமது குடியிருப்புக்களை அமைத்துள்ளன. இதனால் வௌவால்களின் நகரம் எனவும் சர்வதேச ஊடகங்கள் செய்தியில் குறிப்பிட்டுள்ளன.
வௌவால்களின் தொல்லையால், ஜன்னல்களைத் திறக்க முடியவில்லை. வெளியில் பொருள்களை வைக்க முடியவில்லை. எந்த நேரமும் சத்தமிட்டுக் கொண்டுள்ளன. இவற்றால் எந்த விடயத்தையும் செயற்படுத்த முடியவில்லை என அங்கு வசிக்கும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.
இதற்கிடையில் குறித்த வௌவால் இனம் எளிதில் பாதிப்படையக் கூடிய இனம் எனப் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதால் அதிகாரிகள் அவற்றைக் கொல்வதற்கான நடவடிக்கைளை மேற்கொள்ளவில்லை எனத் தெரிவித்தனர்.
மிருக உரிமைகள் அமைப்பினர், வௌவால்கள் தாமாக வெளியேறும்வரை பொறுமையாக இருக்கும்படி மக்களைப் பணித்துள்ளனர். ஆனால் முன்னர் எப்போதும் இல்லாத அளவுக்கு வௌவால்கள் மிகக்கூடிய எண்ணிக்கையில் இருப்பதாக அதிகாரிகள் அறிவித்தனர்.
அவற்றை வெளியேற்றுவதற்குப் புகை மற்றும் சத்தங்களைப் பயன்படுத்த உத்தேசித்திருப்பதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர். அத்துடன் மரங்களை வெட்டுவதன் மூலம் அவற்றின் வாழ்விடங்களை அழிக்க் முடியும் என்பதால் மரங்கள் வெட்டப்பட்டு வருகின்றன. வௌவால்களினால் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறாமல் வசித்து வருகின்றனர். இந்த நிலையில், சவுத் வேல்ஸ் நகர மக்கள் தீர்வுக்காக காத்திருக்கின்றனர். (த-ரி4)



# ஐரோப்பா முழுவதும் மோசமான காலநிலை

## பல்வேறு நாடுகளில் மின்னல் தாக்கம்

பாரிஸ், மே 31
காலநிலை மாற்றத்தால் ஐரோப்பாவில் மின்னல் விபத்துக்கள், சூறாவளிகள் ஏற்பட்டுள்ளன. கடந்த சனிக்கிழமை ஐரோப்பாவின் பல பகுதிகளில் சூறாவளி ஏற்பட்டுள்ளது. சூறாவளியால் போலாந்தில் 2 பேர் உயிரிழந்தனர். அத்துடன் 30 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதற்கிடையில் ஜேர்மனியில் கால்பந்தாட்டப் போட்டியின் போது இடி விழுந்ததால் போட்டி இடைநிறுத்தப்பட்டது. நேற்றுமுன்தினம் பாரிசில் பூங்காவில் இடி விழுந்ததில் பாதிக்கப்பட்ட சிறுவன் ஒருவன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளான். இடித் தாக்கம் காரணமாக, சிறுவன் இதயத்துடிப் பின்றி இருந்ததாகவும், முதலுதவி மூலம் உயிர்காக்கப் பட்டது எனவும் தீயணைப்புத் துறை அதிகாரி தெரிவித்தார்.
பாரிசில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து துணை ஆளுநர் தெரிவிக்கையில்,
வானிலை அதிகாரிகள் எந்த முன்எச்சரிக்கையும் எமக்குத் தரவில்லை. பிரான்ஸ் நாட்டில் பல பாகங்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்ட போதும், பாரிஸுக்கு எச்சரிக்கை விடுக்கப்படவில்லை.
மேலும், பாரிசின் மேற்குப் பகுதியில், மழை காரணமாக மரத்துக்கு கீழ் ஒதுங்கிய 8 சிறுவர்களும், 3 பெரியவர்களும் இடியால் தாக்கப்பட்டனர். அவர்களில் 7 பேர் இடி தாக்கத்தால், தீக்காயங்களும் ஏற்பட்டதால் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். மின்னல் பாதிப்புக்கு உள்ளானவர்களுக்கு, மூளையிலும், இதயத்திலும் சிறிய பாதிப்பு ஏற்பட்டிருந்தது என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (த-ரி4)



ஆஸ்திரேலியத் தலைநகர் கான்பராவில் வருடாந்த ஒளித் திருவிழா ஆரம்பித்துள்ளது. 3 வாரங்களுக்கு இந்தத் திருவிழா இட

# அகதிகள் படகு 700 க்கும் மேற்

## மத்திய தரைக்கடலில் தொ

லண்டன், மே 31
மத்திய தரைக்கடலினூடாகப் பயணித்த அகதிகள் படகுகள் கவிழ்ந்து விபத்து ஏற்பட்டுள்ளது. கடந்த வாரத்தில் 3 பெரிய படகுகள் கவிழ்ந்ததில் 700 பேருக்கு மேல் உயிரிழந்திருக்கலாம் என அஞ் சப்படுகிறது.
நேற்று முன்தினம் கவிழ்ந்த படகில் 100 பேரைக் காணவில்லை என ஐ.நாவின் அகதிகளுக்கான ஊடகப் பேச்சாளர் போசி தெரிவித்தார். கடந்த வியாழக்கிழமை படகு மூழ்கியதில் 5 பேர் உயிரிழந்தனர், 560 பேர் காப்பாற்றப்பட்டனர். வேறொரு படகு விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த 670 பேரில், 15 பேர் உயிரிழந்தனர், 104 பேர் காப்பாற்றப்பட்டனர். ஆனால் 550 பேரைக் காணவில்லை. கடந்த வெள்ளிக்கிழமை மேலும் ஒரு படகு விபத்துக்குள்ளானதில் குறைந்தது 45 பேர் உயிரிழந்திருக்கலாம் எனப் போசி தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
சோமாலியா, எரித்திரியா, சூடான் ஆகிய நாடுகளில் இருந்து பெரும் எண்ணிக்கையான அகதிகள் புறப்படுகின்றனர். சோமாலியாவில் அல்-பாப் போராளிக் குழுவினருக்கு அஞ்சி மக்கள் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர். எரித்திரியா, சூடான் ஆகிய நாடுகளில் இருந்து, வெளியேறும்அகதிகளின் எண்ணிக்கை எதிர்வரும் ஆண்டில் அதிகரிக்கும் என ஐ.நா. எதிர்வு கூறியுள்ளது. அதிகரிக்கும் அகதிகளின் உயிரிழப்பும் ஆபத்தான கடல் பயணமும், ஐரோப்பாவைச் சென்ற டையும் மோகத்தை வெளிப்படையாகக் காண்பிக்கின்றது. இந்த வருடத்தில் மாத்திரம் இது வரை ஆயிரத்து 475 அகதிகள் கடல் பயணத்தின்போது உயிரிழந்துள்ளனர்- என்றார்.
கடந்த வாரத்தில் காணாமற்போன 650 பேரும் உயிரிழந்திருந்தால், இந்த எண்ணிக்கை மேலும் உச்ச அளவை எட்டும். கடந்த வாரத்தில் மாத்திரம் 12 ஆயிரம் அகதிகள் மத்திய தரைக்கடலில் இருந்து மீட்கப்பட்டதாக இத்தாலியக் கடற்படையினர் மற்றும் உள்துறை அமைச்சகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்த வருடத்தின் முதல் 5 மாதங்களில் ஒரு லட்சத்து 94 ஆயிரத்து 600 அகதிகள் ஐரோப்பாவில் குடிபுகுந்துள்ளனர். 2015 ஆம் ஆண்டு எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் இந்த எண்ணிக்கை இரு மடங்காகும் எனச் சர்வதேச அகதிகள் அமைப்பு தெரிவித்துள்ளது.(த-ரி4)



# ஈரான் நாட்டவர்கள் மெக்கா செ

தெஹ்ரான், மே 31
சவூதி அரேபியாவின் மெக்கா நகருக்கு, ஈரானில் இருந்து புனித யாத்திரை செல்லத் தடை விதிக்கப் பட்டுள்ளது என நேற்றுமுன்தினம் அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.
இந்த அறிவிப்பின் மூலம் ஈரானின் ஆயிரக்கணக்கான பக்தர்கள் மெக்காவுக்கான புனித பயணத்தை மேற்கொள்ள மாட்டார்கள். சவூதி அரேபியா , ஈரான் மீது மேற்கொண்ட சைபர் தாக்குதல் தொடர்பாக பேச்சு நடத்த, ஈரான் [illegible] அடுத்து, ஈரான் அதிரடி முடிவை எடுத்துள்ளது.
ஈரானில் இருந்து , சவூதிக்கு பக்தர்கள் புனித பயணம் செல்ல முடியாது என ஈரானின் கலாசாரத்துறை அமைச்சர் அலி ஜனாட்டி தெரிவித்தார்.
பயண ஒழுங்கமைப்புக்கான காலம் கடந்துவிட்டது என ஈரானின் ஹஜ் பயண ஒழுங்கமைப்பினர் தெரிவித்தனர். இத்துடன் பயணத்தை மேற்கொள்ளக் கூடிய ஒத்துழைப்பு வசதிகள் இல்லை எனவும் குறித்த அமைப்பு தெரிவித்துள்ளது.
சவூதியின் ஹஜ் பயணத்துக்கான அமைச்சர், ஈரானுக்குப் பயணித்தபோது புனித பயணத்துக்கான ஒப்பந்தத்தில் கையொப்பமிட மறுத்துவிட்டார். ஈரான் மக்களின் புனித பயணத்தை முடக்கியதற்கான பொறுப்புச் சவூதி
யில் குறிப்
சிரியாவில்
ஈரான் ஆ
தோன்றிய
ரவு வழங்கி
களுக்கு ஆ
இதற்கிடை
களில் 4 ஆ
தெரிவித்த
அறிவித்த
பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





விழா இடம்பெறும். நகரின் பல்வேறு மையங்களிலும், பொது இடங்களிலும் வர்ண மயமான விளக்குகள், அலங்காரங்கள், முப்பரிமாண ஒளி அலங்காரங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. (கு-ரி4)

# துகள் கவிழ்ந்து
# றுபட்டோர் சாவு

## ாடரும் சோகம்



## ஜீவனாம்சத்துக்குப் பதிலாக பீசா வழங்கலாம் என தீர்ப்பு



ரோம், மே 31
இத்தாலியில் குடும்பஸ்தர் ஒருவருக்கு நீதிமன்றம் விசித்திரத் தீர்ப்பு ஒன்றை வழங்கியுள்ளது. திரு மண முறிவுக்குப் பின்னர் பிள்ளைக்கு வழங்கும் உத வித் தொகைக்குப் பதிலாக பீசாவை வழங்கலாம் என்னும் தீர்ப்பை நீதிமன்றம் வழங்கியுள்ளது. 400 யூரோவின் பெறுமதிக்குச் சமனான பீசாவை முன்னாள் குடும்பத்தினருக்கு வழங்கலாம் என உத்தரவிட்டுள்ளது.

நிக்கோலா டோசோ என்பவர் வெதுப்பகமொன்றின் உரிமையாளர் ஆவார். இவர் 2002 ஆம் ஆண்டு மனைவியிடம் இருந்து விவாகரத்துப் பெற்றார். பின்னர் ஒவ்வொரு மாதமும் ஜீவனாம்சத் தொகை செலுத்தி வந்தார். 2008 ஆம் ஆண்டு இத்தாலியில் ஏற்பட்ட பொருளாதாரச் சரிவால் நிக்கோலாவும் பாதிக்கப்பட்டார். இதனால் அவர் தமது வெதுப்பகத்தில் இருந்து தனது பிள்ளைகளுக்குப் பீசாக்களை வழங்கி வந்தார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்த அவரது மனைவி, நிக்கோலா மீது குற்றம் சுமத்தி வழக்கு பதிவு செய்தார்.

இதற்கிடையில் 2011 ஆம் ஆண்டு, அவரது மகள் தாயாரிடம் இருந்து பிரிந்து தந்தையாருடன் சென்று வாழ ஆரம்பித்தார். இதனை அடுத்து நீ பதி, நிக்கோலா எந்தக் குற் மும் இழைக்கவில்லை. ஜீ னாம் சமாக பீசா வழங்கியன குற்றச் செயல் அல்ல எ தெரிவித்தார். (கு-ரி

# செல்லத் தடை

நும் என கலாசார அமைச்சு விடுத்த அறிக்கை ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

ரியாவில் போர் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து சவூதி-ரான் ஆகிய நாடுகளுக்கிடையில் முறுகல் நிலை தோன்றியது. ஈரான், சிரிய ஜனாதிபதி அசாத்துக்கு ஆதவு வழங்கி வருகின்ற அதேவேளை, சவூதி போராளிளுக்கு ஆதரவு வழங்கி வருவது குறிப்பிடத்தக்கதாகும். தற்கிடையில் கடந்த ஆண்டு ஈரானைச் சேர்ந்த யாத்திரிளில் 4 ஆயிரத்து 500 பேர் உயிரிழந்தனர் என ஈரான் தரிவித்தபோதும், சவூதி 700 பேர் உயிரிழந்த தாக அறிவித்தது. இதனால் இரு நாட்டினரும் வாக்கு வாதப் டனர். (கு-ரி4)

# உக்ரைன் மக்கள் குடியிருப்பில் தீ விபத்தினால் 17 பேர் சா

கெய்வ், மே 31
உக்ரைனில் மக்கள் குடியிருப்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தீவிபத்தில் 17 பேர் கொல்லப்பட்டனர் என அதிகாரிகள் தெரிவித்தனர். கெய்வ் பகுதிக்கு அண்மையில் உள்ள கிராமத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற தீவிபத்து தீயணைப்பு படையின் உதவியுடன் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. களஞ்சியக் கட்டடத்தில் விபத்து ஏற்பட்டது. குறித்த கட்டடத் தொகுதியில் 35 பேர் குடியிருந்து வந்தனர். 18 பேர் தீயணைப்புப் படை னரால் காப்பாற்றப்பட்டனர். இவர்களில் 5 பேர் காயங்களு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். விபத்து குறித்து உக் நாட்டுப் பிரதமர் வொளோடைமைர் குறொய்ஸ்மென், உட விசாரணைகள் நடத்துமாறு உத்தரவிட்டார்.

இந்த விபத்தால் மீளமுடியாத இழப்பு ஏற்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். (கு-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பிறப்பு முதல் இறப்பு வரை
## பிறந்த எண்ணின் பலன்கள்



**(பிறந்தஎண்ணின் பலன்கள் என்ற தொடரில் நேற்றைய உதயனில் வெளியான பிறந்த எண் 2க்கான கட்டுரையின் தொடர்ச்சி இது.)**

வரிவரியாகக் கற்பனைகளை எழுதுவார்கள். ஆனால் சந்தேகக் குணம் நிறைந்துள்ளதால் திருமண வாழ்வு பாதிக்கப்படும். இவர்கள் தியானம், யோகாசனம் போன்ற இயற்கையான பயிற்சிகளை மேற்கொண்டால் வலுவான மனமும், அலை பாயாத எண்ணங்களும் ஏற்படும்.

விளையாட்டுக்களில் நாட்டம் செல்லும். உள் அரங்க விளையாட்டுக்களை மிகவும் விரும்புவார்கள். எண் பலம் அதிகமானால் இராமனைப்போல் இருப்பார்கள். குறைந்தால் இராவணனைப் போல் இருப்பார்கள்.

தன்னம்பிக்கை பொதுவாகக் குறைவாகவே இருக்கும். பலபொருள்களில் ஒரே நேரத்தில் மனம் செலுத்துவதால் எதையும் ஆழமாகச் செய்யத் தெரியாது. எந்த நேரத்திலும் வாழ்க்கையில் இடறிவிழுந்து விடுவோம் என்ற ஐயம் இருக்கும். எனவே, எச்சரிக்கைஉணர்வும் அதிகம் உண்டு.

வாழ்க்கையில் ஆபத்தான முடிவை (ரிஸ்க்) எடுக்கத் தயங்குவார்கள். அலுவலகத்திலும், வீட்டிலும் எந்தப் பணியையும் முழுமையாக மற்றவர்களை நம்பி ஒப்படைக்கமாட்டார்கள். சஞ்சல சுபாவமும், சபல சித்தமும் இவர்களுடன் கூடப்பிறந்தவைகள். வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும், காரணமற்ற கவலைகளினால் தங்களை வருத்திக் கொள்வார்கள். நடக்கக் கூடாத, நடக்க முடியாத நிகழ்ச்சிகளையெல்லாம் கற்பனை செய்துகொண்டு, இவை நடந்து விடுமோ என்று எண்ணி எண்ணிக் குழம்புவார்கள்.

எந்த அளவுக்குத் துணிச்சலாகப் பேசுகிறார்களோ, அந்த அளவுக்கு மனதில் பயம் இருந்து கொண்டே இருக்கும். இவர்களுக்கெனத் தனித்த பண்போ, பழக்கவழக்கமோ இருக்காது. எப்போதும் மற்றவர்களைப் பார்த்து, அவர்களின் நடை உடைகளைப் பின்பற்றுவார்கள்.

இதனால் இவர்களுடைய இயல்பும், பழக்கவழக்கங்களும் அடிக்கடி மாறிக் கொண்டே இருக்கும். தாங்கள் எடுக்கும் முடிவையும் கூட அடிக்கடி மாற்றிக் கொள்வார்கள். எதைப் பற்றியும் விவாதம் செய்வதில் மட்டும் மிகவும் ஈடுபாடு உண்டு.

### முக்கிய ஆலோசனை

2ஆம் எண் சந்திரனுக்கு உரியது. சந்திரன் நன்றாகப் பிரகாசிக்கச் சூரியனின் உதவி தேவை. சூரியன் இல்லையென்றால் சந்திரனுக்குப் பிரகாசமில்லை. மதிப்புமில்லை. அதைப் போன்றே 2ஆம் எண் வருகிற அன்பர்கள் (பிறவி எண் அல்லது வித எண்) ஆலோசகர் ஒருவரைத் தெரிவு செய்து கொள்ள வேண்டும். அவர் பிறிதொரு மதம் அல்லது இனத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். இல்லையெனில் இவர்களை அவர் தமது சுய நலத்துக்காகப் பயன்படுத்திக் கொள்வார்.

சரியான ஆலோசகர் ஒருவரைத் தேர்ந்தெடுத்த பின்பு, அவரின் ஆலோசனைப் படியே தங்களின் காரியங்களைச் செய்து வரவேண்டும். இதனால் மனதில் தன்னம்பிக்கையும், திட்டமிட்டபடி செயல்களும் உருவாகும். வெற்றிகள் தொடரும். ஆலோசகர் கிடைக்காவிட்டால் அவரவர் களின் இஷ்டப்பட்ட இறைவனின் சன்னி தானம் சென்று (தட்சிணாமூர்த்தி சிறப்பானது) உங்களது பிரச்சினைகளைச் சொல்லி இறைவனிடம் பிரார்த்தியுங்கள். உங்களுக்கு இறைவனின் கருணை இயற்கையிலேயே மிக உண்டு. திரவ உணவுகளே இவர்களுக்கு மிகவும் பிடித்தமானது. மதுப்பழக்கத்துக்கு அடிமையாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இல்லையெனில் இவர்களது வாழ்க்கை மதுவாலேயே அழிந்துவிடும்.

### குடும்ப வாழ்க்கை

இந்த எண்காரர்களுக்குக் குடும்ப வாழ்க்கை சிறப்பாகச் செல்லவில்லை. சிறிய பிரச்சினைகளையும் கூடப் பெரிது படுத்திக் கொண்டு, மனைவியுடன் சண்டை போடுவார்கள். குடும்பத்தில் நிம்மதியற்ற சூழ்நிலை உருவாகும். குழந்தைகளாலும் நிம்மதி குறைவு. எனவே, தங்களுக்குவரும் மனைவியின் பிறந்த எண்களை முன்பே நல்ல முறையில் தெரிவு செய்து கொண்டு, திருமணம் செய்து கொள்ள வேண்டும். இப்படிச் செய்தால், இவர்களும் ஆனந்தமான வாழ்க்கை வாழலாம். இவர்கள் தங்களது குடும்பத்தில் உள்ள மனைவி, குழந் தைகளை நம்ப வேண்டும். அவர்களுடன் ஒத்துழைத்து, அவர்களிடம் அன்பு காட்டினால், பின்னர் அவர்களால் நல்ல இன்பமான வாழ்க்கையை அடையலாம். எந்த நிலையிலும், குடும்ப நிர்வாகத்தைத் தங்களிடமே வைத்துக் கொள்ளாமல், மனைவி அல்லது தாயாரிடம் ஒப்படைத்து விட்டால், பாதிக் குழப்பங்கள் வராமல் தடுத்து விடலாம்.

### உடல் அமைப்பு

இவர்கள் உயரமானவர்களாக இருப்பார்கள். சந்திரனின் வலிமை குறைந்தால், நடுத்தர உயரமாக அல்லது குள்ளமாக இருப்பார்கள். நல்ல சதைப் பற்றுள்ள உடம்பை உடையவர்கள். உடல் பலம் இராது. உருண்டையான முகமும், அகன்ற கண் களும், கனத்த இமைகளும் உண்டு. பற்கள் சீராக இருக்காது. தொந்திவிழுவதைஙிர் பார்க்கலாம்.

### அதிர்ஷ்ட நாள்கள்

ஒவ்வொரு மாதத்திலும் 7, 16, 25 ஆகிய திகதிகளும், எண் 7 வரும் தினங்களும்மிக வும் அதிர்ஷ்டமானவை. 2, 11, 20, 29 திகதிகளில் நடுத்தரமான நன்மையே நடக்கும். 1, 10, 19, 28 ஆகிய திகதிகளில் சாதமான பலன்கள் நடைபெறும்.8மற்றும் 9 எண்கள் இவர்களுக்கு கெடுதல் செய்பவையே.

(தொடரும்)

---

புரட்சியாளன்

# புகைத்தலுக்கும் போதைப் பழக்கத்துக்கும் எதிரான நடவடிக்கையில் மாணவர்கள்

மாணவர்களே எதிர்காலச் சந்ததியினர். அவர்களே நாளைய தலைவர்கள். இந்த நாட்டைத் தாங்கப்போகும் தூண்கள். அவர்களைச் சரியான வழியில் நெறிப்படுத்துவதன் மூலமே வளமான நாடொன்றை உருவாக்க முடியும்,

இன்று சர்வதேச புகைத்தல் மற்றும்போதை எதிர்ப்பு தினம். இன்றைய நாளில் குறிப்பிட்ட அளவு நேரத்தில் மாணவர்களைப் புகைத்தல் மற்றும் போதைக்கெதிரான விழிப்புணர்வுக்காகப் போராடுவதற்கு அனுமதிப்பதன் மூலமாக புதியதொரு தலைமுறையை உருவாக்கி, நாட்டை எழுச்சிப் பாதையில் பயணிக்க வைத்து அவர்களுக்கு நிம்மதியான சுபீட்சமான வாழ்வு வாழ வழி வகுக்க முடியும்.

'மது, நாட்டுக்கும் வீட்டுக்கும் கேடு', 'புகைத்தல் புற்று நோயை உருவாக்கும்', 'என் தந்தை ஒரு குடிகாரன் இல்லையென்பதே அவர் எனக்குதேடித்தந்த பெருமையாகும்', 'புகைத்தல் மற்றும் போதையிலிருந்து எமது இல்லம் விடுபட்டுள்ளது' போன்ற வாசகங்களினால் எந்தவொருமாற்றமும்ஏற்படப்போவதில்லை. வடமாகாணக் கல்வி அமைச்சு, இது தொடர்பில் நேரடியாகக் களமிறங்கி எதிர்காலச் சந்ததியினரான மாணவர்களை புகைத்தல் மற்றும் போதைப் பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு மற்றும் எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபடுத் துவதன் மூலம் சிறந்த ஒழுக்கமான சந்ததியை உருவாக்க முடியும். தனியொரு மனிதராலோ அல்லது சமூக அமைப்புக்களாலோ மேற்கொள்ளப்படும் எந்த ஒரு நடவடிக்கையும் புகைத்தல் மற்றும் போதைக்கு எதிரான தாக்கத்தை ஏற்படுத்தப் போவதில்லை. மாணவர்களால் மேற்கொள்ளப்படும் போராட்டமானது கிராமம், நகரம் என அனைத்து இடங்களிலும் தாக்கத்தைச் செலுத்தக் கூடியதுடன் மாற்றத்தை ஏற்படுத்தவல்லது. மாணவர்கள் சில மணிநேரத்தைப் போராட்டத்துக்குப் பயன் படுத்துவதன் மூலம் அவர்களின் எதிர்காலம் முழுவதையும் பாதுகாக்க முடியும். வடமாகாண அரசு மேற்கொள்ளும் முன்மாதிரியான நடவடிக்கையானது வடக்கின் 5 மாவட்டங்களில் மட்டுமன்றி நாடு முழுவதிலும் தாக்கத்தை ஏற்படுத்தி மாற்றத்தை ஏற்படுத்தும்.

**இன்று சர்வதேச புகைத்தல் மற்றும் போதை எதிர்ப்புத் தினம்**

புகைத்தல் மற்றும் போதைப் பொருள் நிறுவ னங்கள் தமது வியாபாரத்தைத் தொடர்ந்து மேற்கொள்வதற்காக மாணவர்களையே இலக்கு வைக்கின்றன. இதற்காகத் தந் திரமாக நுணுக்கமான முறையில் நடிகர் நடிகைகளைப் பயன்படுத்தி புகைத்தல் போதைப்பொருள் பாவனை என் பது வீரதீரச் செயல் எனக் காண்பிப்பதுடன், அழகாக நவநாகரிக உடையணிந்த இளைஞர் யுவதிகள் பலரை ஏற்பாடு செய்து மாணவர்களின் கண்களில் படும்படியாக பாடசா லைகள், கல்வி நிலையங்களுக்கு அருகில் புகைத்தல் மற்றும் மது அருந்துதலில் ஈடுபட வைத்து இதுவே புதிய நாகரிகம். இதுவே கலாசாரம் என்னும் ஒரு பிரமையை உருவாக்கி தமது வணிகத்தை மேம் படுத்துகின்றன. அரசு 2020இல் புகைத்தல் முற்றாகத் தடை செய்யப்படும் எனக் கூறுகின்றது. நாளொன்றுக் குப் பலர் புதிதாகப் புகைத்தலுக்கு அடிமை யாகி வருகின்றனர். இதன்படி 2020 கிடையில் 20 லட்சம் இளைஞர் யுவதிகள் இவற்றுக்கு அடிமையாகிவிடுவர். 2020 இதற்கிடையில் நாட்டில் புகைத்தலால் ஒரு லட்சம் பேர்வரை இறந்து விடுவர். எஞ்சிய அனைவருக் கும் புணர்வாழ்வு அளிப் பது தான் அரசின் திட் டமா?

போதைப்பொருள் பாவனை நாட்டில் பல மடங்கு அதிகரித்துள்ளது. அதுவும் யாழ்ப்பாணத்திலே அதிகம். இதன்மூலம் வருடம் ஒன்றுக்கு நாட்டில் 30 ஆயிரம் பேர் இறப்பதுடன் அனுமதியளித்த விற்பனை மூலம் பெற்ற தரவின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மூன்றில் இரண்டு பங்கு இங்கே செலவாகிறது. வறிய குடும்பத்தில் மூன்றில் ஒரு பங்கு இதற்கே செலவா கிறது. இதனால் பல குடும்பங்கள், நிம்மதியான வாழ்வை இழக்கின்றன. இவற்றால் அரசுக்கு வரும் வருவாயை விட நோய் வாய்ப்பட்டவர்களின் சிகிச் சைக்கான செலவே அதிகம். இதனால் நாடும் வளர்ச்சி யின்றி இருக்கின்றது.

யாழ். மாவட்டத்திலுள்ள 448 பாடசாலை மாணவர்களும் ஒன்றிணைந்தால் 217 மதுவிற்பனை நிலையங்களையும் முற்றாக அகற்ற முடிவதுடன் புகைத்தல் பொருள் விற்பனையாளர்களையும் விற்பனை செய்யாது தடுத்து வைக்கமுடியும். இது போன்றே வடக்கின் ஏனைய மாவட்டங்களின் மாற்றமும் மாணவர்களிலே தங்கியுள்ளது. இவையனைத்தையும் நெறிப்படுத்தக்கூடிய அதிகாரம் முழுமையாக வடமாகாண சபையிடம் உள்ளதால் வடமாகாண சபை உடனடி யாக் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ். பொது நூலகம் தீயுடன் சங்கமமாகி 35 ஆண்டுகள்

மு.ஈழத்தமிழ்மணி

இலங்கையின் மத்திய காலம் வரலாற்றுக் காலமாகும். தமிழினத்தின் இருப்புக்களையும் இல்லாதொழித்து முள்ளி வாய்க்கால் இனப்படுகொலைவரை நடைபெற்ற காலம் நவீன காலமாகும். மூன்று காலப்பகுதிகளைக் கொண்டதில் ஒன்றான மத்திய கால வரலாற்றில் இடம் பெற்றதொரு கொடிய சம்பவமே யாழ்ப் பாணப் பொதுநூலகம் ஏரிக்கப்பட்டு தீயோடு சாம்பலாக்கப்பட்டமை ஆகும். 1977 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசு நான்கு ஆண்டுகளில் தமிழினத்துக்கு எதிராக மேற்கொண்ட மனித குலத்துக்கு விரோதமான குற்றச் செயல் இதுவாகும். தமிழினத்துக்கு அற்பசொற்பச் சலுகை களை வழங்கி ஏமாற்றவும், அவர்களை அடக்கி ஒடுக்கவும் அன்றைய ஐக்கிய தேசியக் கட்சி அரசானது மாவட்ட சபை களை அறிமுகம் செய்திருந்தது. மாவட்ட சபையை உருவாக்குவதற்காகத் தேர் தலை நாடு முழுவதும் நடத்தியது. யாழ். மாவட்டத்தில் மாவட்ட சபையைக் கைப் பற்று வதற்காக ஐக்கிய தேசியக் கட்சி தேர் தலில் போட்டியிட்டது. இளைஞர்களின் பல எதிர்ப்புகளுக்கு மத்தியில் தமிழர் விடு தலைக் கூட்டணி போட்டியிட்டது. அன் றைய ஆட்சியாளர்கள் யாழ்.குடாவில் தேர்தலில் சதிகளைச் செய்து தமிழர் களின் வாக்குகளைப் பெற்று மாவட்ட சபையைக் கைப்பற்றுவது அல்லது இரண்டொரு உறுப்பினர்களையாவது வெற்றி பெற வைப்பது என்ற எண்ணத் தில் இருந்தனர். இப்படியான தீயநோக் கோடு அப்போதைய அமைச்சர்களான காமினி திஸநாயக்க, சிறில் மத்தியூ ஆகி யோர் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தனர். விடுதியில் தங்கியிருந்த அவர்கள் மாவட்ட சபைத் தேர்தலில் ஒருவரைக் கூடத் தெரிவு செய்ய முடியாத நிலையை அறிந்து கொண்டதும் தங்களுக்கான வெற்றி வாய்ப்பை தமது பக்கம் திருப்பு வதற்காக தேர்தல் கால இறுதி நேரப் பரப்புரைகளின்போது வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுவதற்கு திட்டம் தீட்டினர். மறைமுகப் போராளி இயக்கங்களின்

**97 ஆயிரம் அரிய நூல் களோடு பழைமை வாய்ந்த 1800 ஓலைச் சுவடிகளும் ஒன்று சேர்ந்து எரிந்து சாம்ப லாகின. இருபதாம் நூற் றாண்டில் யாழ்.பொது நூலகம் தீயிட்டு அழிக்கப்பட்ட சம்பவம் ஒரு மிகப்பெரும் வன்முறையாகக் கருதப்படு கின்றது. நூலகம் எரிக்கப் பட்ட காலப்பகுதியில் யாழ்ப் பாணப் பொதுநூலகம் தென் கிழக்காசியாவிலேயே மிகப் பெரிய நூலகமாகத் திகழ்ந்தது.**

தீவிர நடவடிக்கைகளும் அரசுக்கெதிராக ஆரம்பமாகியிருந்த வேளையில் மே மாதம் 31 ஆம் திகதி இரவு யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயில் பகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் நடைபெற்றுக் கொண் டிருந்த வேளையில் அங்கு கடமைக்கு நின்றிருந்த பொலிஸாரை நோக்கித் துப் பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட தில் ஒருவர் உயிரிழந்ததுடன் இருவர் படுகாயமடைந்தனர்.

ஆத்திரமடைந்து மூர்க்க குணம் கொண்ட பொலிஸாரும் இரு அமைச்சர்களின் தலைமையில் கொண்டு வரப்பட்டிருந்த வன் முறைக்கும்பலும் ஒன்று சேர்ந்து மே 31 ஆம் திகதி தொடக்கம் ஜூன் மாதம் இரண்டாம் திகதி வரை யாழ்ப்பாணத் தலைநகரைத் தீயோடு எரித்து சங்கம மாக்குகின்ற ஊழிக்கூத்தை தமிழர்களின் குருதியை உறைய வைக்கும்படியாக அரங்கேற்றி முடித்தனர்.

மே 31 ஆம் திகதி இரவு நாச்சிமார் கோயி லடியில் பொலிஸார் மீது நடத்தப்பட்ட தாக்குதலையடுத்து நாச்சிமார் கோயி லடியிலிருந்து யாழ்ப்பாண நகர் வரை வர்த்தக நிறுவனங்கள் மற்றும் பல கட் டடங்கள், யாழ்ப்பாணம் பஸ் நிலை யத்தையொட்டிய தொடர் வரிசையாக வுள்ள கடைகள் அனைத்தையும் பெற் றோல் ஊற்றி எரித்த பின்னர் யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த வரான வெ.யோகேஸ்வரன் குடும்பத் தின் மீதும் உயிராபத்தை ஏற்படுத்துவதற் காக வைத்தியசாலைக்கு அருகில் இருந்த யோகேஸ்வரனின் வீட்டையும், பிரதான வீதியிலிருந்த தமிழர் விடு தலைக் கூட்டணியின் தலைமைச் செயலகத்தையும் தீயிட்டு எரித்தனர்.

யாழ்ப்பாணத் தொகுதி நாடாளும ன்ற உறுப்பினர் யோகேஸ்வரனின் வீட்டுக்குத் தீமூட்டி எரித்த காவல் துறையினர் யோகேஸ்வரனையும் அவரது மனைவியையும் தீயுடன் எரித்துக் கொல்ல முயற்சித்த வேளையில் இருவரும் தமது வீட்டிலிருந்து பின்புறச் சுவர் வழியாகப் பாய்ந்து உயிர் தப்பித்துக் கொண்டனர்.

காவல்துறையினரது வன்செயல் கள் யாவும் விலாவாரியாக அடுத்த நாள் ஈழநாடு தினசரியில் வெளியா கியிருந்தது. ஜூன் மாதம் முதலாம் திகதி இரவு ஈழநாடு பத்திரிகைக் காரியாலயத்தைத் தீமூட்டி எரித்த அதே சமகால இடை வெளியில் ஈழத் தமிழ் மக்களின் அறிவுப் பொக்கிச மாகவும், திராவிட சிற்பவி யல் பாங் கில் வடிவமைக்கப்பட்டது மான யாழ்ப்பாணப் பொது நூலகத்தை காவல்துறையினரும், வன்முறைக் கும்பலும் ஒன்று சேர்ந்து தீயிட்டுப் பொசுக்கி ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கு விசுவாசத்தைத் தெரிவித்திருந்தனர்.

97 ஆயிரம் அரிய நூல்களோடு பழைமை வாய்ந்த 1800 ஓலைச் சுவடிகளும் ஒன்று சேர்ந்து எரிந்து சாம்பலாகின. இருபதாம் நூற்றாண்டில் யாழ்.பொதுநூலகம் தீயிட்டு அழிக்கப் பட்ட சம்பவம் ஒரு மிகப்பெரும் வன் முறையாகக் கருதப்படுகின்றது. நூலகம் எரிக்கப்பட்ட காலப்பகுதியில் யாழ்ப் பாணப் பொதுநூலகம் தென்கிழக் காசி யாவிலேயே மிகப் பெரிய நூலகமாகத் திகழ்ந்தது.

ஈழத் தமிழர்களின் பெரும் செல்வமாக விளங்கிய பொதுநூலகம் எரியூட்டிச் சிதைக்கப்பட்டு 35 ஆண்டுகள் இன் றுடன் நிறைவு பெறுகின்றன. 1981 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி நள் ளிரவு 12 மணிக்குப் பின்னர் அறிவுக் களஞ்சியமான யாழ்ப்பாணப் பொது நூலகம் சிங்கள வன்முறைக் கும்பல் களினால் மூட்டப்பட்ட செந்தணலில் பொசுங்கி நீறாகிப் போன துயரச் சம் பவத்தைத் தாங்கமுடியாது யாழ்ப்பாண சம்பத்திரிசியார் கல்லூரி மாடியில் இருந்து அவதானித்த நடமாடும் பல் கலைக்கழகமாகக் கருதப்பட்ட பன் மொழிப்புலவர் வண.தாவீது அடிகளார் மாரடைப்பால் உயிரிழந்தார்.

யாழ். பொது நூலகத்தை எரித்த அரா ஜகச் செயல்களை ஈழநாடு தினசரி அடுத்த நாள் முக்கிய செய்திகளாகப் பிர சுரித்து வெளியிடாதவாறு அந்தப் பத்தி ரிகை நிறுவனத்துக்குள் புகுந்த வெறிகொண்ட வன்முறையாளர்கள் கட்டடத்தைத் தீயிட்டுக் கொளுத்தினர். இதனால் ஈழநாடு பத்திரிகையும் வெளி வராத செய்தியை அறிந்த குடாநாட்டு மக் களில் பலர் சம்பவங்களை நம்ப மறுத் தனர். மக்கள் பலர் யாழ்.பொதுநூல் நிலையம் நோக்கி விரைந்தனர். நேரில் கண்டவர்கள், பார்த்தவர்களால் உண் மைச் செய்தியாகத் தீவிரமாக மூலை முடுக்கெங்கும் பரவியது. ஈழத்தமிழர்கள் உயர்ந்த கல்வி வளர்ச்சியை எட்டிவிடக் கூடாது என்ற தீயநோக்கில் அப்போதைய அரசு பொது நூலகத்தை அழித்தி ருந்தது.

யாழ்ப்பாண நூலகம் 1933 ஆம் ஆண் டிலிருந்து கட்டியெழுப்பப்பட்டு வந்தது. ஆரம்பத்தில் சிலரது தனிப்பட்ட சேகரிப் புடன் பொது நூலகம் ஆரம்பிக்கப்பட்டு குறுகிய காலப்பகுதிக்குள் தமிழ் மக் களின் பெரும்பங்களிப்புடனும், ஆதர வுடனும் முழுமையான தோற்றத் தையடைந்திருந்தது.

யாழ்ப்பாணத்தின் பல பாகங்களி லிருந்தும் தனிப்பட்டவர்களிடமிருந்தும் கிடைத்த பல நூல்கள் மட்டுமன்றி பழைமை வாய்ந்த 1800 ஓலைச்சுவடிகள், பத்திரி கைகளின் மூலப்பிரதிகள் போன்ற வையும் பொது நூல்நிலையத்தில் வைக் கப்பட்டிருந்தன. நூலகத்தின் முதலாவது கட்டடம் 1959 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது. ஈழத்தமிழர்களின் பெரும் செல்வமாகிய யாழ்ப்பாண நூலகம் தீயுடன் நீறாகி 35 ஆண்டுகளாகி விட்டன.

இலங்கைக் கம்யூனிஸ் கட்சியின் தலை வரான பீற்றர் கெனமன் இந்தச் சம்பவங் களை மேலும் அறிந்து கொள்வதற்காக கட்சியின் பத்திரிகையான அத்தவின் ஒளிப்படப்பிடிப்பாளரோடு யாழ்ப்பாணம் வருகை தந்திருந்தார்.

யாழ்.மாவட்ட சபைத்தேர்தல் காலப் பகுதி யில் நிகழ்ந்த வன்செயல்களை விசா ரிப்பதற்கென அப்போதைய ஜனாதிபதி யால் தனிநபர் விசாரணைக் குழு நியமிக்கப்பட்டது. ஆணைக் குழு வினால், எரியூட்டப்பட்ட பொது நூல கத்துக்கு ஒரு கோடியே இருபது லட்சம் ரூபா நட்டஈடாக பரிந்துரைக்கப் பட்டி ருந்தும் ஒரு சதமேனும் அரசால் வழங் கப்படவில்லை. பரிந்துரைக்கப்பட்ட நிதியை வழங்கினால் தனது அரசே நூலகத்தை எரித்த குற்றத்தை ஒப்புக் கொண்டதாகிவிடும் என்ற உண்மையை அறிந்து கொண்டு அதிலிருந்து அரசு பின்வாங்கியது.

அரசால் ஜனாதிபதி யாழ். பொது நூலக புனரமைப்பு நிதி என்ற பெயரில் வங்கி யூடாக புதிய கணக்கு ஆரம்பிக்கப்பட்டு மொத்தமாக இருபது லட்சம் ரூபா மட் டுமே நிதியாக வைப்பிலிடப்பட்டது. மீண்டும் நூலகம் புனரமைக்கப்பட்டு உயர்ந்து நிற்க வேண்டு மெனக் கருதி அதற்கான முழு முயற்சிகளை சமூக ஆர்வலர்கள் மேற்கொண்டிருந்தனர். நூலகம் மீள் விக்கப்படவேண்டிய சிந்தனை புதிய உத்வேகத்துடன் உருவாகியது. அப் போது யாழ். மாநகர விசேட ஆணை யாளராக இருந்த வரும் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவருமான சி.வீ.கே.சிவஞானம், பேராசிரியர் கு.நேசையா, யாழ்.மாநகர சபையின் முதல்வராக இருந்தவரான இராஜா விஸ்வநாதன் ஆகியோரும் இதற் காக அயராத முயற்சியில் ஈடுபட்டனர்.

புலம் பெயர் தமிழர்கள், கல்விப்புலம் சார்ந்தவர்கள், சமூக நிறுவனங்கள், வர்த்த நிறுவனங்கள், அரச பொது நிறுவனங்களின் உதவிகளோடு புன ரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப் பட்டன. சில மாதங்கள் நகரசபை மண் டபத்தின் பத்திரிகை, சிறுவர் பகுதிகள் செயற்படுத்தப்பட்டு நடைபெற்று எரிந்த கட்டிடத்தின் வடக்குப் பக்கப் பிரிவுகள் தி ருத்தப்பட்டு 10.12.1982 இல் சிறிய அளவில் இயங்கத் தொடங்கியது. புனர மைப்பு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் அதேவேளை முனியப்பர் கோயில் பக்கமாக பழைய கட்டடத்துடன் இணைத்து புதிய கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு எதிர்க்கட்சித் தலை வரான அ.அமிர்தலிங்கத்தால் 04. 06.1984 இல் திறந்து வைக்கப்பட்டது.

1981 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொது நூலக எரிப்புச் சம்பவமானது இனப் பிரச்சினையில் ஒரு மாற்றுக் காலமா கக்காணப்படுகின்றது. இனப்பிரச்சினை அப்போதே சர்வதேசமயப்படுத்தப்பட்டு ஆசியாவில் மிகவும் சிறப்பான நூல் நிலையங்களில் ஒன்று அழிக்கப் பட் டமை உலகத்தின் பார்வையில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

தமிழினத்தின் விடுதலைக்கான வர லாற்றில் பொது நூலகம் தீயுடன் சாம் பலாகியது ஒரு சரித்திரக் குறியீடாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி விவேகானந்தரின் மன உறுதி



ஒரு சமயம் சுவாமி விவேகானந்தர் லண்டன் மாநகருக்குச் சென்றிருந்தார். அங்கு அவரது நண்பர் ஒருவரின் பண்ணை வீட்டில் தங்கியிருந்தார். அந்தப் பண்ணை வீடு மிகப் பெரிய நிலப்பரப்பில், இயற்கை எழில் சூழ்ந்த இடத்தில் இருந்தது. அங்கே நிறைய மாடுகள் வளர்க்கப்பட்டன. ஒரு நாள் மாலை, பண்ணை மைதானத்தில் விவேகானந்தர் நடந்து சென்று கொண்டிருந்தார். அவருடன் நண்பரும், நண்பரின் மனைவியும் நடந்து சென்று கொண்டிருந்தனர். அப்போது, சற்றும் எதிர்பாராதவிதமாக ஒரு மாடு அவர்களை நோக்கி சீறிப் பாய்ந்து வந்தது. அதன் மூர்க்கத்தனமான ஓட்டத்தைப் பார்த்து பயந்து போன நண்பரின் மனைவி, அப்படியே மயங்கி விழுந்துவிட்டார். நண்பர் மனைவியைத் தூக்க முயன்றார். அப்போது மாடு அவர்களை நெருங்கிவிட்டது. நண்பருக்குக் கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை. இன்னும் சில நொடிகள் அங்கே இருந்தால் மாட்டின் கொம்புகளுக்கு இரையாக நேரிடும் என்பதை உணர்ந்த நண்பர், தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள எழுந்து வேறு திசையில் ஓடினார். ஆனால், விவேகானந்தர் அப்படி இப்படி அசையாமல் ஆணி அடித்தது போல் அந்த இடத்திலேயே நின்று விட்டார். பாய்ந்து வந்த மாடு கீழே விழுந்து கிடந்த நண்பரின் மனைவியையும் விவேகானந்தரையும் விட்டு விட்டு, ஓடிக்கொண்டிருந்த நண்பரைத் துரத்தியது. அதிர்ஷ்டவசமாக ஒரு கட்டடத்துக்குள் புகுந்து தப்பினார் நண்பர். அதன் பிறகே பண்ணை ஊழியர்கள் ஓடி வந்து மாட்டைப் பிடித்துக் கட்டிப்போட்டனர். விவேகானந்தர் அதன் பிறகே அந்த இடத்தை விட்டு அசைந்தார். அங்கு வந்த நண்பருக்கோ ஒரே வியப்பு. அப்போது நண்பரின் மனைவியும் மயக்கம் தெளிந்து எழுந்தார். சிறிதுகூட பயமே இல்லாமல் அந்த ஆபத்தான நேரத்திலும் ஒரே இடத்தில் உறுதியாக உங்களால் எப்படி நிற்க முடிந்தது? என்று கேட்டார் நண்பர். அதைக் கேட்டு மெல்லப் புன்னகைத்த விவேகானந்தர், நான் வித்தியாசமாக எதையும் செய்து விடவில்லை. வருவது வரட்டும்; சமாளிப்போம் என்ற ஒருவித மன உறுதியுடன் நின்றுவிட்டேன். ஓடுபவரைக் கண்டால் துரத்திச் செல்வது மிருகங்களுக்கு உரிய குணம். அதனால்தான் மாடு என்னை விட்டுவிட்டு, ஓடிக்கொண்டிருக்கும் உங்களைத் துரத்தியது என்று முடித்தார். உயிருக்கு ஆபத்தான நேரத்தில் கூட, அதைக் கண்டு பயந்து ஓடாமல், வருவது வரட்டும் என்ற மன உறுதி பெற்றிருந்த சுவாமி விவேகானந்தரைப் பார்த்துப் பெரிதும் வியந்தார் அந்த நண்பர்.



# வரலாற்றில் இன்றைய தினம்

455 - ரோம் நாட்டை விட்டு தப்பி ஓடும்போது, ஆத்திரம் கொண்ட கும்பலால் பேரரசர் பெற்றோனியஸ் மக்ஸிம்ஸ் கல்லெறிந்து கொலை செய்யப்பட்டார்.

526 - சிரியா அன்ரியோச் பிராந்தியத்திலேற்பட்ட பெரியளவிலான நில நடுக்கத்தில் 2 லட்சத்து 50ஆயிரம் பேர் சாவு.

1805 - டயமன் குன்றில் நிலைகொண்ட பிரித்தானியப் படைகளுக்கு எதிராக பிரான்ஸ் மற்றும் ஸ்பானிஷ் படைகள் தாக்குதலை மேற்கொண்டன.

1859 - பிரித்தானிய நாடாளுமன்ற மணிக் கூட்டுக் கோபுரத்திலமைந்த பிக்பென் கடிகாரம், நேரம் காட்டும் செயற்பாட்டைத் தொடங்கியது.

1889 - பெனிசில்வேனியா ஜோன்ஸ்ரவுண் நகரில் அணை உடைப்பெடுத்ததால் ஏற்பட்ட பெரு வெள்ளத்தில் 2200 பேர் சாவு.

1910 - தென் ஆபிரிக்க யூனியன் உருவாக்கப்பட்டது.

1911 -டைட்டானிக் கப்பலின் புறச்சட்டம் அமைக்கும் பணி தொடங்கப்பட்டது.

1911 - மெக்ஸிகன் புரட்சியை அடுத்து மெக்ஸிகோ ஜனாதிபதி போர்ட் பிரியோ டயஸ் நாட்டைவிட்டுத் தப்பியோடினார்.

1929 - 'த கார்னிவல் கிட்' எனும் மிக்கி மவுஸ் கார்ட்டூன் முதல் பேசும்படம் வெளியிடப்பட்டது.

1935 - 7.7 மக்னிரியூட் அளவிலான நில நடுக்கத்தில் பாகிஸ்தானின் கியூட்டாவில் 40ஆயிரம் பேர் சாவு.

1961 - தென் ஆபிரிக்க யூனியன் தென் ஆபிரிக்கக் குடியரசாகியது.

1970 - 7.9 அளவிலான நிலநடுக்கம் பெரு நாட்டில் ஏற்பட்ட போது இடம்பெற்ற மண்சரிவில் யங்கே நகர் புதையுண்டதில் பல்லாயிரக் கணக்கானவர்கள் சாவு. ஏராளமானவர்கள் காயமடைந்தனர்.

1981 - இருபதாம் நூற்றாண்டின் இனத்துவ நூல்கள் மீதான வன்முறைக்கான உதாரணங்களில் ஒன்றாக யாழ். பொதுசன நூலக எரிப்பு இடம்பெற்றது.

1992 - தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோவில் மீது குண்டு வீச்சு. 4 பேர் சாவு.

2003 - ஈராக் போர் தொடர்பாக தவறான தகவல்களை வழங்கியதாக பிரிட்டன் பிரதமர் மீது குற்றச்சாட்டு

2004 - ஜூன் மாதம் முழுவதும் சுற்றுச் சூழல் விழிப்பு மாதமாக பொருண்மிய நிறுவனம் பிரகடனம். சூறாவளிப் பரப்புரைக்கு ஏற்பாடு.


2004 - தமிழ் ஊடகவியலாளர் நடேசன் மட்டக்களப்பில் பட்டப் பகலில் சுட்டுக்கொலை.

2004 - ஊடகவியலாளரின் உரிமைகளுக்கு உத்தரவாதமளிப்பது எவரென ஊடகப் பிரதியமைச்சர் சேகு இஸதீன் அறிக்கை மூலம் கேள்வி.

2004 -சவூதியில் பயணக் கைதிகள் அதிரடிப் படையால் மீட்கப்பட்ட போது 25 பயணக் கைதிகள் சாவு. அவர்களில் 2 பேர் இலங்கையர்கள். மேலும் 5 இலங்கையர்கள் மீட்கப்பட்டனர்.

2004 - சூடாநாட்டின் கல்வி நிலைமை தொடர்பாக உலக வங்கிக் குழு ஆராய்ந்தது.

2004 - விடுதலைப் புலிகள் மீதான தடை தொடரும் என இந்தியா அறிவிப்பு.





# வர்ணம் தீட்டுவோம் வாங்க....

## விடுகதைகள்

1.முக்கண்ணன் சந்தைக்குப் போகின்றான் அவன் யார்?
தேங்காய்

2.மீன் பிடிக்கத் தெரியாதாம் ஆனால் வலை பின்னுவானாம் அவன் யார்?
சிலந்தி

3.தொடலாம், ஆனால் பிடிக்க முடியாது அது என்ன?
தண்ணீர்

4.உணவை எடுப்பான். ஆனால் உண்ணமாட்டான் அவன் யார்?
அகப்பை

5.வெள்ளம் வெள்ளமாக கறுப்பன் கண்ணீர் விட்டானாம் அவன் யார்?
மழை மேகம்,

6.ஒற்றைக் கிண்ணத்துக்குள் இரட்டைத் தைலங்கள் அவை எவை?
முட்டைக்கருக்கள்

7. காலில் தண்ணீர் குடிப்பான், தலையில் முட்டையிடுவான் அவன் யார்?
தென்னைமரம்

8.எட்டாத ராணி இரவில் வருவாள். பகலில் மறைவாள் அவள் யார்?
நிலா

9.நடந்தவன் நின்றான். கத்தியை எடுத்து தலையைச் சீவினேன். மறுபடி நடந்தான். அவன் யார்?
பென்சில்

## ஒத்த கருத்துச் சொற்கள்

1.தரை - நிலம்
2. கேள்வி - வினா
3. பணிவு - அடக்கம்
4. நிதம் - தினமும்
5. அற்புதம் - புதுமை
6. கர்வம் - ஆணவம்

ஜெ.துரிகா
தரம் - 4பி.
யாழ்/ நல்லூர் சென்.பெனடிற் வித்தி.

## பொது அறிவு

01. அதிக அளவு துணைக் கோள்களைக் கொண்ட கிரகம் எது?
வியாழன்

02. சந்திரனில் காலடி எடுத்து வைத்த முதல் மனிதர் யார்?
நீல் ஆம்ஸ்ட்ராங்

03 வெங்காயத்தில் உள்ள வைட்டமின் எது?
வைட்டமின் B

04. ஆப்கானிஸ்தானின் தலைநகரம் எது?
காபுல்

05. கம்பளிக்காக வளர்க்கப்படும் ஆடுகளை எப்படி அழைப்பர்?
மரினோ

06. நிக்கல் உலோகத்தை கண்டு பிடித்தவர் யார்?
கிரான்ஸ்டட்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நல்லாட்சி அரசின் பிடிவாதம் நல்லதல்ல

இன்னம் சில வாரங்களில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 32ஆவது அமர்வு ஆரம்பமாகவுள்ள ஒரு தருணத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ள கருத்துகள் தமிழ் மக்கள் மத்தியில் மீண்டுமொரு தடவை நம்பிக்கையீனங்களை விதைக்கக்கூடியவையாகக் காணப்படுகின்றன.

இலங்கையின் உள்நாட்டுப் போரின் இறுதித் தருணங்களில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் குறித்த விசாரணைகளுக்காக உருவாக்கப்படவுள்ள பொறிமுறைகளில் சர்வதேசப் பிரசன்னம் எதற்கும் வாய்ப்பில்லை என்பதே அவர் தெரிவித்துள்ள விடயம்.

சில மாதங்களுக்கு முன்னர் ஜனாதிபதி சிறிசேன சர்வதேச ஊடகங்கள் இரண்டுக்கு அடுத்தடுத்து அளித்த பேட்டியில் இதே கருத்தை முன்வைத்திருந்தார்.

தமிழ் மக்களையும், இலங்கையின் நிரந்தர சமாதானம் மற்றும் நல்லிணக்கம் குறித்து நேர்மையான அக்கறை கொண்டிருப்பவர்களையும் அந்தக் கருத்துகள் அப்போது கலக்கமடையச் செய்திருந்தன.

தற்போது அதனைப் பிரதமர் செய்துள்ளார்.

இந்தக் கருத்தை அவர் தெரிவித்த சந்தர்ப்பமும் முக்கியமானது. சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளுடனான சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் பல பகுதிகளில் பணிபுரியும் இராணுவ அதிகாரிகள் கலந்து கொண்டுள்ளனர்.

இலங்கையில் இடம்பெற்ற வானவில் புரட்சிக்குப் பின்னர் புதிதாக ஆட்சிப் பொறுப்பை ஏற்ற அரசு, தான் எதிர்கொண்ட ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபையின் முதலாவது அமர்வை தந்திரோபாய அடிப்படையில் வெற்றி கொண்ட பின்னர், சர்வதேச சமூகத்துடன் நல்லுறவுகளைப் பேணுவதற்குத் தயார் என்பதை முன்னிறுத்தி மனித உரிமைகள் சபையின் அடுத்த அமர்வை எதிர்கொண்டமை நாம் அறிந்த விடயம்.

செப்ரெம்பர் அமர்வில் இலங்கை மிகவும் வலுவான ஒரு தீர்மானத்தை எதிர்கொள்ளுமெனத் தமிழ் மக்கள் எதிர்பார்த்திருந்தவேளை, நீர்த்துப்போன தீர்மானமே நிறைவேற்றப்பட்டது.

அதில் குறிப்பிடப்பட்ட மிகச் சில விடயங்கள் மாத்திரமே பாதிக்கப்பட்ட மக்களுக்கு நம்பிக்கை அளிக்கக்கூடியவையாகக் காணப்பட்டன.

அதில் முக்கியமானது, பொதுநலவாய மற்றும் வெளிநாட்டு நீதிபதிகள் உள்ளிட்டோரை உள்ளடக்கிய போர்க் குற்றங்களுக்கான விசேட சுயாதீன நீதிமன்றம்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை இந்த வகை நீதிமன்றத்தை வலியுறுத்துவதற்கான காரணங்கள் ஆழமானவை. அதில் மிக முக்கியமானது நம்பகத்தன்மை.

முற்றுமுழுதாக இலங்கையர்கள் அங்கம் வகிக்கும் பொறிமுறை மீது நம்பிக்கையின்மையே மனித உரிமைகள் சபை சர்வதேசத்தின் பிரசன்னத்தை அதிகளவுக்கு முன்நிறுத்துவதற்குக் காரணம்.

கடந்தகால ஆணைக்குழுக்களின் வரலாறுகள், தமிழர் விவகாரத்தில் நீதித்துறை சார்ந்த செயற்பாடுகள் குறித்து நன்குணர்ந்துள்ள உலக நாடுகள் அவ்வாறானதொரு வரலாறு காணப்படும்போது மீண்டும் உள்நாட்டு பங்களிப்புடன் மாத்திரம் ஒரு பொறிமுறையை உருவாக்குவது பாதிக்கப்பட்டவர்களுக்கு நம்பிக்கையை அளிக்காது என்பதை நன்றாக அறிந்துள்ளன.

வலிகளை எதிர்கொண்டுள்ள மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு சர்வதேசப் பிரசன்னம் மிகவும் அவசியம். இதனைப் பல தடவைகள் தமிழர் தரப்புகளும் முன்வைத்துள்ளன.

இலங்கையின் நலன் குறித்து அக்கறை கொண்டவர்களும் பல தடவைகள் அது பற்றிச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதனையும் மீறி அரசு இந்த விடயத்தில் பிடிவாதமாகயிருப்பதானது என்ன நோக்கங்களுக்காக இத்தகைய பொறிமுறைகள் ஏற்படுத்தப்படுகின்றனவோ அவற்றின் மீது தாக்கத்தை ஏற்படுத்தலாம்.




# அரிச்சந்திரனும் யோபுவும்

சாமஸ்ரீதேசமானிய பா.பாலச்சந்திரன்

(நேற்றைய உதயனில் வெளியான 19 ஆம் பக்கக் கட்டுரையின் தொடர்ச்சி ...)

அங்கே யோபு சாம்பல் மேட்டில் ஓட்டால் சொறிந்து கொண்டு இருக்க, காட்டில் விசுவாமித்திரனின் சாபத்தைப் பெற்ற அரிச்சந்திரனிடம் இருந்து முனிவன் தந்திரமாக அரசைப் பெற்றுக் கொண்டான். இப்போது கவனிக்க வேண்டியது ஒன்றுள்ளது. அரசன் முன்பு யாகத்துக் குத் தருவதாகக் கூறிய தொகையைக் கொடுக்க முடியவில்லை. இப்போது அவனிடம் ஒன்றுமிருக்கவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி முனிவன் முன்னம் தருவதாக ஒப்புக்கொண்ட தொகையைத் தாவென்றான். அரசன் காசிநகர் போனான். மனைவியையும் பிள்ளையையும் விற்று முனிவனின் பதாகையைக் கொடுத்தான். ஆனால் இது காலமும் உடன் சென்ற சல்லியன் தனக்கும் கூலி கேட்கத் தன்னையும் விற்று அதைக் கொடுத்தான். முனிவனின் திட்டம் தோல்வியடைந்தது. ஆனால் அரிச்சந்திரன் புலைஞன் ஒருவனுக்கு அடிமையாகிப் பிணம் எரித் தான். அவனது மனைவியான அரசியும் இளவரசனும் ஒரு பிராமணனுக்கு அடிமைகள் ஆயினர். தீவினை தனித்து வராது திரண்டு வரும் என்பதற்கு ஏற்ப அவர்களுக்கு பின்பும் பல சோதனைகள் ஏற்பட்டன. அந்த அந்தணனுக்கு அடிமைப்பட்ட தாயும், மகனும் அவனுடைய கடும்போக்கான செயல்நிலைகளினுள் ஆட்பட்டுக் கொண்டனர்.. ஒருநாள் மகன் தர்ப்பைப்புல் வெட்டச் சென்றவிடத்தில் அரவம் தீண்டி இறந்து போனான். அந்தக் கல்நெஞ்ச ஆண்டான் தானும் ஒன்றும் செய்யவில்லை. தாயையும் போகவிட மறுத்தான். அவனது உடலை மயானம் காப்போன் கூட ஏற்க மறுத்தான். கொடுக்க வேண்டியவையை கொடுக்காது எரிக்க முடியாது என்றான். அப்போது சந்திரமதி புலம்பியழுதாள். இந்தச் சந்தர்ப்ப சூழ்நிலைகள் வந்திருப்பது அவனது மனைவி என்பதையும் இறந்துபோனது தனது மகன்தான் என்பதையும் அரிச்சந்திரனுக்கு அடையாளப்படுத்தியது.இருவரும் அழுதனர். பின்பு அவளை ஆண்டானிடம் பணித்தான் பொருள்களைப் பெற்று வரும்படி அனுப்பினான்.

அவளும் நம்பிக்கை இழந்தவளாகப் போகிறாள். போகும் பாதையின் வழியே சிறுவன் ஒருவனின் உடலைக் கண்டு கொள்கிறாள். அது காசிராஜாவின் மகனது உடல் என்பதை அடையாளம் கண்டு கொள்கிறாள். இருந்தும் இவள் மீதான சந்தேகம் வலுப்பட காவலரால் கைதான அவளுக்கு சாவுத் தண்டனை விதிக்கப்பட்டது. அவளது கழுத்தைத் துண்டிக்கும் வேலையும் அரிச்சந்திரனிடமே ஒப்படைக்கப்படுகின்றது. இதைப் பார்க்க ஆகாயத் தேவர்கள் கூடினர். அவனதை நிறைவேற்ற முற்படும்போது முனிவன் அவன் முன்தோன்றினான். அவனைப் பார்த்து ஏன் இந்தப் பாவம் புரிகிறாய். உனை விடுவிக்கிறேன், ஆனால் ஏன் நீ எனக்கு எதற்காக அரசைத் தரவில்லை என்று கூறினால் போதும் என்றான். அதற்கு அவனும் மனைவியும் அப்படி வாழ்வதைப் பார்க்கிலும் இறப்பது மேலெனக் கூறினர். கடமையைச் செய்யும்படி அவள் கூற அவன் வாளை வீசினான். அது மாலையாக மாறி அவள் கழுத்தில் வீழ்ந்தது. சிவனும் காட்சி கொடுத்தார். இறந்த சிறுவன் உயிர் பெற்றான். அரசனும், அரசியும் முன்பு போல மாறினர். அரசையும் பெற்றனர்.

யோபு சாம்பல் மேட்டில் இருக்கையில் பலரும் அவமதித்தனர். தன்னைத் தனது மனைவி, மக்கள், வேலையாள்கள், நண்பர்கள் இளவயதினர் ஒருவரும் மதிப்பதில்லையெனக் கவலைப்பட்டான். பரிகாசம் செய்வதாக வருத்தப்பட்டான். அவனது மூன்று நண்பர்கள் அவனைப் பார்க்க வந்தார்கள். அவர்கள் ஒரு வார காலமாக யோபுவுடன் கூட இருந்தனர். ஒரு வார்த்தை கூட அவன் பேசவில்லை. பின்பு அவர்களுடன் கதைத்தான். நால்வரும் மாறி மாறி உரையாடினர். யோபு அரிச்சந்திரனும் சந்திரமதியும் மாதிரி நான் நீதியாக நடந்த போதும் ஏன் இப்படி கஷ்டம் வரவேண்டும் எனப் பலவாறு பேசினான். அவர்கள், இல்லை நீர் பிழை செய்த படியால் தான் கர்த்தர் உம்மை வருத்துகிறார் என்றனர். இறுதியாக நான் காவது மனிதன் யோபுவை பிழையெனப் பேச தேவன் யோபுவுடன் பேசத் தொடங்கினார். தேவன் அவனுடைய நண்பர்களை கடிந்து யோபுவையும் தனது நியாயத்தை அவமாக்குவாயோவெனக் கேட்டு அவனுடைய நண்பர்களைப் பிராயச்சித்தம் செய்யும் படியும் கூறினார். யோபுவும் முன்னர் இருந்ததைவிடப் பலமடங்கு சிறப்பாக நூற்று நாற்பது வருடம் வாழ்ந்தான்.

வாய்மையும், உத்தமமும் எவ்வளவு சிறப்பானவை என்பதை சொல்வதில் இரு கதைகளும் பல வழிகளில் ஒத்துப்போவதை காணக் கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நூறு ரூபா கொடுத்து பார்க்கிற படத்தையே அலசி ஆராய்கிற எம்ம மக்களுக்கு



ஏன் வாக்கு போடும் போது வரமாட்டுது?



## அப்பா

**எத்தனையோ கஷ்டங்கள், நஷ்டங்கள், துன்பங்கள், துயரங்கள், அசிங்கங்கள், அவமானங்கள், கடந்த பிறகும் ஒன்றுமே தெரியாதது போல் காட்டிக் கொண்டு இருக்கும் தந்தைக்கு நிகரான நம்பிக்கை ஊட்டும் புத்தகம் இந்த உலகில் வேறெதுவும் இல்லை....**

**கணவன்:** அம்மாவுக்கு உடம்பு சரியில்லையாம். பணம் அனுப்ப சொல்லி, கடிதம் போட்டிருக்காங்க.

**மனைவி:** சுக்குக் காயம் காய்ச்சிக் குடிக்கச் சொல் லுங்க. எல்லாம் சரியாப் போய்டும்.


**கணவன்:** சரி அப்படியே உங்கம்மாவுக்கு எழுதிப் போட்டுகிறேன்..

**மனைவி:** ...?





நட்பின் நாயகன் @Natpu


பொறாமை, அடுத்தவன் வாழ்க்கையில் ஜெயிக்கும் போது வருவது...



# பொறியியலாளராகும் விஜய் ஆண்டனி

"பிச்சைக்காரன்" படத்தில் பெரும் தொழிலதிபராகவும், பிச்சைக்காரனாகவும் நடித்த விஜய் ஆண்டனி அடுத்து நடிக்கும் "சைத்தான்" படத்தில் பொறியியலாளராக நடிக்கிறார். "பிச்சைக்காரன்" படத்தில் பிச்சைக்காரன் "மேக்- அப்"புக்காக நிறைய செலவிட்ட விஜய் ஆண்டனி "சைத்தானி"ல் தனது இயல்பான தோற்றத்தில் நடிக்கிறாராம்! படத்துக்குப் படம் மாறுபட்ட பாத்திரங்களில் நடித்து வரும் விஜய் ஆண்டனிக்கு, பெரிதும் கை கொடுப்பது அவரது கதைத் தெரிவும், பாத்திரத் தெரிவும்தான்! ப்ரதி கிருஷ்ணமூர்த்தி இயக்கும் "சைத்தான்" படத்தில், விஜய் ஆண்டனிக்கு ஜோடியாக அருந்ததி நாயர் நடிக்கிறார். விஜய் ஆண்டனியின் "விஜய் ஆண்டனி "பிலிம் கார்பரேன்" தயாரிக்கும் "சைத்தானின் இசையையும்" விஜய் ஆண் டனியே கவனிக்கிறார். இந்தப் படம் தவிர "யமன்" என்ற படமும் விஜய் ஆண்டனி நடிப்பில் வளர்ந்து வருகிறது.





# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** அனுபவசாலியின் ஆலோசனையை ஏற்று நடப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் இருக்கிற அனுகூலத்தைப் பாதுகாக்கவும். மிதமான வருமானம் கிடைக்கும். புத்திரரைக் கண்டிப்பதில் நிதானம் தேவை.

**இடபம்:** புத்துணர்வுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக் கப் பெறுவர். குடும்பத்தினருடன் சுற்றுலா செல்லத் திட்டமிடுவீர்கள்.

**மிதுனம்:** விலகிய உறவினரும் நெருங்கி வரு வார். தொழில், வியாபாரத்தில் சீரான வளர்ச்சி உண்டாகும். நிலுவைப் பணம் கிடைக்கும். குடும்பத்தினருடன் விருந்து விழாவில் பங்கேற்பீர்கள்.

**கடகம்:** நல்லவரையும் தவறாக கருத நேரிட லாம். தொழில், வியாபாரத்தில் கடின உழைப் புத் தேவைப்படும். வருமானம் சுமாராக இருக் கும். வாகனப் பயணத்தில் மிதவேகம் தேவை. உடல்நலனில் கவனம் செலுத்துவீர்கள்.

**சிங்கம்:** தொடர்பில்லாத பணியால் சிரமம் உரு வாகலாம். தொழில், வியாபாரத்தில், புதிய சீர்தி ருத்தத்தில் ஈடுபடுவீர்கள். இலாபம் மிதமாக இருக்கும். உறவினரால் செலவு ஏற்படலாம். பெண்கள் நகை இரவல் கொடுக்க வேண்டாம்.

**கன்னி:** மனதில் உருவான திட்டம் செயல் வடிவம் பெறும். தொழில், வியாபார வளர்ச்சி யால், இலாபம் பன்மடங்கு உயரும். வாகனப் பயணம் இனிமை சேர்க்கும். மனைவி பாசத் துடன் நடந்து கொள்வார்.

**துலாம்:** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும். ஆதாயம் அதிகரிக்கும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தரு வீர்கள்.

**விருச்சிகம்:** மனதில் அதிருப்தி எண்ணம் உரு வாகலாம். தொழிலில் போட்டி குறுக்கிடுவதால், மந்தநிலை ஏற்படும். இலாபம் சுமார். பணி யாளர்கள், பணிச்சுமைக்கு ஆளாவர். பெண் களுக்குக் குடும்பச் செலவு அதிகரிக்கும்.

**தனுசு:** உங்களின் யதார்த்தப் பேச்சு, சிலரது மனதை புண்படுத்தலாம். தொழில், வியாபாரத் தில் மாறுபட்ட சூழல் உருவாகி, தொந்தரவு ஏற்படலாம். இலாபம் சுமார். பிள்ளைகளின் செயற்பாடு ஆறுதல் அளிக்கும்.

**மகரம்:** புதிய முயற்சி எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி உருவாகும். இலாபம் உயரும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும்.

**கும்பம்:** மனதில் குழப்பம் உருவாகி மறையும். குடும்பச் சூழல் உணர்ந்து பேசுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். இலாபம் சீராக இருக்கும். வாகனப் பயணத்தில், மிதவேகம் அவசியம்.

**மீனம்:** தனித்திறமையை வெளிப்படுத்துவீர் கள். சமூகத்தில் கூடுதல் அந்தஸ்து உருவாகும். தொழில், வியாபாரத்தில் வருமானம் உயரும். வழக்கு விவகாரத்தில் சமரச தீர்வு ஏற்படும். அரசியல் வாதிகளுக்கு எதிரிகளின் தொல்லை மறையும்.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 4 | | 9 | | 5 | | | 3 |
| | 7 | | | 8 | | | 9 | |
| | | 9 | | | | 4 | | |
| | 2 | | | 1 | | | 5 | |
| 9 | 8 | | | | | | 2 | 7 |
| | 6 | | | 9 | | | 3 | |
| 6 | | 8 | | | | 7 | 4 | |
| | 5 | | | 6 | | | 1 | |
| 4 | | | 7 | | 1 | | 8 | 6 |


நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 1 | 3 | 5 | 7 | 4 | 8 | 9 | 6 |
| 4 | 6 | 5 | 9 | 8 | 3 | 7 | 2 | 1 |
| 9 | 8 | 7 | 2 | 1 | 6 | 4 | 5 | 3 |
| 3 | 9 | 8 | 1 | 5 | 7 | 6 | 4 | 2 |
| 5 | 7 | 4 | 3 | 6 | 2 | 9 | 1 | 8 |
| 6 | 2 | 1 | 8 | 4 | 9 | 5 | 3 | 7 |
| 1 | 5 | 9 | 6 | 2 | 8 | 3 | 7 | 4 |
| 7 | 3 | 6 | 4 | 9 | 1 | 2 | 8 | 5 |
| 8 | 4 | 2 | 7 | 3 | 5 | 1 | 6 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதி யான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப் படை. 1–9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதி கள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்.) இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தட வைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டி ருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன மான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்ய மானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாங்காய் வடை



## தேவையானவை

மாங்காய் - 1 (துருவிக் கொள்ளவும்)
பச்சைமிளகாய் - 2 (விழுதாக அரைத்துக் கொள்ளவும்)
உளுத்தம் பருப்பு - 100 கிராம்
கடலைப் பருப்பு - 100 கிராம்
சோம்பு - 1 கரண்டி
உப்பு - தேவைக்கு
கறிவேப்பிலை - சிறிது
எண்ணெய் - தேவையான அளவு.

## செய்முறை

இருவகைப் பருப்புகளையும் நீரில் ஊறவைத்து கொர கொரப்பாக அரைத்துக் கொள்ளவும். இதனுடன் துருவிய மாங்காய், மிளகாய் விழுது, சோம்பு, உப்பு, அரிந்த கறிவேப்பிலை, கொத்தமல்லி சேர்த்துப் பிசைந்து கொள்ளவும். சட்டியில் எண்ணெய் விட்டுக் காய்ந்ததும் பிசைந்த மாவை வடையாகத் தட்டிப் பொன்னிறமாக இரு புறமும் திருப்பிப் போட்டு பொரித்தெடுக்கவும். எண்ணெய் நன்றாக சூடாகாவிட்டால் வடை எண்ணெய் குடிக்கும்.




# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 600 | 800 | 1000 | 800 | 700 |
| நண்டு | 250 | 400 | 300 | 450 | 400 | 300 | – |
| கணவாய் | 600 | 700 | 500 | 500 | 800 | 600 | – |
| பாரை | 550 | 600 | 500 | 600 | 800 | 800 | 480 |
| சுறா | 500 | 700 | 600 | 800 | 1000 | 1000 | – |
| சீலா | 300 | 500 | 400 | 500 | 500 | 400 | 450 |
| விளை | 650 | 500 | 400 | 500 | 300 | 700 | 500 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 400 | 400 | – |
| கும்பிளா | 400 | 400 | 300 | 450 | 500 | – | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | – | 600 | – | – |
| ஓரா | 400 | 400 | – | – | 450 | – | – |
| திரளி | 300 | 300 | 200 | 200 | 300 | 300 | 400 |
| நகரை | 250 | 300 | – | 250 | 400 | – | 400 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 200 | – |
| ஒட்டி | 300 | 250 | 150 | 250 | 300 | – | – |
| திருக்கை | 150 | 350 | 200 | 400 | 400 | 300 | 200 |
| மதனம் | 150 | 300 | 180 | 300 | 400 | – | 250 |
| கொய் | 100 | 200 | 60 | 80 | 100 | 100 | – |
| பாலை | 400 | 250 | 250 | 350 | 500 | 400 | – |
| வாளை | 100 | 200 | 200 | 400 | 400 | – | – |

## நாளை

**வைகாசி-19**

புதன்கிழமை - 01.06.2016
திதி: ஏகாதசி மா.06.38 வரை
நட்சத்திரம்: ரேவதி மு.இ.07.51 வரை
ராகுகாலம்: 11.52-01.22 வரை
சுபநேரம்: 04.22-05.52 வரை
ஏகாதசி விரதம்



# இது புதுச் பேஸ்கள்

புரோச், கண்ணாடி பொருத்தப்பட்ட பேஸ்கள் விற்பனை செய்யப்படுகின்றன. நீள் சதுர வடிவில், பல்வேறு வர்ணங்களில் காணப்படுகின்றன. இவை ஒவ்வொன்றும் 350 ரூபாவில் இருந்து 550 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன.

# சமையலறையில் இருக்க வேண்டியவை

### அலுமாரி

சமையலறையின் இடத்தை குளிர்ச்சியுடனும், சுத்தமாகவும் இருக்கக் கூடிய வகையில் அலுமாரி தோற்றமளிக்க வைக்கிறது. இது பாத்திரங்கள் நிறைந்து கிடப்பதை தவிர்ப் பது மட்டுமன்றி, பல பிரிவுகளையும், அலுமாரிகளுக்குள் அடக்கி வைத்துப் பொருள்களைச் சிறப்பாக ஒழுங்குபடுத்த உதவுகிறது.

### மைக்ரோவேவ்

இது சமையல் செய்யும் நேரத்தை சேமிப்பதோடு மட்டுமன்றி, உணவுபொருள்களை சூடேற்றும் தொந்தரவையும் அகற்றுகிறது. இன்றைய நாள்களில் எண்ணற்ற சமையல் குறிப்புகளை இந்த முறையில் சமைக்க முடியும். இதனை தவிர்த்து வேறு பல வகை உணவுக் குறிப்புகளையும் நல்ல முறையில் எடுத்து சமைக்க முடியும். இந்த முறையில் குறைவான அளவு எண்ணெயைப் பயன்படுத்தி உணவைத் தயாரிக்க முடியும்.

### குளிர்சாதனப்பெட்டி

ஒவ்வொரு வீட்டிலும் கட்டாயம் இருக்க வேண்டிய பொருளாகும். குளிர்சாதனப் பெட்டியில் அதிக இடம் இருப்பின் அதில் அதிக பொருள்களைப் பாதுகாத்து சேமித்து வைக்க முடியும். இதன் மூலம் அழுகும் தன்மையுள்ள அத்தியாவசிய பொருள்களை வாங்கும் பொருட்டு, நீங்கள் அடிக்கடி சந்தைக்கு செல்வதைக் குறைக்க முடியும்.

### கத்திகள்

சிறந்த கத்திகள் நமக்குத் தருவது உணவுப்பொருள்களை அற்புதமாக வெட்டும் அனுபவம். உணவுப் பொருள்களை சீவ உதவும் கத்தியிலிருந்து நமக்கு வெட்டும் பொருள்களின் தேவைக்கு ஏற்ப எண்ணற்ற கத்திகள் உள்ளன. சிறந்த சமையல்காரர், தாம் பயன்படுத்தும் கத்தியை வாங்க அதிகம் செலவிடுவதே சிறந்தது. ஏனெனில் அவ்வகைக் கத்திகளே நீடித்து உழைக்கும்.

### தட்டு

பிளாஸ்ரிக்கினாலான வெட்டும் தட்டைத் தவிர்த்து விடுங்கள். சமையல் செய்யும் பொழுதை நீங்கள் உற்சாகத்துடன் கழிக்க விரும்பினால் மரத்தினால் ஆன தட்டைப் பயன்படுத்தி காய்கறிகளை வெட்டுவதே ஆனந்தமளிப்பதாகும்.






# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | தம்புள்ளை | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 100 | 100 | 120 | 120 | 100 | – | 40 | 60 |
| கத்தரி | 250 | 200 | 200 | 200 | 200 | 240 | 70 | 120 |
| கரட் | 200 | 140 | 160 | 160 | 180–220 | 200 | 70 | 140 |
| மரவள்ளி | 60 | 60 | 60 | 60 | 60 | 80 | 40 | 45 |
| பயிற்றை | 120 | 120 | 120 | 120 | 160–200 | 100 | 90 | 140 |
| பாகல் | 140 | 200 | 240 | 180 | 180 | 140 | 120 | 130 |
| கருணைக்கிழங்கு | 100 | 90 | 120 | 120 | 80 | – | 60 | 70 |
| பெ.வெங்காயம் | 100 | 80 | 80 | 90 | 80 | 100 | 75 | 70 |
| சி.வெங்காயம் | 100 | 140 | 140 | 160 | 120 | 200 | 100 | 130 |
| பூசணி | 40 | 60 | 40 | 80 | 80 | 80 | 15 | 50 |
| தக்காளி | 200 | 200 | 180 | 180 | 200 | 120 | 140 | 120 |
| வாழைக்காய் | 60 | 40 | 50 | 60 | 30 | 60 | 35 | 30 |
| கீரை | 80 | 30 | 40 | 20 | 40 | 40 | 25 | 50 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 30 | 35 | 30 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 300 | 300 | 300 | 300 | 300–350 | 500 | 400 | 300 |
| புடோல் | 120 | 100 | 160 | 120 | 100 | 160 | 30 | 80 |
| கோவா | 160 | 160 | 200 | 160 | 160–180 | 200 | 90 | 120 |
| வெண்டி | 140 | 140 | 160 | 120 | 120–140 | 120 | 50 | 100 |
| போஞ்சி | 300 | 240 | 400 | 200 | 200–220 | – | – | 250 |
| லீக்ஸ் | 200 | 220 | 200 | 180 | 240 | 260 | 100 | 120 |
| தேங்காய் | 40 | 30 | 40 | 30–40 | 30 | 25 | 15–30 | 30 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 120 | 130 | 100–120 | 120 | 75 | 120 |
| தேசிக்காய் | 300 | 250 | 300 | 300 | 260 | 400 | 350 | 200 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 20 | 20 | 10 | 15 |
| கறிமிளகாய் | 200 | 240 | 280 | 200 | 300 | 160 | – | 200 |
| இராசவள்ளி | 160 | 160 | 150 | 160 | 160–180 | – | 110 | 120 |
| முருங்கைக்காய் | 160 | 140 | 100–200 | 120 | 200 | 200 | 150 | 160 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுட்பம்



## மைக்ரோசோப்டின் புதிய கடவுச்சொல் முறை

கணினி உலகுக்கு அத்திபாரம் போட்ட மைக்ரோசொப்ட் நிறுவனம், சேவைகளைப் பயன்படுத்துவதற்காக கணக்குகளைக் கையாள்பவர்களுக்கு புதிய கடவுச் சொல் பாதுகாப்பு முறைமையை அறிமுகப்படுத்தவுள்ளது.

மைக்ரோசொப்ட் கணக்குகளை வைத்திருப்பவர்கள், கணக்குகளை கையாளும்போது அதற்கான கடவுச் சொற்களை பயனர்களே தாம் விரும்பியவாறு தேர்ந்தெடுக்கும் வசதியை ஏனைய நிறுவனங்கள் போன்று மைக்ரோசொப்ட் நிறுவனமும் வழங்கி வந்தமை யாவரும் அறிந்ததே.

இதில் கடவுச் சொற்களுள் பாதுகாப்பு குறைவானதும், இலகுவாக கண்டுபிடிக்கக்கூடிய கடவுச் சொற்களும் அடங்குகின்றன. இந்த நிலையில், இதனைத் தடுப்பதற்காக மைக்ரோசொப்ட் நிறுவனம் புதிய நடைமுறை ஒன்றைக் கொண்டுவரவுள்ளது.

இதன்படி பயனர்கள் கடவுச் சொற்களை தேர்ந்தெடுக்கும்போது அவற்றுள் பாதுகாப்புக் குறைவான கடவுச் சொற்களை தடைசெய்து அவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கவுள்ளது.




## புதிய இணைய உலாவி

தொடுதிரைக் கைபேசிகளில் தற்போது கூகுள் குரோம், மொஸில்லா ஃபயர் பொக்ஸ் ஆகிய இணைய உலாவிகளே பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் தற்போது கில்லோ எனும் புத்தம் புதிய இணைய உலாவி ஒன்று விரைவில் அறிமுகம் செய்யப் படவுள்ளது.

இந்த உலாவியானது, கடந்த வருடமே வடிவமைக்கப்பட்டு அதன் சோதனைப் பதிப்பு அறிமுகம் செய்யப்பட்டிருந்தாலும், சரியான பதிப்பானது ஒரு வருடத்தின் பின்னர் மிக விரைவில் அறிமுகம் செய்யப் படவுள்ளது.

# சமபோச "வசந்த உதானய" நிகழ்வு

இளம் பிள்ளைகள் மத்தியில் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்காக தம்மை அர்ப்பணித்துக் கொண்டுள்ள சிலோன் பிஸ்கட்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் துணை நிறுவனமான பிளென்டி ஃபூட்ஸ்(பிரைவட்) லிமிடெட் நிறுவனத்தின் முன்னணி தானிய ஆகாரமான 'சமபோச' வர்த்தகநாமம் அண்மையில் தொடர்ந்து 9ஆவது ஆண்டாக கலென்பின்துனுவெல மெய்லகஸ்வெள பிரதேசத்தில் 'சமபோச வசந்த உதானய' நிகழ்வை முன்னெடுத்திருந்தது.

விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தையும், விவசாய சமூகத்தின் பொருளாதார ஸ்திரத்தன்மையையும் மேம்படுத்தும் நோக்கில் பிளென்டி ஃபூட்ஸ் நிறுவனம் பின்தங்கிய ஒருங்கிணைப்புச் செயற்றிட்டத்தை அறிமுகம் செய்திருந்தது.



இந்தச் செயற்றிட்டம் ஊடாக 'சமபோச' உற்பத்திக்கு தேவையான அனைத்து மூலப்பொருள்களும் உள்நாட்டு விவசாயிகளிடமிருந்து நியாயமான சந்தை விலையில் பிளென்டி ஃபூட்ஸ் நிறுவனம் கொள்வனவு செய்கிறது. இதன் காரணமாக சமபோச உயர் போசணை மட்டத்துடனும், உயர்தரத்துடனும் காணப்படுகிறது. எமது மக்களின் போசணைத் தேவையை நிவர்த்தி செய்யும் வகையில் சமபோச உற்பத்தி 100 சதவீதம் உள்நாட்டு மூலப்பொருள்களினால் உற்பத்தி செய்யப் பட்டுள்ளது என்பது நிரூபணமாகிறது. இதுவே எமது தேசத்தின் விவசாயத்துறையை மேம்படுத்த வழிவகுத்துள்ளது.

'கொவி பவுல' செயற்றிட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் 'கொவி சதுட்ட', 'கொவி சரண', 'கொவி தெனும', 'கொவி அரண' மற்றும் 'கொவி சுவய' போன்ற திட்டங்கள் மூலமாக இந்த நிறுவனம் தேசத்தின் விவசாயிகளையும், சமூகங்களையும் மேம்படுத்தி வருகிறது. கொவி சதுட்ட செயற்றிட்டத்தின் கீழ் சமபோச வசந்த உதானய நிகழ்வு முன்னெடுக்கப்படுகிறது. இதற்கு முன்னர் இடம்பெற்ற நிகழ்வுகள் மாபெரும் வெற்றி கண்டுள்ளன. இந்த ஆண்டு இடம்பெற்ற சமபோச வசந்த உதானய நிகழ்வில் விவசாய சமூகத்தைச் சேர்ந்த சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட அங்கத்தவர்கள் மற்றும் ஆர்வலர்கள் கலந்து கொண்டிருந்தனர். அவுறுது குமரிய மற்றும் அவுறுது குமாரயா போன்ற பாரம்பரிய விளையாட்டுக்களுடன் இந்த ஆண்டு நிகழ்வு கோலாகலமாக நடைபெற்றிருந்தது. சசிந்து ஜயரத்ன மற்றும் பவனி பிரேமச்சந்ர ஆகியோர் சிங்கித்தி அவுறுது குமரயா மற்றும் குமரியவாக கிரீடம் சூட்டப்பட்டதுடன், சமபோச வசந்த உதானய 2016 இன் அவுறுது குமரி பட்டத்தை சினி துலாஞ்சலி வெற்றியீட்டினார். பிளென்டி ஃபூட்ஸ்(பிரைவட்) லிமிடெட் நிறுவனம் கிராமிய விவசாயிகளின் நலனை உறுதி செய்வதில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறது. தேசத்தின் முன்னணி தானிய ஆகாரமான சமபோச உற்பத்திக்கு மூலப் பொருள்களை விநியோகிப்பவர்களாக அவர்களே உள்ளனர். தங்கள் நாளாந்த வாழ்வில் பல இன்னல்களைச் சந்திக்கும் இந்த கிராமிய விவசாயிகளை ஊக்கப் படுத்தும் வகையில் ஆண்டுதோறும் சமபோச வசந்த உதானய நிகழ்வு ஒழுங்கு செய்யப் படுகிறது என பிளென்டி ஃபூட்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளரும்/பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சம்மி கருணாரத்ன தெரிவித்தார்.

பின்தங்கிய ஒருங்கிணைப்புத் திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட உள்நாட்டு விவசாயிகளிடமிருந்து மாத்திரம் பெறப்படும் அரிசி, சோயா, சோளம் மற்றும் பச்சைப் பயறு போன்ற மூலப்பொருள்களினால் சமபோச உற்பத்தி செய்யப்படுகிறது. 4ஜிபி, ஒன் த கோ மற்றும் நியூட்ரி சீரியல் போன்ற போசாக்களிக்கும் உற்பத்திகளை உற்பத்தி செய்யும் பிளென்டி ஃபூட்ஸ் நிறுவனத்தின் முன்னணி வர்த்தகநாமமாக சமபோச திகழ்கிறது.

வணிகம்

பிளென்டி ஃபூட்ஸ்(பிரைவட்) லிமிடெட் நிறுவனத்தின் முன்னணி தானிய ஆகாரமான சமபோச உற்பத்தியில் பயன்படுத்தப்படும் மூலப்பொருள்களை வழங்கி வரும் நாட்டின் கிராமிய விவசாய சமூகத்தினரின் முகத்தில் புன்னகையை உருவாக்கிவரும் மிகவும் எதிர்பார்க்கப்படும் வருடாந்த புத்தாண்டு நிகழ்வாக சமபோச வசந்த உதானய திகழ்கிறது. (த)

# ஹட்ச் நிறுவனத்துக்கு இணையம் மற்றும் தொலைத் தொடர்பாடல் பிரிவுக்கான விருது

இலங்கையில் அதிவிரைவாக வளர்ச்சியடைந்து வருகின்ற 3G வலையமைப்பான ஹட்ச், கடந்த வாரம் வோட்டர்ஸ் எட்ஜில் இடம்பெற்ற Effie விருதுகள் நிகழ்வில், ஆல்வேய்ஸ் இன்ரர்நெற் என்ற தனித்துவமான பிரச்சாரத்துக்காக இணையம் மற்றும் தொலைத் தொடர்பாடல் பிரிவில் Effie விருதின் வெற்றியாளராக முடிசூடியுள்ளது. சர்வா இன்ரகிரேற்றட் விளம்பர நிறுவனத்தின் கருப்பொருளில் படைக்கப்பட்ட இப் பிரச்சாரமானது, நாட்டில் மிகவும் திறன்மிக்க தொலைத் தொடர்பாடல் பிரச்சாரங்களுள் ஒன்றாகவும் தரப்படுத்தப்பட்டுள்ளது.



சந்தைப்படுத்தல் திறனை வெளிக்காண்பிக்கும் சர்வதேச Effie விருதுகள் நிகழ்வு, கடந்த காலங்களில் விளம்பரத் தொழிற்துறையினரது திறனை மதிப்பீடு செய்யும் ஒரு களமாக மாறியுள்ளதுடன், வாடிக்கையாளர் நிறுவனங்களின் வியாபாரத்தின் வெற்றிக்கும் வழிகோலுகின்றது. தற்சமயம் சர்வதேசரீதியாக 6 பிராந்தியங்களிலும், 42 நாடுகளிலும் Effie விருது நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. இலங்கையில் Effie விருதுகள் நிகழ்வு 2008 ஆம் ஆண்டு முதலாக இலங்கை சந்தைப்படுத்தல் கற்கை நிலையத்தின் பங்குடமையுடன் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.

இந்த இனங்காணல் அங்கீகார வெற்றி தொடர்பாக ஹட்ச் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியான திருக்குமார் நடராசா அவர்கள் கூறுகையில், இலங்கை மக்களின் வாழ்வில் குறிப்பிடும்படியான மாற்றத்தை ஏற்படும் முயற்சிகளை ஹட்ச் தொடர்ச்சியாக முன்னெடுத்து வந்துள்ளதுடன், தொடர்ந்தும் வளர்ச்சிகண்டு வருகின்ற எமது வாடிக்கையாளர்களே எமது மகத்தான வர்த்தகநாமத் தூதுவர்களாகத் திகழ்கின்றனர். ஹட்ச் நிறுவனத்தின் புத்தாக்கம்மிக்க ஆல்வேய்ஸ் உற்பத்திக்கு சிலிம் Effie விருது கிடைக்கப்பெற்றமை இந்த உற்பத்தி மற்றும் அது தொடர்பான பிரசாரம் ஆகியவை சந்தையில் ஏற்படுத்தியுள்ள சிறப்பான தாக்கத்திற்கு அங்கீகாரமாக அமைந்துள்ளது. பகுத்தறிவு மட்டத்தில் மக்களை இணைக்கின்ற, உண்மையான மாற்றத்தை ஏற்படுத்துகின்ற எண்ணங்களைப் பாராட்டுவதாக இது அமைந்துள்ளது– என்றார்.

சர்வா இன்ரகிரேற்றட் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான கிறிஜுந்த ஜெயசிங்க குறிப்பிடுகையில், ஹட்ச் நிறுவனத்தின் சார்பில் இம்முறை இரண்டாவது Effie விருதைப் பெற்றுள்ளமையயிட்டு, பெருமை கொள்கின்றோம். வளர்ச்சிப் பெறுபேறுகளை ஈட்டுவது மட்டுமன்றி, விருதுகளையும் வெல்லும் வகையிலான படைப்பாக்கத்திறனை வெளிக்கொணர எமக்கு ஆதரவளிக்கின்றமைக்காக ஹட்ச் அணிக்கு கட்டாயமாக நன்றி தெரிவிக்க வேண்டும்– என்றார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாக்காளர்களின்

நியமிக்கவில்லை.

நடப்பு ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. இந்தப் பதிவு நடவடிக்கைகளின்போது, ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுக்கும், அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றினதும் முகவர்களது பெயர்களை வழங்குமாறு தேர்தல்கள் திணைக்களத்தினால் கட்சிகளின் செயலாளர்களுக்குக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

இதற்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி மாத்திரமே பதிலளித்துள்ளது. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியும், யாழ்ப்பாண நிர்வாக மாவட்டத்தில் உள்ள பத்துத் தொகுதிகளுக்கும் உரிய முகவர்களை நியமித்துள்ளது. இவர்கள் கிராம சேவையாளர் பிரிவுக்குரிய முகவர்களை நியமிக்கவேண்டும். இதுவரை பருத்தித்துறை தொகுதி தவிர்ந்த ஏனைய 9 தொகுதிகளுக்கும் கிராம சேவகர் பிரிவு ரீதியாக முகவர்களை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியும் நியமிக்கவில்லை.

கிளிநொச்சி நிர்வாக மாவட்டத்தில் சகல கிராம சேவையாளர் பிரிவுக்கும் உரிய முகவர்கள் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியினால் நியமிக்கப்பட்டுள்ளனர். அதே போன்று வன்னித் தேர்தல் தொகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தின் பெரும்பான்மையான கிராம சேவையாளர் பிரிவுக்கு முகவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மன்னார் மாவட்டத்துக்குரிய முகவர் மாத்திரம் நியமிக்கப்பட்டுள்ளார். கிராம சேவையாளர் பிரிவுக்கு முகவர்களை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி நியமிக்கவில்லை. வவுனியா மாவட்டத்துக்கு முகவரும் நியமிக்கப்படவில்லை.

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகிய பதிவு செய்யப்பட்ட கட்சிகள் கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது போட்டியிட்டிருந்தன. ஆனால் இந்தக் கட்சிகள் வாக்காளர் பதிவு நடவடிக்கைக்குரிய தங்களது முகவர்களை இதுவரை எந்தவொரு கிராம சேவையாளர் பிரிவிலும் நியமிக்கவில்லை.

இதேவேளை, யாழ்.மாவட்டத்தில் வாக்காளர் எண்ணிக்கை குறைவு காரணமாக நாடாளுமன்ற ஆசனம் 7 இலிருந்து 6 ஆகக் குறைவடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (த-வ-5)

## கிழக்கு

தளங்களுக்குள் நுழைவதற்கு, கிழக்கு முதல்வருக்கு முப்படையினரும் கூட்டாகத் தடை விதித்தனர். அத்துடன், கிழக்கு முதல்வர் பங்கேற்கும் நிகழ்வுகளைப் புறக்கணிப்பதற்கும் படைத்தரப்பு முடிவெடுத்திருந்தது.

இதனால் இலங்கை அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டிருந்தது.

ஜி-7 மாநாட்டில் பங்கேற்பதற்காக ஜப்பான் சென்றிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நாடு திருப்பியதும் இது விடயம் குறித்து முடிவொன்றை எடுப்பார் என்றும், அதுவரை இரு தரப்பினரும் கருத்துகளை வெளியிடக்கூடாது என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டிருந்தார். படைத் தரப்பினருடனும் அவர் ஆலோசனை நடத்தியிருந்தார். கிழக்கு முதல்வர் தரப்பிலிருந்தும் அறிக்கை கோரப்பட்டிருந்தது.

இதையடுத்து, தனது தரப்பு விளக்கத்தை ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்குக் கடிதம் வாயிலாக கிழக்கு முதல்வர் அறிவித்திருந்தார்.

இவ்வாறானதொரு பின்புலத்தில், ஜப்பான் சென்றிருந்த ஜனாதிபதி நேற்று முன்தினம் மாலை நாடு திரும்பி இந்த விவகாரம் பற்றி தீவிரமாக ஆராய்ந்து, தடை உத்தரவை நீக்கும் கட்டளையை பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் பிறப்பித்துள்ளார்.

வெளிநாட்டில் இருந்து வருகை தந்த ஜனாதிபதியும் பாதுகாப்புக்குப் பொறுப்பான அமைச்சருமாகிய மைத்திரிபால சிறிசேன, உடனடியாக செயற்படுத்தும் வண்ணம் முப்படையினரால் விதிக்கப்பட்ட தடை உத்தரவை நீக்கியுள்ளார் என இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்த நிலையில் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும், முப்படையினருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என்று கிழக்கு முதல்வரின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-வ-5)

## ஒருங்கிணைப்புக்

பிரதேச ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவர்களில் ஒருவரான நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா.

வலி. வடக்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று இணைத் தலைவர்களான மாவை சோ. சேனாதி ராசா, மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் தலைமையில் நடைபெற் றது. இதில் தலைமை உரையாற்றும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் தெரிவித்ததாவது:-

நாம் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள். மக்கள் நலத்திட்டங்களை முன்னெடுப்பதற்காகவும் போரினால் பாதிக்கப்பட்ட எமது பிரதேசங்களைக் கட்டியெழுப்புவதற்கும் ஆக்கபூர்வமான முடிவுகளை மேற்கொள்வதற்காகவே ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களை நடத்துகின்றோம்.

சில ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் ஊடகங்களில் இடம்பிடிக்கவேண்டும் என்பதற்காக தேவையற்ற பேச்சுக்களைப் பேசுவதும், அரச அதிகாரிகள் மீது குறை கூறுவதும் தவிர்க்கப்படவேண்டும். யாராவது அரச அதிகாரி மீது ஏதாவது குற்றம் காணப்பட்டால், நீங்கள் எழுத்தில் என்னிடம் தாருங்கள். நாம் அதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வோம். அதைவிடுத்து நீங்கள் அவர்களுடன் முரண்படக்கூடாது. ஊடகங்களும் பொறுப்புணர்வுடன் செயற்படவேண்டும். மக்களுக்குப் பயனுள்ள செய்திகளைப் பிரசுரிக்க வேண்டும். உண்மைக்குப் புறம்பான - தேவையற்ற செய்திகளைப் பிரசுரிக்கக் கூடாது - என்றார். (த-வ-25)

## கிணறுக்கு

பாடசாலை மாணவன் உயிரிழந்துள்ளான் என வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வவுனியா - கள்ளிக்குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதில் அதே இடத்தை சேர்ந்த இராமச்சந்திரன் டினோஜன் (வயது-6) என்ற பாடசாலை மாணவனே உயிரிழந்துள்ளான்.

வவுனியா - கள்ளிக்குளம் பகுதியில் மீள் குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், அங்கு நிறுவனம் ஒன்றினால் மலசல கூடம், கிணறு என்பன கட்டிக் கொடுக்கப்படுகின்றன. இதில் பொதுக் கிணறு அமைப்பதற்காக 8 அடி தோண்டப்பட்ட நிலையில் இருந்த கிடங்கில் அண்மையில் ஏற்பட்ட மழை காரணமாக வெள்ளம் நிரம்பியுள்ளது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் அந்த கிணற்றுக் கிடங்கின் அருகில் விளையாடிக்கொண்டிருந்த குறித்த சிறுவன் தவறுதலாக விழுந்து உயிரிழந்துள்ளான்.

பின்னர் மாலை 5 மணியளவில் சிறுவனின் தாயார் மகனைக் காணவில்லை என்று தேடியும் சிறுவன் கிடைக்காததால் சந்தேகமடைந்து அப்பகுதி மக்களின் உதவியுடன் குறித்த கிணற்றுக் கிடங்கில் தேடுதலை மேற்கொண்டார்.

இதன்போது அந்த கிடங்கின் கற்பாறைக்குள் குறித்த சிறுவன் சிக்கி உள்ளமை கண்டறியப்பட்டது. இதனையடுத்து கிணற்று கிடங்கில் இருந்து மீட்கப்பட்ட சிறுவன் உடனடியாக வவுனியா பொது வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டான் என வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் வைத்தியசாலையில் பரிசோதனை மேற்கொண்ட வைத்தியர்கள் சிறுவன் உயிரிழந்துவிட்டதாகத் தெரிவித்துள்ளனர். இதனை அடுத்து இறப்பு விசாரணையை மேற்கொண்ட வவுனியா திடீர் இறப்பு விசாரணை அதிகாரி கிசோர், சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு வைத்தியசாலை நிர்வாகத்துக்கு அறிவித்தார். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியாப் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர். (த-வ-21)

## தெல்லிப்பழை

இந்தத் தகவலை வெளியிட்டார் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி மருத்துவர் இளங்கோ ஞானியர்.

வலி.வடக்கு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று வலி.வடக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. சுகாதாரம் தொடர்பான விவாதத்தின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்ததாவது:-

கடந்த வரவு-செலவுத் திட்ட முன்மொழிவில் நல்லூரில் புற்றுநோய் வைத்தியசாலை அமைப்பதற்கென 1000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது. பின்னர் நல்லூரில் புற்றுநோய் வைத்தியசாலை இல்லை. தெல்லிப்பழையில் தான் புற்றுநோய் வைத்தியசாலை உண்டென்று தெரிவிக்கப்பட்டதையடுத்து, அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் அந்த நிதி தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டது.

எனினும் குறித்த 1000 மில்லியன் ரூபா நிதி, தற்போது 880 மில்லியனாகக் குறைக்கப்பட்டுள்ளது. அதிலும் 550 மில்லியன் ரூபா நிதி மருத்துவ உபகரணங்களுக்கென்றும், மிகுதி 330 மில்லியன் ரூபா நிதி தென்னிலங்கையிலுள்ள இரு வைத்தியசாலைகளுக்கும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கும் என மூன்று பகுதிகளாகப் பிரிக் கப்பட்டுள்ளது. இது தொடர்பாக சிங்கள மொழி மூலமான கடிதத்தில் எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

எமது வைத்தியசாலையில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவை இயக்குவதற்கு 1000 மில்லியன் ரூபா நிதி முழுமையாகக் கிடைத்தால் மட்டுமே போதுமானதாகவுள்ள நிலையில் அதனை அரசு பகிர்ந்துள்ளது.

மேலும் ஆரம்பத்தில் எம்.ஆர்.ஐ. ஸ்கான் யாழ்.போதனா வைத்தியசாலைக்கும் எமக் கும் என்றிருந்தது. எனினும் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு இருப்பதால் அதனை தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு வழங்குவதாக அறிவித்தனர். இந்த நிலையில், தற்போது அதனை யாழ். போதனா வைத்தியசாலையில் பொருத்துவதற்கான அனுமதி பெற்று வழங்குமாறு சுகாதார அமைச்சு கேட்டுள்ளது.

எனவே, மேற்படி விடயங்கள் தொடர்பாக எமது பிரதேச நலனைக் கருத்தில்கொண்டு மக்கள் பிரதிநிதிகளாகிய நீங்கள்தான் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (த-வ-25)

## வடக்கில்

மாவட்டத்திலேயே பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

இவ்வாறு வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி யூட் தெரிவித்தார்.

இலங்கையில் சிறுநீரகப் பாதிப்பு அதிகமாக உள்ள மாவட்டங்களின் அதிகாரிகளுடனான சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் நேற்றைய தினம் இடம்பெற்றது. இதன் போதே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கில் 5 மாவட்டங்களிலும் சிறுநீரகப் பாதிப்புக்கு உள்ளானவர்கள் உள்ளனர். இவர்களில் வவுனியா மாவட்டத்தில் 2 ஆயிரத்து 855 பேர் இனம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 933 பேருக்குச் சிறுநீரகம் பாதிப்புக்கு உள்ளானமை உறுதி செய்யப் பட்டுள்ளது. இதற்கு அடுத்த படியாக இரண்டாவது இடத்தில் முல்லைத்தீவு மாவட்டம் உள்ளது. அங்கு 432 பேருக்குச் சிறுநீரகம் பாதிப்புக்கு உள்ளானமை கண்டறியப்பட்டுள்ளது. மூன்றாவது மாவட்டமாக யாழ்ப்பாணம் உள்ளது. இங்கு 402 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதே போன்று கிளிநொச்சி மாவட்டத்தில் 77 பேரின் சிறுநீரகம் பாதிக்கப்பட்டுள்ளது.

வடக்கில் மிகக் குறைந்தளவானோர் சிறுநீரகம் பாதித்த மாவட்டமாக மன்னார் மாவட்டம் உள்ளது. இங்கே 29 பேரின் சிறுநீரகம் பாதிக்கப்பட்டுள்ளன என வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் சுட்டிக்காட்டியுள்ளார். (த-வ-5-10)

## வெள்ளிக்கு

இவ்வாறு ஜனாதிபதி ஊடகப் பிரிவு நேற்றிரவு அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கில் இடம்பெயர்ந்துள்ள மக்களை மீளக் குடியேற்றுவது தொடர்பில் காணிகளை இனம்காணும் செயற்பாடுகளை எதிர்வரும் வெள்ளிக்கிழமை நிறைவுக்கு கொண்டுவருமாறு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடம்பெயர்ந்துள்ள மக்களை மீளக்குடியேற்றும் செயற்பாடுகள் தொடர்பான விசேட கலந்துரையாடல், ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தலைமையில் நேற்று மாலை இடம்பெற்றது. இதன்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு பணித்துள்ளார்.

வடக்கில் இடம்பெயர்ந்துள்ள மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பில் அவர்களது காணிகளை விடுவிப்பது தொடர்பான பணிகளை ஜுன் மாத இறுதிக்கு முன்னர் முழுமையாக நிறைவு செய்யவேண்டுமெனவும், இதன்போது ஜனாதிபதி அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

இந்தக் கலந்துரையாடலில் ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.அபேகோன், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி, காணி அமைச்சின் செயலாளர் ஐ.எச்.கே. மகானாம உள்ளிட்டவர்களும் முப்படைகள் மற்றும் அரச அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-வ)

## முதலாம்

தொடர்பான மேலதிக தகவல்களை கல்வி அமைச்சின் அதிகாரபூர்வ இணையத் தளமான http://www.moe.gov.lk க்குச் சென்று பெற்று கொள்ள முடியும்.

மேலும், ஜுன் 30 ஆம் திகதிக்கு பின்னர், எந்தவித விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாதெனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (த-வ-5)

## மரண அறிவித்தல்

திருமதி **சற்குணம் கந்தசாமி**

(ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர் - போதனா வைத்தியசாலை - யாழ்ப்பாணம்)



**பிறப்பு 23.02.1936** — **இறப்பு 28.05.2016**

குப்பிளானைப் பிறப்பிடமாகவும் சங்கானையை வசிப்பிடமாகவும் (தற்காலிக வதிவிடம் வெள்ளவத்தை) கொண்ட திருமதி சற்குணம் கந்தசாமி 28.05.2016 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் கந்தசாமியின் (ஓய்வு பெற்ற தபாலதிபர்) மனைவி ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.06.2016) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு குப்பிளானில் உள்ள அவரது இல்லத்தில் (புன்னாலைக்கட்டுவன் ) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காடாகரம்பை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சகோதர, சகோதரிகள், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(j/1746)
(11)

**077 730 8258, 077 744 8725, 077 844 9525**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இ.போ.ச. பஸ் மீது கல்வீச்சு

கந்தளாயிலிருந்து யாழ்ப்பாணம் வந்த இ.போ.ச. பஸ்ஸின் மீது இனந்தெரியாதோர் கல்வீச்சு மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளனர் என பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் நேற்று இரவு அரியாலைப்பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதன்போது பயணிகள் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்த நிலையில், குறித்த பஸ் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணையைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (வ-103)

# மயிலிட்டி காசநோய் வைத்தியசாலையை சொந்த இடத்தில் மீள இயக்கவேண்டும்

## தெல்லிப்பழை மருத்துவ அதிகாரி வலியுறுத்து

வலி.வடக்கு, மே 31
மயிலிட்டி காசநோய் வைத்தியசாலை, காங்கேசன்துறை மற்றும் பலாலி வைத்தியசாலை களை சொந்த இடங்களில் மீளவும் இயங்கவைக்க நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ளப்படவேண்டும்.
இவ்வாறு கோரிக்கை முன் வைத்தார் தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் ப.நந்தகுமார்.
வலி.வடக்கு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று வலி.வடக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. சுகாதாரம் தொடர்பான விவாதத்தின் போதே அவர் மேற்கண்டவாறு கோரிக்கையை முன் வைத்தார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
தெல்லிப்பழைப் பிரதேசம் மீள்குடியேற்றத்துக்கு முழுமையாக விடுவிக்கப்பட முன்னர், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை உயர்பாதுகாப்பு வலயத்தினுள் இயங்கி வந்தது. மக்கள் இராணுவக் காவலரணில் பதிவை மேற்கொண்டுவிட்டு வைத்தியசாலைக்குச் சென்று வந்தார்கள்.
அதேபோன்று, மக்கள் குடியேறாவிட்டாலும் மயிலிட்டி காச நோய் வைத்தியசாலையைச் சொந்த இடத்தில் இயங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
அத்துடன், காங்கேசன்துறை வைத்திய சாலை காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரியிலிருந்து அண்மித்த தூரத்தில்தான் உள்ளது. நடேஸ்வரக் கல்லூரி எதிர்வரும் 2 ஆம் திகதி சொந்த இடத்தில் மீள இயங்கவைக்கப்பட உள்ளது. பாடசாலை இயங்கத்தொடங்கியதும், இராணுவ சோதனைச் சாவடியை அப்புறப் படுத்துவதாக இராணுவத்தினர் தெரிவிக்கின்றனர் - என்றார். (து-வ-25)

### மருத்துவர்கள்

போதும், வடக்கில் அத்தகைய போராட்டம் எதுவும் நடப்பதற்கான ஏற்பாடுகள் எதுவும் காணப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
வடக்கில் வழமைபோன்று வெளிநோயாளர் சிகிச்சைகள் நடக்கும் என்று மருத்துவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் மருத்துவர்கள் நியமனங்களிலும் இடமாற்றங்களிலும் எந்த வித அரசியல் தலையீடுகளும் இருக்கவில்லை என்று தெரிவித்துள்ள அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம், தற்போதைய அரசின் காலத்திலேயே அரசியல் தலையீடுகள் காணப்படுவதாக குற்றஞ் சாட்டியுள்ளது.
அரசின் இந்த நட வடிக்கைக்கு எதிர்ப் புத் தெரிவித்து இன்று பணிப் புறக்கணிப்புப் போராட்டம் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.
எனினும் வடக்கு மாகாணத்தில் குறித்த அடையாளப் பணிப் புறக்கணிப்புப் போராட்டம் இடம்பெறுவதற்கான எந்தவித சாத்தியங்களோ - ஏற்பாடுகளோ இருக்கவில்லை என்பது தெரியவந்துள்ளது. இந்த நிலையில் வடக்கு மாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளில் வழமை போன்று சிகிச்சைகள் இடம்பெறும் என்று மருத்துவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
(து-வ-4-5)

### சாதாரண

கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார் தெரிவித்துள்ளார்.
பாடசாலை அதிபர்களும், வெளிவாரியாக விண்ணப்பிக்கும் மாணவர்களும் கவனத்தில் எடுக்குமாறும், இது வரை விண்ணப்பிக்கத் தாமதமானவர்கள் தொடர்பில் கவனத்தில் எடுத்து விண்ணப்பிக்குமாறும் அவர் கேட்டுள்ளார். (து-வ-ரி)


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 10 . 05 . 1936
மறைவு 30 . 04 . 2016

**திருமதி பரமேஸ்வரி தனபாலரட்ணம்**

கடந்த (30.04.2016) சனிக்கிழமை இறைபதம் அடைந்த எமது அன்பு அம்மா திருமதி பரமேஸ்வரி தனபாலரட்ணம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகளும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நாளை (01.06.2016) புதன்கிழமை மு.ப 10.00 மணியள வில் அவரின் வீட்டில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் பங்கு பற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்)

25/17, அருளம்பலம் வீதி, அரியாலை.
(அரியாலை நீர் நொச்சிதாழ்வு சித்தி விநாயகர் கோயில் வீதி)

குடும்பத்தினர்
077 791 7731

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி...



அமரர்
**பேரம்பலம் சரவணமுத்து**

தோற்றம் 16.05.1931
மறைவு 02.06.2013

திதி :
அபரபக்க தசமி

ஆண்டுகள் மூன்று ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்
ஆயிரம் சொந்தங்கள் அருகில் இருந்தாலும்
அப்பாவுக்கு ஈடாகுமா? நெஞ்சிருக்கும்வரை உம் நினைவு
என்றும் நிலைக்கும் அப்பா!

அல்வாரை வடக்கு,
கொடிகாமம்.
(J/1753) (11,17)

மகன்
ச.இரவீந்திரன்

## மரண அறிவித்தல்



அன்னை மடியில் 16 . 06 . 1941
அம்பிகை அடியில் 27 . 05 . 2016

**பொன்னம்பலம் பரமலிங்கம் (சிவன்கண்டு)**
**(நயினாதீவு)**

நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 8ஆம் வட்டாரத்தை வதிவிடமாகவும் கொண்ட பொன்னம்பலம்பரமலிங்கம் (சிவன்கண்டு)கடந்த (27.05.2016) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம்-வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற நாகமுத்து-நாகலெட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற ஜெகதாம்பிகையின் அன்புக் கணவரும் வைகுந்தவாசன் (பிரான்ஸ்), பிறைசாந்தி (லண்டன்)ஆகியோரின் அன்புத் தந்தையும் பிரியதர்சினி (பிரான்ஸ்), மனோகரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் தவமணி (பிரான்ஸ்), செல்லம்மா (கனடா), கைலாசநாதன் (பரிஸ்டர்-கனடா),நித்தியலெட்சுமி (பிரான்ஸ்), குகநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற பரமலிங் கம்,சதாசிவம் மற்றும் இராசலெட்சுமி (கனடா).பரமேஸ்வரன் (பிரான்ஸ்) . சரஸ்வதி (ஜேர்மனி) ஆகியோரின் அருமை மைத்துன்ரும் காலஞ்சென்றவர்களான முத்தையா, மதியாபரணம் மற்றும் சண்முகநாதன் (இந்தியா), நாகராசா, மகேஸ்வரி, பரமேஸ்வரி (கனடா), கனகாம்பிகை (கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் காலஞ்சென்றவர்களான இலக்குமிஅம்மா, யோகம்மா மற்றும் தங்கம்மா (இந்தியா), அமுதவல்லி, காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு, முருகேசபிள்ளை, சந்திரசேகரம் ஆகியோரின் அன்புக்குரிய சகலனும் பபிதா, சஜிதா,தீரன் (லண்டன்), கபிசன், வினுஷன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும்ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.06.2016) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சல்லிபரவை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நயினா தீவு - 08,
021 300 1909

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



தோற்றம் 01 01 1945
மறைவு 30 05 2016

**திரு. விஸ்வநாதன் சிவராஜசிங்கம்**
**Mr. Vishvanathan Sivarajasingam**
இளைப்பாறிய கணக்காளர் (Samuel & Sons, Cey-Can Travels, Malayan Trading Co.)

அளவெட்டி கும்பழாவளை பிள்ளையார் கோவிலடியை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. வி.சிவராஜசிங்கம் அவர்கள் 30.05.2016 திங்கட்கிழமை அன்று இறைவனடி எய்தினார். அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வநாதன் லட்சுமி அம்மாள் தம்பதிகளின் மூத்த மகனும் செல்வநாயகியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான செல்லையா வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் சிவதாசன், சிவதர்ஷினி, சிவதர்மினி, கபிலன் ஆகியோரின் தந்தையும் சிவலிங்கதாசன், கோமதி ஆகியோரின் மாமனாரும் நிஷா, சஜா, அக்ஷயன், ரோஹித் ஆகியோரின் பாட்டனாரும் விக்னேஸ்வரி, மங்கையற்கரசி காலஞ்சென்ற சிவானந்தராஜா, சிவஞானசேகரம், காலஞ்சென்ற சிவதாசன், சிவரூபன் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற கந்தையா, சிவநேசன், மனோராணி சிவயோகராணி, ஆதிரை, காலஞ்சென்ற சிவயோகநாதன், வேதநாயகி, தெய்வசிகாமணி, சிற்றம்பலநாதன்,காலஞ்சென்ற ஆனந்தசிகாமணி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் இன்று செவ்வாய்க்கிழமை 2 மணி முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 01.06.2016 புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கிரியைகள் இடம்பெற்று மாலை 5.00 மணிக்கு தகனகிரியைகளுக்காக கல்கிசை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
தகவல்: குடும்பத்தினர்
சி.சிவதாசன் (மகன்)- 33 1/1, Boswell Place, Colombo 06. 011 2507861, 0777 689321


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு ஜூலை 26 வரை கே.பிக்குத் தடை

கொழும்பு, மே 31

விடுதலைப்புலிகள் அமைப்பின் முக்கிய பிரமுகராக இருந்த குமரன் பத்மநாதன் (கே.பி) இலங்கையை விட்டு வெளியேறுவதை எதிர்வரும் ஜூலை மாதம் 26 ஆம் திகதி வரை தடை செய்யும் உத்தரவை மேன் முறையீட்டு நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

மேலும், குமரன் பத்மநாதனை கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்த உத்தரவிடக் கோரி தாக்கல் செய்துள்ள மனுவொன்றை முன் கொண்டு ஆராய்வதற்கு மேன் முறையீட்டு நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

மக்கள் விடுதலை முன்னணி தாக்கல் செய்த மனு, நேற்று விசாரணைக்கு வந்தது. இதன்போது மனுவில் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ள குமரன் பத்மநாதனுக்கு எதிராக பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சட்ட மா அதிபர் மன்றுக்கு அறிவித்தார்.

எனவே, இந்த மனுவை முன் கொண்டு விசாரணை செய்யும் அவசியம் ஏற்படாதென்று சுட்டிக் காட்டிய சட்ட மா அதிபர், அதனை தள்ளுபடி செய்யுமாறு கேட்டிருந்தார்.

எனினும் பொலிஸார் மேற்கொள்ளும் விசாரணைகள் குறித்து தங்களுக்கு திருப்தியில்லாத காரணத்தால், மனுவை முன்கொண்டு விசாரணை செய்யுமாறு தங்களது சட்டத்தரணிகள் நீதிமன்றத்திடம் வேண்டுகோள் விடுத்ததாக மனுவை சமர்ப்பித்துள்ள மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பாக குமரன் பத்மநாதனை கைது செய்யுமாறு சர்வதேச பொலிஸார் பிடியாணை பிறப்பித்துள்ளதாக கூறிய விஜித ஹேரத், குமரன் பத்மநாதன் விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் தலைவராகவும் சிறிது காலம் செயற்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

தற்போதைய நல்லாட்சி அரசும், கும்ரன் பத்மநாதனை பாதுகாக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற காரணத்தினால் பொலிஸ் விசாரணைகள் திருப்தி தரவில்லை என்று அவர் கூறினார்.

எனவே, குமரன் பத்மநாதனை கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்தும் வரை, தாங்கள் சமர்ப்பித்துள்ள மனுவை முன்கொண்டு விசாரணை செய்வது அவசியமென்று நீதிமன்றத்தில் வேண்டுகோள் விடுத்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அந்த வேண்டுகோளை ஆராய்ந்த மேன் முறையீட்டு நீதிமன்றம், வரும் ஜூலை மாதம் 26ஆம் திகதியன்று மனு முன்கொண்டு ஆராயப்படுமென்று கட்டளையிட்டது.

(வ-5)

# துடக்கு கழிவு வீட்டில் தந்தையார் உயிரிழப்பு

## வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற உறவினர் மருத்துவர்களின் கடமைக்கு இடையூறு

யாழ்ப்பாணம், மே 31

துடக்கு கழிவு அன்று தந்தையார் உயிரிழந்ததால், அவரை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற உறவினர்கள், அங்கு போதையில் கடமைக்கு இடையூறு விளைவித்தமை மற்றும் பொது இடத்தில் கலகம் புரிந்த குற்றச்சாட்டில் இருவருக்கு எதிராக வழக்குத் தொடுக்கவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தந்தையாருக்கு மூக்கில் ஒரு வகைச் சவ்வு வளர்வதாகவும், தவிர அன்றைய தினம் அவர் மது அருந்தியிருந்தார் என்றும் இறப்புக்கு அவ்வாறு மது அருந்தியமையும் காரணமாக இருந்திருக்கலாம் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 2 மணியளவில் ஆஸ்பத்திரி வீதி சங்கானையில் இடம் பெற்றுள்ளது. சம்பவத்தில் இரண்டு பிள்ளைகளின் தந்தையான அரியேந்திரன் அஜந்தன் (வயது - 36) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்றும் மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்

இரண்டாவது குழந்தையின் துடக்கு கழிவு நிகழ்வின் போது சிலர் அதிகளவில் மதுபானம் அருந்தியிருந்ததாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். அதன் பின்னர் அவர் நித்திரைக்குச் சென்றிருந்தார். அவர் நித்திரையில் குறட்டை விட்டு தூங்குவது வழமை என உறவினர்கள் கூறினர்.

தூங்கி கொண்டிருக்கும் போது குறட்டைச் சத்தம் வராத காரணத்தால் சந்தேகம் கொண்ட உறவினர்கள் அவருக்கு அருகில் சென்று பார்த்ததாகவும், அதன் போது உடல் அசைவற்றுக் காணப்பட்டுள்ளதென்றும் அதனால் உடனடியாக சங்கானை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வைத்தியசாலையில் பரிசோதனை மேற்கொண்ட போது அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக மருத்துவர்கள் பரிசோதனையின் பின்னர் கூறியுள்ளனர். உயிரிழந்த மேற்படி நபருக்கு கடந்த சில மாதங்களுக்கு முன்னர் மூக்கில் சவ்வு வளர்ந்து வந்த காரணத்தால் சத்திரசி கிச்சைக்கு உட்படுத்தப்பட்டிருந்ததாகவும் மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆனால் குறித்த நபர் உயிரிழந்து விட்டார் என்று கூறியதும், வைத்தியசாலைக்குச் சென்றிருந்த ஏனைய உறவினர்கள் அங்கு மருத்துவர்களின் கடமைக்கு இடையூறாகச் செயற்பட்டதாகக் குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

அதனால் பொலிஸார் அங்கு அழைக்கப்பட்டு நிலைமை சீர் செய்யப்பட்டிருந்தது.

அதன்படி அங்கு போதையில் கடமைக்கு இடையூறு விளை வித்தமை மற்றும் பொது இடத்தில் போதையில் கலகம் விளைவித்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களில் இரண்டு பேருக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்படவுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சடலம் வைத்தியசாலையில் விசாரணை மற்றும் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(ஐ-4,107)

# பலாலி இறங்குதுறை நிர்மாணம்; 25 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

வலி.வடக்கு, மே 31


தேர்தல் தொகுதி அடிப்படையில் ஒவ்வொரு தொகுதிகளுக்கும் மத்திய அரசால் 25 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. காங்கேசன்துறைத் தொகுதிக்கென ஒதுக்கப்பட்ட 25 மில்லியன் ரூபா பலாலி வடக்கு மீன்பிடி சமூக அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

வலி.வடக்கு பிரதேச ஒருக்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று வலி.வடக்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்றபோதே மேற்படி அபிவிருத்திக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதன்போது மயிலிட்டி இறங்குதுறை, காங்கேசன்துறை இறங்குதுறை ஆகியன தற்போது சாத்தியமற்ற நிலையில், பலாலி வடக்கு மீன்பிடி சமூகத்தின் வான் தோண்டுதல், தங்குமிடம், ஏல விற்பனைக் கூடம் ஆகியவற்றின் அபிவிருத்திக்கு மேற்படி நிதியைப் பயன்படுத்துவது என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

(ற- 25)

## மரண அறிவித்தல்



### துரையப்பா சச்சிதானந்தம்

கரந்தன் நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா சச்சிதானந்தம் நேற்று (30.05.2016) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற துரையப்பா-பாக்கியம் தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற நீர்வேலிவடக்கைச் சேர்ந்த சேனாதிராசா - சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகனும், சிவராணியின் பாசமிகு கணவரும், நடனசபேசன், நிரஞ்சனா (கனடா), டர்சிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், பத்தசீதாவின் சகோதரனும் காலஞ்சென்ற கனகலிங்கம், லோகநாதன், சிவஞானவதி, லலிதாராணி, இராஜராஜேஸ்வரி, ஈஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும், யோகரஞ்சிதம் (கொழும்பு), ஸ்ரீஸ்கந் தராசா (ஆஸ்திரேலியா) ஜெயகலா (கனடா), சுரேஸ்கந்தராசா (லண்டன்), சுதர்சினி (ஆஸ்திரேலியா) ஜெயசாந்தன் (கனடா), பிரசாந்தி (ஜேர்மனி) ஆகியோரின் மாமனும், மதூஜன் (கனடா), தனுஷன் (கனடா) டிலோஜன் (கனடா) அஜிந் (ஜேர்மனி) பிரஜித் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.05.2016) செவ்வாய்க்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் கிழக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரந்தன்,
நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அமலேஸ்வரி(வெண்ணிலா) கிருஷ்ணமூர்த்தி



உடுவில் இராமலிங்கம் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அமலேஸ்வரி (வெண்ணிலா) கிருஷ்ணமூர்த்தி 30.05.2016 திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரான்சிஸ் - நேசமலர் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் கிருஷ்ணமூர்த்தியின்(செல்வம் மரக்கறி மொத்த வியாபாரி, மருதனார் மடம் - நெல்லியடி) அன்பு மனைவியும் அனோஜிகா, அருணியா ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.05.2016) செவ்வாய்க் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(V 1754)(14.17)

### பிரான்சிஸ் வின்செற் ரவீந்திரன் (சூட்டா)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கைதடி தெற்கை வசிப் பிடமாகவும் கொண்ட பிரான்சிஸ் வின்செற் ரவீந்திரன் கடந்த (29.05.2016) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிலிப்பையா பிரான்சிஸ்-பிரான்சிஸ் திரேசம்மா தம்பதியரின் மகனும் வின்செற் ரவீந்திரன் நாகலட்சுமியின் அன்புக் கணவரும் நிக்ஷன், நில்சன் ஆகியோ ரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க திருப்பலி இன்று (31. 05.2016) செவ்வாய்க்கிழமை பி.ப 3.00 மணியளவில் யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் இடம் பெற்று பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி தெற்கு,
கைதடி.

தகவல்: குடும்பத்தினர்.
077 959 6726



### கோணராசா பார்த்தீபன் (நவக்கிரி புத்தூர்)

புத்தூர் மேற்கு நவக்கிரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கோணராசா பார்த்தீபன் கடந்த (28. 05.2016) சனிக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் கோணராசா காலஞ்சென்ற லோகேஸ்வரி தம்பதிகளின் இளைய மகனும் பிரதீபன் (பிரான்ஸ்), காலஞ் சென்றவர்களான நிரூபா, மைதிலி மற்றும் வெண்ணிலா, கார்த்தீபன் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரனும் துர்க்கா வின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.05. 2016) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் மு.ப 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நிலாவரை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## இருதயராஜா, ஞானமுருகன் அணிகள் முன்னேறியுள்ளன

கரணவாய், மே 31

இமையாணன் மத்தியின் கால்பந்தாட்டத் தொடரில் மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக் கழகம் மற்றும் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் என்பன வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்களுக்கு முன்னேறியுள்ளன.

**யுத் - ஞானமுருகன்**

யாழ். மாவட்ட ரீதியாக நடத்தப்பட்டுவரும் இந்தத் தொடரின் ஆட்டங்கள் இமையாணன் மத்தியின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. நேற்று முன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் உடுப்பிட்டி யுத் அணியை எதிர்த்து ஞானமுருகன் அணி மோதியது. பிரசாத்தின் உதவியுடன் முதலாவது கோலைப் பதிவுசெய்தது யுத். 19ஆவது நிமிடத்தில் ஜெகதீபன் மூலம் பதிலடி கொடுத்தது ஞானமருகன். மேலதிக மாற்றங்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியில் ஏக ஆதிக்கம் செலுத்த இரு அணிகளும் முனைப்புக் காட்டிய போதிலும், 75ஆவது நிமிடங்கள் வரை கோல்கள் எவையும் பதிவாகவில்லை. 76ஆவது நிமிடத்தில் ஜெகதீசும், 80ஆவது நிமிடத்தில் சுஜித்தும் கோல்களைப் பதிவுசெய்ய முடிவில் 3:1 என்ற கோல் கணக்கில் வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது ஞானமுருகன்.

**சேவியர் - இருதயராஜா**

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் சேன்.சேவியர் அணியை எதிர்த்து இருதயராஜா அணி மோதியது. 14 ஆவது நிமிடத்தில் சென்.சேவியர் அணியின் குமாரதீபன் தமது அணிக்கான முதல் கோலைப் பதிவு செய்தார். இதுவே முதல் பாதியின் முதல் கோலாகவும் இறுதிக் கோலாகவும் அமைந்தது. இரண்டாம் பாதியின் 12 ஆவது நிமிடத்தில் மெலிஞ்சிமுனை அணியின் கிளரன்ஸ் பதிலடி கொடுத்தார். தொடர்ந்து மேலதிக கோல்கள் பதியப்படாத நிலையில் ஆட்டம் சமநிலையில் நிறைவடைந்தது. வழங்கப்பட்ட சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் 2:1 என்ற கோல் கணக்கில் மெலிஞ்சிமுனை இருதயராஜா அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. (ம-108)




## மாகாணமட்ட துடுப்பாட்டத் தொடர்; மானிப்பாய் இந்துவிடம் கிண்ணம்

யாழ்ப்பாணம், மே 31

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்களுக்கான துடுப்பாட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது.

வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி நிர்ணயிக்கப்பட்ட 6பந்துப் பரிமாற்றங்களில் மூன்று இலக்குகளை இழந்து 70 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக நிரேஸ்குமார் 19 ஓட்டங்களையும், கனிஸ்டன் 15 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி அணியின் சார்பில் லாவண்யன், வனஜன், அபிமேனன் மூவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி அணி நிர்ணயிக்கப்பட்ட 6பந்துப் பரிமாற்றங்களில் ஏழு இலக்குகளை இழந்து 65 ஓட்டங்களைப் பெற்று வெறும் 5 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அதிகபட்சமாக லாவண்யன் 17 ஓட்டங்களையும், நிதுசன் 16 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியின் சார்பில் கனிஸ்டன் 2 இலக்குகளையும், சசிகரன், விதுசன், சதுசன் மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். மூன்றாமிடத்தை பளை மத்திய கல்லூரி அணி பெற்றது.

(ம-422-108)

## மிர்சா – கிங்கிஸ் இணை வெளியே

பிரான்ஸ் ரெனிஸ் தொடரிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர் சர்வதேச தரப்படுத்தலில் முதலிடத்திலிருக்கும் இணையான மிர்சா கிங்கிஸ் இணை.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற காலிறுதிக்குத் தகுதி பெறும் ஆட்டத்தில் மிர்சா, கிங்கிஸ் இணையை எதிர்த்து மோதியது கிரிஜெக் கோவா - சினியக்கோவா இணை. இந்த ஆட்டத்தின் முதலாவது செற்றை 3:6 என்று இழந்த சானியா, கிங்கிஸ் இணை இரண்டாவது செற்றையும் 2:6 என்று இழந்ததையடுத்து தொடரில் இருந்து வெளியேற்றப்பட்டது. (ம)





## துர்க்கா அணி சம்பியன்

யாழ்ப்பாணம், மே 31

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தினால் நடத்தப்பட்ட ஓவர் கேம் முறையிலான கரப்பந்தாட்டத்தில் துர்க்கா அணி சம்பியனானது.

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய முன்றிலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் துர்க்கா அணியை எதிர்த்து உடுப்பிட்டி சிவகுமாரன் அணி மோதியது. இதில் துர்க்கா அணி 27:21 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ம-23)

## கொக்குவில் காமாட்சி இறுதியில் புலோலி இளைஞரின் தொடரில்

கரணவாய், மே 31

புலோலி இளைஞர் கழகத்தினால் நடத்தப்பட்டுவரும் துடுப்பாட்டத் தொடரில் கொக்குவில் காமாட்சி விளையாட்டுக் கழகம் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.

புலோலி இளைஞர் கழகத்தின் மைதானத்தில் நடத்தப்பட்டுவரும் இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் கரவெட்டி ஞானம்ஸ் அணியும், கொக்குவில் காமாட்சி அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற காமாட்சி அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து நிர்ணயிக்கப்பட்ட பத்துப் பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 95 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக டிக்சன் 34 ஓட்டங்களைப் பெற்றார்.

96 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய ஞானம்ஸ் அணி 10 பந்துப் பரிமாற்றங்கள் வரை தாக்குப் பிடித்த போதிலும் 6 இலக்குகளை இழந்து 84 ஓட்டங்களைப் பெற்று 11 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. அதிகபட்சமாக றஜீவன் 19 ஓட்டங்களைப் பெற்றார். ஆட்ட நாயகனாக டிக்சன் தெரிவானார். (ம-108)

## காலிறுதியில் முர்ரே

பிரான்ஸ் ரெனிஸ் தொடரில் காலிறுதிக்குத் தகுதிபெற்றுள்ளது பிரித்தானியாவின் நட்சத்திர வீரரான முர்ரே.

பரிஸ் நகரில் தொடர் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் நேற்று இடம்பெற்ற காலிறுதிக்குத் தகுதிபெறும் ஆட்டத்தில் முர்ரேயை எதிர்த்து மோதினார் ஜோன் இஸ்னர். இந்த ஆட்டத்தின் முதலாவது செற்றை 7:6 என்ற புள்ளிகள் போராடி வெற்றிபெற்ற முர்ரே தொடர்ந்தும் தனது ஆதிக்கத்தை பலப்படுத்தி அடுத்த இரு செற்களையும் முறையே 6:4, 6:3 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றி 3:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றார். (ம)



## எறிபந்தாட்டம் ஆரம்பம்

கரணவாய், மே 31

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட எறி பந்தாட்டத் தொடர்கள் நாளை புதன்கிழமை முதல் மூன்று தினங்கள் ஒமந்தை மத்திய கல்லூரியின் மைதானத்தில் இடம்பெறவுள்ளன. (ம-108)

## கலையொளி கிண்ணம் வென்றது

கரணவாய், மே 31

குருநகர் உதயசூரியன் வி.கழகம் நடத்திய துடுப்பாட்டத் தொடரில் இணுவில் கலையொளி விளையாட்டு கழகம் சம்பியனானது.

குருநகர் உதயசூரியன் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்திய இந்தத் தொடரின் இறுதியாட்டம் குறித்த கழகத்தின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. வடமராட்சி சிற்றி ஸ்போட்ஸ்அணியை எதிர்த்து இணுவில் கலையொளி அணி மோதிய இந்த ஆட்டத்தில், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கலையொளி அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 103 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கோகுலன் 57 ஓட்டங்களையும், பிரதீஸ் 14 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் பிரணவன், உமைசுதன் இருவரும் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

104 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய சிற்றி ஸ்போட்ஸ் அணி 6 இலக்குகளை இழந்து 86 ஓட்டங்களைப் பெற்று 17 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அதிகபட்சமாக நிரோ 21 ஓட்டங்களையும் டெஸ்மன் 17 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் தீபன், ஜிவி இருவரும் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக கலையொளி அணியின் கோகுலன் தெரிவானார். (ம-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், மே 31

**கே.ஸி.ஸி.ஸி.யின் தொடர்**

கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகம் நடத்தும் இரு பாலாருக்குமான கூடைப் பந்தாட்டத் தொடரின் லீக் முறையிலான ஆட்டங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆண்களுக்கான ஆட்டத்தில் சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து கே.கே.எஸ். அணி மோதவுள்ளது.

**கழுகுகள் வி.க. தொடர்**

கழுகுகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் நடப்பு வருடத்துக்கான கால் பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வலைப்பாடு ஜெகமீட்பர் அணியை எதிர்த்து நக்கீரன் அணி மோதவுள்ளது.

**திருமகள் வி.க. தொடர்**

அராலி திருமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக



மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் சென். லூட்ஸ் அணியை எதிர்த்து வரணி யுத் அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புங்குடுதீவு சண் ஸ்ரார் அணியை எதிர்த்து கலட்டி ஐக்கிய அணி மோதவுள்ளது.

**இமையாணன் மத்தியின் தொடர்**

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தி வரும் கால் பந்தாட்டத் தொடரில் இன்றுசெவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம் பெறும் முதலாவது ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணியை எதிர்த்து அண்ணா ஸ்ரார் அணியும் பிற்பகல் 4.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் கரவெட்டி நவசக்தி அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் அணியும் மோதவுள்ளன. (ம-23-108)




# இந்து இளைஞர் அணி சம்பியன் சரஸ்வதியின் கரப்பந்தாட்டத்தில்

யாழ்ப்பாணம், மே 31

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் நடத்திய கரப்பந்தாட்டத் தொடரில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி சம்பியனானது.

சரஸ்வதி சனசமூக நிலைய முன்றலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை எதிர்த்து மன்னார் சென்.மேரிஸ் அணி மோதியது. 5 செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தின் முதல் இரு செற்களையும் 25:19, 25:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி கைப்பற்றியது. இதனால் மூன்றாவது செற்றில் சென்.மேரிஸ் அணிக்கு அதிகம் நெருக்கடி ஏற்பட்டது. வாழ்வா? சாவா? நிலைக்கு ஏற்ப ஆட்டத் தில் இழுபறியும் இருக்கத்தான் செய்தது. இருப்பினும் 25:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் அந்த செற் இந்து இளை ஞரின் வசமாக முடிவில் அந்த அணி 3:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது. (ம-23)

# கலைமதி அபார ஆட்டம்

யாழ்ப்பாணம், மே 31

அராலி திருமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் கலைமதி அணி வெற்றிபெற்றுள்ளது.

திருமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய அணி மோதியது. இதில் நவிண்டில் கலைமதி அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)



தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலய கரப்பந்தாட்ட அணிக்கு புலம்பெயர்ந்து ஆஸ்திரேலியாவில் வசிக்கும் குகன் என்பவரால் சீருடைகளும், விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன. (ம-108)

# வென்றது பல்கலை

யாழ்ப்பாணம், மே 31

கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகம் நடத்திவரும் கூடைப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் யாழ். பல்கலைக் கழக அணி வெற்றிபெற்றுள்ளது.

கொக்குவில் இந்துக்கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் கே.கே.எஸ். அணியை எதிர்த்து யாழ். பல்கலைக் கழக அணி மோதியது. இதில் யாழ். பல்கலைக் கழக அணி 81:63 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)

# வென்றது 786

யாழ்ப்பாணம், மே 31

வவுனியா கால்பந்தாட்டச் சங்கம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் 786 அணி வெற்றிபெற்றுள்ளது.


வவுனியா சிறுவர் பூங்கா மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் 786 அணியை எதிர்த்து அல்மதினா அணி மோதியது. இதில் 786 அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

# நல்லூர் சம்பியன்

யாழ்ப்பாணம், மே 31

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான கரம் தொடரில் பெண்கள் பிரிவில் நல்லூர் பிரதேச செயலக அணி சம்பியனானது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நல்லூர் பிரதேச செயலக அணியை எதிர்த்து சங்கானை பிரதேச செயலக அணி மோதியது. முதலாவது ஒற்றையர் ஆட்டத்தை நல்லூரின் சார்பில் களமிறங்கிய துசாயினி 25:0 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார். இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தை நல்லூர் சார்பாக களமிறங்கிய கேசாயினி 25:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார். மூன்றாவது செற்றை நல்லூர் பிரதேச செயலகத்தின் சார்பாக களமிறங்கிய மனோகரி, மிதுசா இணை 25:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி முடிவில் அந்த 3:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)



# செரபோவா மீண்டும் களத்துக்கு திரும்ப முடியாமலும் போகலாம்

**- ரஷ்ய ரென்னிஸ் சம்மேளனம்**

ஊக்கமருந்துச் சோதனையில் தோல்வியடைந்தமையைத் தொடர்ந்து, செரபோவா மீதான விசாரணைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று சர்வதேச ரென்னிஸ் சம்மேளனம் அறிவித்துள்ள நிலையில், அவர் மீண்டும் களத்துக்கு திரும்ப முடியாமலும் போக வாய்ப்புக்கள் உள்ளதாக ரஷ்ய ரென்னிஸ் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

கடந்த ஜனவரியில் இடம்பெற்ற ஆஸ்திரேலிய பகிரங்கத் தொடரிலேயே 29 வயதான செரபோவா மெல்டோனியத்தை பயன்படுத்தியிருந்தது கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. அவர் மீதான விசாரணைகள் ஆரம்பமாகவுள்ள நிலையில், குறித்த விடயம் தொடர்பாக ரஷ்ய ரென்னிஸ் சம்மேளனம் வெளியிட்டுள்ள அறிக்கையின் ஒரு பகுதியிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும் மெல்டோனியயம் கடந்த ஜனவரியிலேயே தடைப் பட்டியலில் சேர்க்கப்பட்டதாகவும், எவ்வளவு காலம் அது உடலில் தங்கியிருக்கும் என்பது இன்னும் தெளிவாகாததால் அவர் மீதான தடை நீக்கப்படவும், அல்லது ஆறு மாதங்கள் அல்லது பன்னிரெண்டு மாதங்கள் தடை செய்யப்படவும் வாய்ப்புக்கள் உள்ளதாகவும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாவது டெஸ்ட்டிலும் இலங்கை வீழ்ந்தது
## இன்னிங்ஸ் தோல்வியிலிருந்து காத்தார் சந்திமல்

இங்கிலாந்து, இலங்கை அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் 9 இலக்குகளால் வெற்றி பெற்ற இங்கிலாந்து தொடரில் 2:0 என்று முன்னிலை வகிக்கிறது. இதனால் மூன்றாவதும் இறுதியானதுமான ஆட்டத்தின் முடிவு எவ்வாறாக அமைந்தாலும் இங்கிலாந்தே கிண்ணத்தைக் கைப்பற்றும் என்பது உறுதியாகியுள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 498-9 என்ற நிலையில் இருந்தபொழுது ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது. அதிகபட்சமாக மொயின் அலி ஆட்டமிழக்காமல் 155 ஓட்டங்களையும், கேல்ஸ் 83 ஓட்டங்களையும், ரூட் 80 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் இலங்கை சார்பாக பிரதீப் 4 இலக்குகளையும், சிறிவர்தன, லக்மல் இருவரும் தலா 2 இலக்குகளையும், கேரத் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை 101 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் பறிகொடுத்தது. அதிகபட்சமாக குசல் மெண்டிஸ் 35 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பாக புரோட் 4 இலக்குகளையும், வோக்ஸ், அன்டர்சன் இருவரும் தலா 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.



இரண்டாவது இன்னிங்ஸிற்காக தொடர்ந்து துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட இலங்கை மூன்றாம் நாள் முடிவில் 309-5 என்றிருந்தது. சந்திமல் 54 ஓட்டங்களுடனும், சிறிவர்தன 35 ஓட்டங்களுடனும் நான்காம் நாளுக்காகக் களமிறங்கினர். மேலதிகமாக ஓர் ஓட்டத்தைத்தானும் சிறிவர்தன சேர்க்காத நிலையில் அன்டர்சனிடம் சிக்கினார். மறுமுனையில் சந்திமல்லை கிரிக்கெட்டின் தாய கத்தால் அசைத்துப் பார்க்க முடியவில்லை. அன் டர்சன், புரோட், ஸ்ரீபன் பின் போன்ற வேகங்கள் சந்திமல் விடயத்தில் கைவிட அலிஸ்டர் குக்கின் நம்பிக்கையாக மொயின் அலி மாறினார். இத்தகைய மாற்றங்களை மூன்றாம் நாளின் இறுதிப்பகுதியில் அலிஸ்டர் செயற்படுத்தியிருக்கலாம். சுழலுக்கு ஒத்துழைக்காத நான்காம் நாளில் மொயின் அலியால் ஓட்டங்கள் வாரி வழங்கப்பட்டதே தவிர வேறொன்றும் இயலவில்லை. கேரத்தும் அசத்தவே செய்தார். சந்திமல் - கேரத் இணை எட்டாவது இலக்குக்காக 116 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். 61 ஓட்டங்களுடன் கேரத்தை வீழ்த்தினார் அன்டர்சன். மீத மிருப்பது எரங்க, லக்மல், பிரதீப் மூவருமே. எனவே ஓர் முனையால் அணி சகல இலக்குகளையும் இழப்பது உறுதி. ஆனால் மறுமுனையால் அதிக ஓட்டங்களைக் குவிக்க வேண்டுமென்று திட்டமிட்டார் சந்திமல். சிக்சர்கள் இல்லாவிடினும் பவுண்டரிகள் இருக்கவே செய்தன. 126 ஓட்டங்களுடன் சந்திமல் ஆட்டமிழந்ததுதான் தாமதம் 475 ஓட்டங்களுடன் இலங்கையின் இரண்டாவது இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது.

முதல் இன்னிங்ஸில் கைகொடுத்தமை கைகொடுக்க இங்கிலாந்துக்கு இலக்காக வெறும் 79 ஓட்டங்கள் மட்டுமே நிர்ணயிக்கப்பட்டது. 11 ஓட்டங்களுடன் சிறிவர்தனவின் பந்தில் கேல்ஸ் ஆட்டமிழந்தாலும், குக்-கொம்டன் இணை கடைசிவரை களத்திலிருந்து வெற்றியைத் தேடிக் கொடுத்தது. குக் 47 ஓட்டங்களுடனும், கொம்டன் 22 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

(ம)

SAAMSON
Experts in English Training
மூன்றே மாதங்களில்
SPOKEN ENGLISH
ஷாம்சனிடம் பழகுங்கள்!
"குழந்தைகள் பேசப்பழகுவதை அடிப்படையாக வைத்து உருவாக்கப்பட்ட ஷாம்சனின் இப்பயிற்சியின் மூலம், வயதுவேறுபாடின்றி எவரும் மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்!"
சனி, ஞாயிறு வகுப்புக்கள் ஆரம்பம்: 04.06.2016
பிரிவு1: 08.00-10.00 பிரிவு3: 01.00-03.00
பிரிவு2: 10.00-12.00 பிரிவு4: 03.00-05.00
ஒவ்வொரு பிரிவிலும் 20 பேருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும்!
பயிற்சிநெறிமுடிவில் டிப்ளோமா சான்றிதழ்.
ஷாம்சன் ஆசிரியரின் Personal Class
வார, வார இறுதி நாட்களில் - காலை: 06.00-7.30 மாலை: 5.30-07.00
SAAMSON
Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை
யாழ். நகரிலுள்ள
பிரபல தனியார்
நிறுவனமொன்றுக்கு
பாதுகாப்பு
உத்தியோகத்தர்கள்
தேவை.
நாளை (01.06.2016)
நாளை மறுநாள்
(02.06.2016)
சுயவிவரக்
கோவையுடன் நேரில்
சமுகம் தரவும்.

இல. 105, இராஜவீதி,
திருநெல்வேலி, கோப்பாய்.
021 4927463

# காக்கையன்குளம் முஸ்லிம் மகா வித்தியாலய துடுப்பாட்ட அணி தடை செய்யப்பட்டது
## ஆள் மாறாட்டமே காரணம்

மாங்குளம், மே 31

மடு காக்கையன்குளம் முஸ்லிம் மகா வித்தியாலய 19 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் கிரிக்கெட் அணியில் வீரர்கள் ஆள் மாறாட்டத்தில் ஈடுபட்டதால் அந்த அணிக்கு விளையாட தடை விதிக்கப்பட்டுத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்ற 19வயதுக்குட்பட்ட பிரிவினருக்கான மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்திலேயே இந்த மாறாட்டம் அம்பலமாகியது. குறித்த ஆட்டத்தில் பளை மத்தியகல்லூரி அணியை எதிர்த்து காக்கையன்குளம் முஸ்லிம் மகா வித்தியாலய அணி மோதவிருந்தது. ஆட்டத்துக்கு முன்பாக நடைபெற்ற ஆவணப் பரிசோதனையில் மடு காக்கையன்குளம் முஸ்லிம் மகா வித்தியாலய அதிபரின் கையொப்பத்துடன் அனுப்பப்பட்டிருந்த வீரர்களின் விவரம் பரிசோதிக்கப்பட்டது. இதில் ஒரு வீரர் வைத்திருந்த அடையாள அட்டைக்கும் அவரது முகத்துக்கும் இடையே சந்தேகத்துக்கு உரிய மாறுதல்கள் இருந்தமையை அடுத்து அந்த வீரரிடத்தில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் அவர் ஆள் மாறாட்டத்தில் ஈடுபட்டது தெரியவந்ததையடுத்து அந்த அணிக்கு குறித்த ஆட்டத்தில் தடை விதிக்கப்பட்டது.

குறித்த சம்பவங்களை வடமாகாண உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் சத்தியபாலன் உறுதிப்படுத்தினார்.

மடு காக்கையன்குளம் முஸ்லிம் மகா வித்தியாலய அதிபரின் தொலைபேசி இலக்கம் என, மன்னார் கல்வி வலய உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் அமல்ராஜால் தரப்பட்ட இலக்கத்துடன் தொடர்புகொண்ட வேளையில் குறித்த தொலைபேசி இலக்கம் செயலற்று இருந்தது.

(ம-422)

விரிவுரைகள் ஆரம்பம்
கொழும்பு பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பக்கற்கை நெறிக்கான 1ம், 2ம், 3ம், கல்வி ஆண்டுக்கான விரிவுரைகள் யூன் 5 ஞாயிறு காலை 8 மணிக்கு யாழ் பல்கலைக்கழகத்திற்கு அருகாமையிலிலுள்ள MCS தகவல் தொழில் நுட்ப வளாகத்தில் ஆரம்பமாகின்றன. க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் நேரடியாகவும் சித்தியடையத் தவறியோர் கொழும்பு பல்கலைக் கழகத்தினால் நடாத்தப்படும் அடிப்படைத் தகவல் தொழில்நுட்ப கற்கைநெறியில் சித்தியடைவதன் மூலமும் மேற்படி பட்டப்படிப்பை தொடரலாம். எந்தவொரு பல்கலைக்கழக மாணவர்களும் தகவல் தொழில்நுட்ப கற்கை நெறியை மேலதிகமாக பயில்வதற்கு பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது. மேலதிக விபரங்களைMCS தகவல் தொழில் நுட்ப வளாகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
முற்பதிவுகளிற்கும் புலமைப்பரிசில் விபரங்களிற்கும் உங்கள் பெயர் பிறந்ததிகதி என்பவற்றை 772395895ற்குsms செய்யவும்.
-இணைப்பாளர், BIT கற்கை நெறி, தொ.பே.77239589

சமையலாள் தேவை
கம்பளையில் உள்ள யாழ்ப்பாண உணவகத்துக்கு
கடலுணவுகள், புரியாணி, மரக்கறி சமையல் வேலை தெரிந்தவர் ஆண்/ பெண் தேவை.
071 924 4126

வங்கியியற் கற்கை நெறி
CBF / IABF, DBF / DABF
இக் கற்கை நெறிகளுக்கான அனைத்துப் பாடங்களும் ஒரே இடத்தில் எமது வழமையான ஆசிரியர் குழாத்தால் கற்பிக்கப்படும்.
Note :- இதுவரை காலமும் கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை அருகில் இயங்கிய வகுப்புக்கள் அனைத்தும் யாழ் நகர் மத்தியில்.
தொடர்பிற்கு: K. ஸ்ரீபரன் (கணக்கீட்டு ஆசான்)
T.P: 077 459 8430
ஆஸ்பத்திரி வீதி, சத்திரச்சந்தி (சிக்னல் சந்திக்கு) அருகில் யாழ்ப்பாணம்.

# விக்டோரியா - பண்டத்தரிப்பு பெண்கள் இறுதியில் இன்று பலப்பரீட்சை

மாங்குளம், மே 31

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான இறுதியாட்டத்தில் சுழிபுரம் விக்டோரியா கல்லூரி அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி இன்று பலப்பரீட்சை நடத்தவுள்ளது. வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று காலை 9 மணியளவில் இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது.

இறுதியாட்டத்தைத் தொடர்ந்து நடைபெறவுள்ள மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் கிளிநொச்சி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து வவுனியா புதுக்குள[ம்] மகா வித்தியாலய அ[ணி] பலப்பரீட்சை நடத்தவுள்ள[து].

(ம-42

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.05.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.